விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 11 வியாழக்கிழமை (27.11.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 343

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# மாவீரர் தினம் இன்று



- வீதிகள் எங்கும் இராணுவம்.
- ஆலயங்களில் பூசைக்குத் தடை.
- புலனாய்வு முற்றுகையில் கட்சி அலுவலகங்கள்.
- சாவு வீட்டு வெடிக்கும் இராணுவம் ஓட்டம்.
- பதற்ற நிலையில் வடக்கு.

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் நாள் தமிழர் வாழும் தேசம் எங்கும் இன்று அனுஷ்டிக்கப்படுகின்ற நிலையில் யாழ்ப்பாணம் உட்பட வடக்கு முழுவதும் இராணுவமும் பொலிஸாரும் புலனாய்வுப் பிரிவினரும் குவிக்கப்பட்டு தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

போர்க் காலங்கள் போல் வீதிகள் எங்கும் இராணுவம் நிலை நிறுத்தப்பட்டு வீதிகளில் செல்வோர் சோதனைக்குட்படுத்தப்பட்டும் உள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் வாரம் கடந்த 21ஆம் திகதி ஆரம்பித்து இன்றையதினம் மாவீரர் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையிலேயே பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி, பலாலி வீதி, ஏ9 வீதி, கஸ்தூரியார் வீதி, மானிப்பாய 23 ஆம் பக்கம் பார்க்க....

## பிரபாகரனைக் காப்பாற்ற அமெரிக்கா முனைந்தது


(கொழும்பு)

போரின்போது விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை காப்பாற்ற அமெரிக்கா முயற்சித்தாக இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கையின் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, அமெரிக்காவும் 24 ஆம் பக்கம் பார்க்க....

## இந்தியாவின் நட்பு பெரியது

மோடியுடனான சந்திப்பின் பின் மகிந்த உரை



(காத்மண்டு)

பிரதமர் நரேந்திர மோடியின் வெளிநாட்டுக் கொள்கைக்கு மதிப்பளித்தே மரண தண்டனை பெற்ற ஐந்து இந்திய மீனவர்களையும் விடுவித்ததாக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சார்க் மாநாட்டில் பங்கேற்கும் அவர் நேற்று 24 ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.பல்கலைக்கழகத்தை சூழ இராணுவ புலனாய்வு கண்காணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தினை சூழ இராணுவமும் புலனாய்வுப் பிரிவினரும் நிலை நிறுத்தப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்றையதினம் யாழ்.பல்கலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 60ஆவது பிறந்த தினம் மாணவர்களால் அனுஷ்டிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியதை அடுத்து அங்கு மேலும் பதற்றம் அதிகரித்து காணப்பட்டது.

இன்றையதினம் பிற்பகல் 6.05 மணியளவில் மாணவர்கள் யாழ்.பல்கலையில் விளக்கேற்றி விடலாம் என்ற அச்சம் காரணமாக நேற்றிரவும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

யாழ்.பல்கலையின் முன்புற வாயில் மற்றும் பின்புற வாயில் பல்கலைக்கழகத்திற்குள் செல்லும் அனைத்து 23 ஆம் பக்கம் பார்க்க....

# இறுதி போர்க்குற்ற விசாரணைக்கு இலங்கை ஒத்துழைக்க வேண்டும்



## ஐ.நா.ஆணையாளர் மீண்டும் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுககு இலங்கை அரசாங்கம் ஆக்கபூர்வமான முறையில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்என்று ஐ.நா மனிதவுரிமைகள் ஆணை 23 ஆம் பக்கம் பார்க்க....

## பல இடங்களில் கன மழை

(கொழும்பு)

நாட்டின் பல மாவட்டங்களிலும் தொடர்ந்தும் நிலவி வரும் மழையுடன் கூடிய வானிலையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் சீரற்ற வானிலையினால் பாடசாலை மாணவர்கள், கடமைக்குச் செல்வோர் என அனைத்துத் தரப்பினரும் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றனர்.


முல்லைத்தீவில் கடும் மழையுடன் கூடிய குளிர்கால நிலை நிலவுகின்றது. அத்து 23 ஆம் பக்கம் பார்க்க....

## பாருக் எம்.பி

### ஐ.தே.கவில் இணைவு

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்ஹுனைஸ பாருக் நேற்று புதன்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொணடுள்ளார். 24 ஆம் பக்கம் பார்க்க....



தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் 60 ஆவது பிறந்ததினம் நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில் கொண்டாடப்பட்டதாக ஊடகங்களுக்கு கிடைத்துள்ள புகைப்படம்.

## உதய பெரேராவுக்கு திடீர் இடமாற்றம்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா 23 ஆம் பக்கம் பார்க்க....

## மாவீரர்களைப் போற்றி யாழில் துண்டுப் பிரசுரம்



(யாழ்ப்பாணம்) வெஞ்சமரில் செங்குருதி சிந்தி இன்னுயிர் ஈந்த மாவீரர்களே! 23 ஆம் பக்கம் பார்க்க....

காரைநகர் - கொழும்பு அதிசொகுசு பேருந்து

ஈஸ்வரன் எக்ஸ்பிறஸ் : 87-782

அறிமுகக் கட்டணம் : 1300/=

| | |
|---|---|
| காரைநகர் | - 6.00 |
| சித்தன்கேணி | - 6.15 |
| சங்கானை | - 6.30 |
| மானிப்பாய் | - 6.45 |



| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | - 7.00 |
| சாவகச்சேரி | - 7.45 |
| கொடிகாமம் | - 8.00 |
| கிளிநொச்சி | - 9.00 |

கொழும்பு வெள்ளவத்தை - அதிகாலை 5.00

ஈஸ்வரன் எக்ஸ்பிறஸ்

இல.69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இல.201 V, டாம் வீதி, கொழும்பு - 12.

Hotline : 0777674119

ஆசனப்பதிவு யாழ்ப்பாணம் 0777806573, 0777806574

ஆசனப்பதிவு கொழும்பு 0777806583

பயணிகளின் பயணம் பெறுமதியானது, பாதுகாப்புக்கு உத்தரவாதம். தரம் நிர்ணயிக்கப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற ஈஸ்வரன் எக்ஸ்பிறஸ்

ஒவ்வொரு பயணிகளுக்கும் பயணத்தின் போது தங்கள் உடமைகளுக்கு பாதுகாப்பான பெட்டகம் வழங்கப்படும்

(C-9187)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வலம்புரியின் செய்திக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை முழுவதிலும் பொலிஸ் சுற்றறிக்கைக்கு அமைவாக நடமாடும் சேவை இடம் பெற்று வருகின்றது. மக்களுக்கு இலகுவான முறையில் சேவையை வழங்கும பொருட்டே இம்முறையும் நடமாடும் சேவை யாழ்.மாவட்டத்தில் நடத்தப்படுகின்றது.

இதில் வேறு எந்த உள்நோக்கமும் இல்லை என யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கே.எஸ்.பி.ரொஹன் டயஸ் தெரிவித்துள்ளார்.

வலம்புரி பத்திரிகையில் 21.11.2014 அன்று 2-ம் பக்கத்தில் பொலிஸாரின் ஏற்பாட்டில் விசேட நடமாடும் சேவை என்ற தலையங்கத்தின் கீழ் வெளியான செய்தி தொடர்பில் யாழ்.பிரதிப்பொலிஸ்மா அதிபர்ரொஹான் டயஸ் அனுப்பி வைத்துள்ள மறுப்பறிக்கையில்,

இலங்கை முழுவதிலும் பொலிஸ் சுற்றறிக்கைக்கு அமைவாக பொலிஸ் நடமாடும் சேவை நடத்தப்பட்டு வருவதுடன் யாழ்.மாவட்டத்தில் இதற்கு முன்னரும் பல தடவைகள் பொலிஸ் நிலையங்கள் ஊடாக நடமாடும் சேவை நடத்தப்பட்டு பொது மக்களுக்குரிய சேவையாகிய தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்வதற்கும் சாரதி அனுமதி பத்திரம், பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான பிரதிகள் வழங்குதல், இலவச கண் பரிசோதனை, மூக்குக் கண்ணாடி வழங்கல் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதே போன்றே இம்முறையும் பொலிஸ் நடமாடும் சேவையினை நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதே தவிர வேறு எந்த உள்நோக்கமும் இல்லை என்பதை தெரிவித்து கொள்கின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ


பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில்
இவ்வாண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
156 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த
செல்வன் சு.பிரவீன் அவர்களையும்,




(8442)

100 புள்ளிகளுக்கு மேல்பெற்ற மாணவர்கள்
செல்வன் த.கவின் 127 புள்ளிகள்
செல்வன் ஐ.லக்சன் 127 புள்ளிகள்
செல்வி க.சுகிர்தா 115 புள்ளிகள்
செல்வி பி.பிரவீனா 113 புள்ளிகள்
இவர்களையும் இவர்களது வெற்றிக்கு அயராதுழைத்த
ஆசிரியை திருமதி க.ஜெயராணி, அதிபர் திரு.பா.சிவராசா
அவர்களையும் பாடசாலைச் சமூகம் பாராட்டி வாழ்த்துகின்றது.


# போராளிகள், மாவீரர் குடும்பங்களின் நலன்களை பேண முன்வருவோம்

## வலி.வடக்கு பிரதேச சபை உப தவிசாளர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

புலம்பெயர் தமிழர்கள் வெறும் பதவி கனவுகளுக்காக உழைக்கும் அரசியல் வாதிகளினை நம்பி நிற்காமல் அல்லலுறும் பேராளிகள் மற்றும் மாவீரர் குடும்பங்களின் நலன்களுக்காக- வாழ்வு மேம்பாட்டுக்காக செயற்பட மாவீரர் தினமான இன்றைய தினம் செயற்பட முன்வர வேண்டுமென வலி.வடக்கு பிரதேச சபையின் உப தலைவர் எஸ்.சஜீவன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகெங்கும் தமிழ்பேசும் மக்கள் வாழும் இடங்களில் மாவீரர் நாள் உணர்வெழுச்சியுடன் கொண்டாடப்படும் இவ்வேளையில், புலம்பெயர் வாழ் தமிழ் மக்களுக்கு ஒரு முக்கியமான செய்தியை தெரிவிக்க வேண்டியதும் கடமையாகின்றது.

புலத்தில் மாவீரரை. நினைவுகூரும் இச் சந்தர்ப்பத்தில் தாயகத்தில் இன்னமும் நெருக்கடிகள், அழுத்தங்கள் மற்றும் பல்வேறு இன்னல்களை ஏதிர்கொண்டு அங்கவீனர்களாகவும், ஆதரவற்றவர்களாகவும் எதிர்கால நம்பிக்கைகள் ஏதுமற்ற நிலையில் வாழும் பேராளிக்ளையும் மாவீரர்தம் குடும்பங்களையும் நினைவில் கொண்டு அவர்களின் வாழ்வியல் மேம்பாட்டுக்கான உதவிகளையும், செயற்பாடுகளையும் புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் தமிழ் உறவுகள் மேற்கொள்ளமுன் வர வேண்டிய தமிழ்த் தேசியப் பொறுப்பினை உணர்ந்து செயற்பட வேண்டும் என்பதை உணர்வுபூர்வமாக சிந்திக்க வேண்டும்.

எமது அரசியல்வாதிகள் வெறுமனே தத்தம் அரசியல் அபிலாஷைகளை இலக்கு வைத்து புலம்பெயர் மக்களின் நிதிகளை பெற்று செய்யும் பிரசார நோக்கிலான உதவிகள் அளப்பரிய தியாகங்களை செய்துவிட்டு ஆதரவின்றி தவிக்கும் மக்களுக்கு எதுவிதத்திலும் உதவப் போவது கிடையாது என்பதை தொலைநோக்குடன் புரிந்து கொள்ளல் வேண்டும்.

இச்சமயத்தில் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் முன் ஒருமுறை வெளி நாட்டு பத்திரிகையாளர் ஒருவர் தமிழீழம் அமையும்போதுஅந்த நாட்டில் நீங்கள் எத்தகைய பதவிப் பொறுப்பினை ஏற்பீர்கள் எனக் கேட்டபோது மாவீரர் மற்றும் போராளிகளின் நலன் பேணும் பொறுப்பினை எடுத்து அவர்களின் எதிர்காலத்திற்காக செயற்படுவேன் என்று கூறிய வார்த்தைகளை இங்கு நினைவுபடுத்துதல் அவசியமாகின்றது.

எனவே அல்லலுறும் போராளிகள் மற்றும் மாவீரர்களின் குடும்ப நலன்களுக்காக-வாழ்வு மேம்பாட்டுக்காக நாம் அனைவரும் சிந்தித்து செயற்பட முன்வர வேண்டும் என அவர் தெரிவித்தார். (செ-4)


SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
333, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-8284) (சீ-9129)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/புனித ஜோன் பொஸ்கோ
வித்தியாலயத்தில்
2014ம் வருட 5 ஆம் ஆண்டு
புலமைப்பரிசில் பரீட்சையில்
151 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த
பிறவுண் வீதியைச் சேர்ந்த
திரு.திருமதி ஆனந்தநடேசன் விஜயகலா
தம்பதிகளின் ஏக புதல்வன்
ஆ.சரவணகரன்
அவர்களைப் பாராட்டி மேன்மேலும் நிறைந்த
கல்விச் செல்வத்தைப் பெற்று உயர் பதவியை அடைய
வாழ்த்துவதுடன் அவருக்கு கற்பித்த அதிபர் ஆசிரியர்களையும்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
தயா வெளியீடு
வெற்றி இலக்கு
(ஆசிரியர் குழாம்)
தயா அச்சகம்
Best Wishes
வாழ்த்துவோர்:
மாமா வி.தயாபரன்
குடும்பத்தினர்
(8446)


# வலிகாமம் தெற்கு பிரதேச சபை
# වලිකාමම් දකුණ ප්‍රාදේශීය සභාව
# VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA CHUNNAKAM

*My No :Np/14/41(15)/01/Tender/2015* — *Date: 26.11.2015.*

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை சுன்னாகம் 2015-ம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள, கருவாட்டுக் கடைகள், என்பவற்றை 01.01.2015 தொடக்கம் 31.12.2015-ம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல | விபரம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் வரி தவிர) | மாத வாடகை (வற் வரி தவிர) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம்** | | | | |
| 01 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் வெட்டுமிடம், மீன் சந்தை வாகன தரிப்பிடம் உட்பட) | 2000.00 | 30000.00 | 8140550.00 | |
| 02 | உடுவில் கீளிச் சந்தை | 1000.00 | 10000.00 | 180000.00 | |
| 03 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை- 01 | 1000.00 | 10000.00 | 1710700.00 | 250.00 |
| 04 | சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை- 02 | 750.00 | 7500.00 | 232750.00 | 250.00 |
| 05 | கருவாட்டுக் கடை இல 03 | 750.00 | 7500.00 | 39500.00 | 250.00 |
| 06 | முட்டைக் கடை இல 04 | 750.00 | 7500.00 | 54650.00 | 250.00 |
| 07 | கோழிக்கடை இல 06 | 750.00 | 7500.00 | 228500.00 | 250.00 |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 01 | இணுவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை (கொத்தியாலடி கொல்களத்தில் ஆடுகள் வெட்டப்படுதல் வேண்டும்) | 500.00 | 5000.00 | 74000.00 | 250.00 |
| 02 | மருதனார்மடம் சந்தை பொது மலசலகூடம் | 500.00 | 5000.00 | 15000.00 | |

1.கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் .- 27.11.2014–11.12.2014 பி.ப 2.00 மணி வரை
2.கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளுதல்-12.12.2014 நண்பகல் 12.00 மணி வரை
3.கேள்விப் பத்திரம் திறக்கப்படுதல் -12.12.2014 பி.ப 2.00 மணிக்கு

கேள்வி சம்பந்தமான மேலதிக விபரங்களை 2014.10.28ம் திகதிய உதயன் தினக்குரல் வலம்புரிப் பத்திரிகைகளிலும் எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

தி.பிரகாஷ்,
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.

(சீ-9184)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காமராஜர், மூப்பனார் படத்துடன் ஜி.கே.வாசன் கட்சி கொடி அறிமுகம்

தமிழகத்தில்காங்கிரஸ் கட்சியில் இருந்து தன் ஆதரவாளர்களுடன் விலகிய முன்னாள்மத்திய அமைச்சா ஜி.கே.வாசன்புதிய கட்சி தொடங்கப் போவதாக அறிவித்திருந்தார்.

புதிய கட்சியின் தொடக்க விழா மாநாடு நாளை மறுநாள் (வெள்ளிக்கிழமை) திருச்சியில் நடைபெற உள்ளது. இதற்காக பிரமாண்ட மேடை அமைக்கப்பட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஜி.கே.வாசன் தொடங்கும் புதிய கட்சியின் பெயர் திருச்சி மாநாட்டில் அறிவிக்கப்பட உள்ளது. அந்த கட்சிப் பெயரை டெல்லியில் உள்ள தேர்தல் ஆணையிடத்திடம் அலுவலகத்தில் கடந்த வாரம் வாசன் ஆதரவாளர்கள் கொடுத்தனர்.

தமிழ் மாநில காங்கிரஸ், தமிழ் மாநில மக்கள் காங்கிரஸ், தமிழ் மாநில மறுமலர்ச்சி காங்கிரஸ் என்று மூன்று பெயர்கள் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் ஒரு பெயரை இன்று தேர்தல் கமிஷன் அதிகாரிகள் தேர்வு செய்து கொடுக்க உள்ளனர். அந்த பெயரை வாசன் திருச்சி மாநாட்டில் வெளியிடுவார்.

புதிய கட்சியின் கொடியையும் மாநாட்டில் அறிமுகம் செய்ய வாசன் முடிவு செய்திருந்தார். ஆனால் மாநாட்டுக்கு வரும் தொண்டர்கள் புதிய கட்சி கொடியை ஏந்தி வர வேண்டும் என்று பலரும் வாசனிடம் தெரிவித்தனர். அதை ஏற்று புதிய கொடி சென்னையில் நேற்று அறிமுகம் செய்ய ப்படும் என்று வாசன் அறிவித்தார்.

அதன்படி வாசன் கட்சியின் புதிய கொடி அறிமுக விழா நேற்று (புதன்கிழமை) காலை 10 மணிக்கு சென்னை சாந்தோம் சர்ச் எதிரில் உள்ள கம்யூனிட்டி ஹாலில் நடந்தது. கட்சியின் மூத்த தலைவர்கள் சூழ புதிய கொடியை ஜி.கே.வாசன் அறிமுகம் செய்தார்.

புதிய கொடி ஆரஞ்சு, வெள்ளை, பச்சை ஆகிய மூவர்ணங்களைக் கொண்டுள்ளது. அதில் காமராஜர், மூப்பனார் படங்கள் பொறிக்கப்பட்டுள்ளது.

## பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்

JSAC

யாழ். சமூக செயற்பாட்டு மையம்

(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

16 2014

வறுமையும், வன்முறையும் தாக்குவது பெண்களையே. வறுமையை ஒழிப்போம், வன்முறையை தடுப்போம். சமத்துவமான சமுதாயத்திற்காய் ஒன்றுபட்டு உழைப்போம்.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி சிவநேசன்



புத்தூர் கிழக்கு குமாரசாமி வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அன்னலட்சுமி சிவநேசன் நேற்று (26/11/2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா- சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி- பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் சிவநேசனின் (சட்டத்தரணி) பாசமிகு மனைவியும் தபோதரன் (கனடா), ரமேஸ்தரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் யசிதா(கனடா) அவர்களின் மாமியாரும் கியாஷனின் அப்பம்மாவும் கந்தராசா, கருணானந்தம், பஞ்சலிங்கம் (கனடா), பரமசிவம்(கனடா), ஜெயலக்சுமி (ஆசிரியர், புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (30.11.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அந்திரனை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(8439)

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

தகவல்
கணவன் சி.சிவநேசன் (சட்டத்தரணி)
0773754243, 0770317614, 0213219848

## பெயர் மாற்றம்

உடுப்புக்குளம் அளம்பில் முல்லைத்தீவில் வசிக்கும் சூசைதாஸ் கமலநாயகி என்று இதுவரை வழங்கப்பட்டு வந்த எனது பெயரை இன்று தொடக்கம் சூசைதாஸ் அகஸ்ராயூடி கமலநாயகி என மாற்றம் செய்துள்ளேனென்பதனையும்தொடர்ந்து இப்பெயரையே சகல ஆவணங்களிலும் பயன்படுத்துவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

(8437) உண்மையுள்ள
சூசைதாஸ் அகஸ்ராயூடி கமலநாயகி


## கவிதை நூல் வெளியீடு

(கொழும்பு)

யாழ் இலக்கியக்குவியத்தின் ஏற்பாட்டில் வேலணையூர் தாஸின் மழைக் காலக்குறிப்புக்கள் எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 29 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் எழுத்தாளர் நிலாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன் போது நூல் வெளியீட்டுரையினை கவிஞர் கருணாகரன் நிகழ்த்தவுள்ளதுடன் நூல் மதிப்பீட்டுரையினை தி.செல்வமனோகரன், கு.ரஜீவன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். நூலின் முதற் பிரதியினை க.நவரத்தினம் பெற்றுக்கொள்ளவுள்ளார். (இ-51)

## ௯ ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
03.03.1945

இறப்பு
07.12.2005

அமரர் மாணிக்கம் சின்னராசா
திதி:-27/11/2014

ஆண்டுகள் ஒன்பது கழிந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திரவிய பவனம்
மனோகரா,
அல்வாய். (8429)

குடும்பத்தினர்

## வீடு வாடகைக்கு தேவை

சமூக சேவை நிறுவனம் ஒன்றிற்கு யாழ். நகருக்கு அண்மையில் வாகன தரிப்பிடம் Hall மற்றும் அதிக அறைகளுடனான வீடு ஒன்று வாடகைக்கு தேவை. (8432)

தொடர்புகளுக்கு:-0776549303

## பெயர் மாற்றம்

அச்செழு வடக்கு நீர்வேலியில் வசிக்கும் நாகன் பொன்னி என்று இதுவரை வழங்கப்பட்டு வந்த எனது பெயரை இன்று தொடக்கம் நாகன் அசுபதி என மாற்றம் செய்துள்ளேன் என்பதனையும் தொடர்ந்து இப்பெயரையே சகல ஆவணங்களிலும் பயன்படுத்துவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(8436) உண்மையுள்ள நாகன்-அசுபதி.

## இராசி பலன்

27.11.2014
(கார்த்திகை 11, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
பஞ்சமி முற்பகல் 11.12 மணிவரை
உத்தராடம் முற்பகல் 10.16 மணிவரை
இராகுகாலம் 11.42-3.12 மணிவரை
சுபநேரம் 7.42-9.12 மணிவரை
சஷ்டி விரதம்

வளவன்

**மேடம்:** யோசிக்காமல் செய்த வேலைகளில் கூடவெற்றி பெறுவீர்கள், வருங்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**இடபம்:** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் நிலவிவந்த சொல் யுத்தம் முடிவுக்கு வரும், பயணங்களால் நன்மையுண்டு.

**மிதுனம்:** எந்தக் காரியத்திலும் நிதானமாகச் செயற்படுவது நல்லது, குடும்ப பொறுப்புக்கள் கூடும், சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம், போசன சுகமுண்டு.

**கடகம்:** நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நெருங்கிய நட்பு இடம் பெறலாம், தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், வருமானம் திருப்திதரும்.

**சிம்மம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், சிக்கனத்தைக் கடைப்பிடிக்க முற்படுவீர்கள்.

**கன்னி:** அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், நீண்ட நாட்களாக தள்ளிப்போட்ட காரியமொன்றை திடீரெனச் செய்து முடிப்பீர்கள், வியாபார விருத்தியுண்டு.

**துலாம்:** செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பணச்செலவுகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பொதுவாழ்வில் புகழ்கூடும், சகோதர வழியில் உதவிகள் கிடைக்கலாம், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**தனுசு:** நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மகரம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய காரியம் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கலாம்.


**கும்பம்:** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்யலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**மீனம்:** வருமானம் திருப்திகரமாக அமையும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ஆதரவு தருபவர்களின் எண்ணிக்கை கூடும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நம் சமூகம் தொலைக்கும் சமூகமயமாதல்

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி பரிசளிப்பு, நிறுவுனர் நினைவு தினத்தில் ஆற்றிய நினைவுப் பேருரை...**



இ.சர்வேஸ்வரா
உதவிப்பதிவாளர்
மருத்துவபீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

...நம் யாழ்ப்பாண மண்ணின் தனித்துவ அடையாளங்களுள் ஒன்றான கறுத்தக் கொழும்பான் மாம்பழத்தை அது காயாக இருக்கும் நிலையில் சுவைத்துப் பார்த்து அதன் தரத்தை எடைபோடுவது என்பது மிகவும் முட்டாள்தனமான செயல் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நாவினால் ஏற்றுக்கொள்ள முடியாத புளிப்புச் சுவையும் நார்த்தன்மையும் கொண்ட கறுத்தக்கொழும்பான் காய் சிறிது காலத்தின் பின் அதனுள நிகழும் மாற்றங்களின் வழியாக இன்னொன்றுக்கு சமன் செய்ய முடியாத தனிச்சுவையை கொண்டதாக மாறுகின்றது.

இதனைத்தான் எட்டயபுரத்து பாட்டுக்காரன் பாரதி "காயிலே புளிப்பதென்ன கண்ணபெருமானே நீ கனியிலே இனிப்பதென்ன கண்ணபெருமானே" என தன் கருத்துமிக்க கவித்துவத்தால் எழுதி வைத்திருக்கின்றான்.

புளிப்புமிக்க காயை எப்படி அதனுள் நிகழ்ந்தேறும் மாற்றங்கள் இனிக்க வைக்கின்றதோ அதேபோன்று நம் இளைய சமூகத்தின் மத்தியில் நாம விளைவிக்கும் ஆரோக்கியமான மாற்றங்கள் அவர்களை மாற்றி நல்வழித் தடத்தில் பயணிக்க வைக்கும். எனவே, காலம் நம் கைகளில் திணிக்கும் இக் காலக் கடமையை நாம் ஒவ்வொருவரும் கரமேந்திக் கொள்ள வேண்டும்.

இந்த கரமேந்தும் எண்ணத்தின் விளைவாகவே மாற்றங்களை விளைவிக்கவல்ல சமூகமயமாதல் தொடர்பிலான தலைபபை இன்றைய நினைவுப பேருரையின் கருப்பொருளாக எடுத்துக்கொண்டேன்.

**சமூகமயமாதல் என்றால் என்ன?**

சமூகமயமாதல்என்றால்என்ன? என்பது தொடர்பில் பலர் பல்வேறு விதமாக கருத்துக்களை தெரிவிப்பரர்கள். "முதன் முதல் வீட்டிலிருந்து வெளி உலகத்துக்கு காலடி எடுத்து வைக்கும் குழந்தை சமுதாயத்திலுள்ள பல தரப்பட்டவர்களுடன் சுமுகமாக உரையாடி அந்தச் சமூகத்திலே இயைந்து வாழக்கூடிய அனைத்துப் பண்புகளையும் பெற்றுக் கொள்ளல் சமூகமயமாக்கல்" எனவும் "ஒவ்வொருவரும் தன்னை சமூகத்தின் அங்கத்தவராக இணைத்துக கொள்வூதற்காக அவர்களால் எடுதது‌க் கொள்ளப்படுகின்ற முயற்சி அல்லது அவர்களுக்கு வழங்கப்படுகின்ற பயிற்சியே சமூகமயமாக்கல்" எனவும் அறிஞர்கள் விளக்கம் கொடுக்கின்றார்கள்.

Socialization is a continuing process whereby an individual acquires a personal identity and learns the norms- values-behavior- and social skills appropriate to his or her social position. (Dictionary.com) என ஆங்கில அகராதியில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

விளக்கங்கள் பலவிதமாக விருப்பினும் அவை அனைத்தினதும் உள்ளார்ந்த உண்மை என்பது இதுதான். அதாவது, "மனிதன் ஒரு சமூகவிலங்கு" என்பதேயாகும். எனவே, சமூகவிலங்கான மனிதன் தன் வாழ்வியல் தளமாகவிருக்கக்கூடிய சமூகத்தைப் பற்றியும் அதன் நியதிகள் கோட்பாடுகள் விழுமியங்கள் தனித்துவங்கள் கலாசார அடையாளங்கள் தொடர்பிலும் தீர்க்கமாக அறிந்திருத்தலும் அவற்றை அனுசரித்தலும் மிக அவசியமானதாகும்.

இந்த சமூகப் பொருண்மையை நாம் ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்ளும் பட்சத்தில் சமூகப் பிறழ்வுகளுக்கும் காலாசாரத்துக்கு ஏற்புடைத்தற்ற செயற்பாடுகளுக்கும நம் சமூகத்தில் இடமிருக்காது.

இன்றைய நம் இளைய சமூகத்தின் அனேகமானவர்களுக்கு சமூகத்தைப் பற்றிக் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை அல்லது வழங்கப்படவில்லை. இந்த நிலையின் காரணமாகவே வருந்தத்தக்க பல விளைவுகளை நாம் எதிர்கொள்கின்றோம்.

**இன்றைய இந்த மாறுநிலைக்கு காரணம் என்ன?**

உலகம் ஒரு கிராமம் எனவும் உலகம் உள்ளங்கையில் சுருங்கிவட்டது எனவும், இதற்குக் காரணம் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி எனவும், மகிழ்ச்சி கொள்ளும் சமாந்தர வேளையில், உலகம் சுருங்கிப் போய்விடக் காரணமான உலகமயமாக்கல் நம் சமூகத்தின் சமூகமயமாக்கலை மோசமாகப் பாதித்து வருவதனை நாம் உணராமல் உள்ளோம்.

கூடிவாழ்தல் என்கின்ற அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்ட கூழைத்தேய பண்பாட்டைக்கொண்ட தமிழ்ச் சமூகம் இன்று தனித்த ஒற்றைத்தனம் நோக்கி நகர்கின்றது. நண்பர்களைக்கூட முகப் புத்தகத்திலேயே உயிரற்று சந்திக்கும் நிலை மிக வேகமாக வளர்ந்து வருகின்றது.

நண்பர்களைக் கூட முகம் காணாது முகப்புத்தக முகவரிகளைக் கொண்டே அடையாளப் படுத்தப்பழகி விட்டோம்.

நம் அடுத்த வீட்டில் நடக்கும் சம்பவத்தை கடல் கடந்து வாழும் நம் உறவினரோ நண்பரோ இணையத்தில் பார்த்து எமக்கு தொலைபேசி வாயிலாகச் சொன்ன பின்னர்தான் நாம் அறிந்து கொள்கின்றோம்.

அவ்வளது தூரம் விரைவான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வசதிகள் நம் வாழ்கையின் வட்டத்தை மாற்றியிருக்கின்றன.


மாலைநேரப்பொழுதுகளை மைதானங்களில் கழித்த எமது இளைஞர்கள் இன்று இணையத் தளங்களில் அதிக நேரத்தை காவு கொடுக்கின்றார்கள்.

சமூகமயமாதலின் மையங்க்ளான கோவில்களும் மைதான வெளிகளும் சனசமூகநிலையங்களும் நூல் நிலையங்களும் கலையரங்கங்களும் வெறிச் சோடிப்போய் கால்நடைகளின் காப்பரணாக மாறிவருகின்றன.

(தொடரும்)

# அதிசய உலகம்

**முகத்தில் விதவிதமான கதாபாத்திரங்களுடன் வினோத சாதனை படைத்த பெண்!**



லண்டனைச் சேர்ந்த 25 வ்யதான பெண் மேக்கப் கலைஞர் ஒருவர். முகத்தில் விதவிதமான கார்ட்டூன் கதாபாத்திரங்களை வரைந்து அசத்தியுள்ளார்.

லண்டனைச்சேர்ந்த பெண் மேக்கப் கலைஞர் லாரா ஜென்கின்சன் என்பவர் நாட்கங்களில் நடிக்கும் நடிகைகளுக்கு மேக்கப் போடும் ஒப்பனைக் கலைஞராக பணியாற்றி வருகிறார்.

இவருக்கு உடலில் விதவிதமான கார்ட்டூன்களை வரைவது பொழுது போக்கு. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மறைந்த கார்ட்டூன் ஓவியர் ரொபின் வில்லியம்சுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், அவரது பிரபலமான கார்ட்டூன் கதாபாத்திரங்களை முகத்தில் வரைய முடிபு செய்துள்ளார்.

அதே போல் பாப்பாய், குக்கி மான்ஸ்டர், கூபி ஷரக், பக்ஸ் பன்னி மற்றும் தாஸ்மேனிய பூதம் போன்ற கதாபாத்திரங்களை தனது முகத்தில் ஒவ்வொன்றாக வரைந்து காட்சி தந்தார்.

# சமைப்போம் சுவைப்போம்

## ரவை முறுக்கு



**தேவையான பொருட்கள்:-**

அரிசி மா- 1/2 கப்
ரவை- 1/4 கப்
வெண்ணெய்- 1/2 டேபிள் ஸ்பூன்
மிளகாய் தூள்- 1/2 டீஸ்பூன்
எள்- 1/2 டீஸ்பூன்
உப்பு- தேவையான அளவு
தண்ணீர்- தேவையான அளவு
எண்ணெய்- பொரித்தெடுப்பதற்கு

**செய்முறை**

முதலில் ரவையை மிக்சியில் போட்டு பொடி செய்துகொள்ள வேண்டும். பின் பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி அடுப்பில் வைத்து, கொதிக்க வைக்க வேண்டும். நீரானது நன்கு கொதித்ததும், அதில் ரவையை சேர்த்து நன்கு கட்சி சேராதவாறு கிளறி விட வேண்டும்.

ரவையானது வெந்ததும் அடுப்பை அணைத்து சிறிது நேரம் குளிர வைத்துபின் அதில் அரிசிமா, மிளகாய்த்தூள், வெண்ணெய், எள், உப்பு சேர்த்து, லேசாக தண்ணீர் தெளித்து நன்கு மென்மையாக பிசைந்து கொள்ள வேண்டும். பின்னர் கலவையை முறுக்கு அச்சில் வைத்து பிழிந்து கொதித்த எண்ணெயில் போட்டு பொன்னிறமாக பொரித்து எடுக்கவும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாவீரர்களின் உயிர் தியாகத்தை மனங்களில் ஒளிச் சுடராக ஏற்றி கௌரவம் சேர்ப்போம்

மாவீரர்களின் உயிர் தியாகங்களை மனங்களில் ஒளிச்சுடராக ஏற்றி தியாகங்களுக்கு கௌரவம் சேகரிக்கும் அதேவேளை வடக்கு மாகாண சபை ஊடாக மாவீரர் குடும்பங்களுக்கு உதவிகளை வழங்க வேண்டுமென வடக்கு மாகாண சபை முதலமைச்சரிடம் முற்போக்கு தமிழ்த் தேசியக்கட்சியின் செயலாளர் எஸ்.விஜயகாந்த் கோரிக்கை விடுத்துள்ளார். எமது விடுதலைக்கு போராடி உயிர் நீத்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவது தொடர் பாக ஒரு முக்கிய கோரிக்கையை உங்களிடம் பணிவுடனும் உரிமையுடனும் முன்வைக்கின்றோம்.

உலகத் தமிழ் மக்களின் அரசாங்கமாக திகழ்கின்ற தாங்கள் பொறுப்பேற்று வழி நடத்தி வருகின்ற வடமாகாண சபை எமது மாவீரர் குடும்பங்களுக்கு நிரந்தர நிவாரணம் கிடைக்கும் வகையில் ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதே எமது அன்பான வேண்டுகோளாகும். அந்தக் குடும்பங்களின் துயரங்களைப் போக்குவது மாவீரர்களுக்கு செய்யும் உன்னதமான அஞ் சலி என்றே நாம் கருதுகின்றோம்.

எனவே முதலமைச்சர் மாகாணசபையின் பொறுப்பில் ஒரு நிதியத்தை ஆரம்பித்தோ அல்லது பொருத்தமான வேறு ஏந்த விதத்திலோ மாவீரர் குடும்பங்களின் தேவைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாம் உரிமையுடன் கோருகின்றோம். இம்முறை நவம்பர் 27 அன்று மாவீரர் நாளையொட்டி பணி ஆரம்பிக்கப்படுமானால் நாம் மிகவும் மகிழ்ச்சியடைவோம். மேலும் அப்பணி சிறப்புற நிறைவேற முற்போக்குத் தமிழ் தேசியக் கட்சியினர் ஆகிய நாம் முழுமையான ஒத்துழைப்பு வழங்கி பணியாற்றுவோம் என்பதையும் உறுதியுடன் தெரிவித்துக்கு கொள்கின்றோம் என அக்கட்சி முதல மைச் சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (இ-5)




# 5 கோடி "ஓம் நமசிவாய" மந்திரம் சிவ ஆராதனையில் இம்முறை முதலீடு!

(யாழ்ப்பாணம்)

**சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இம்முறையும் நடைபெறவுள்ள சிவ ஆராதனை பிரார்த்தனையின் போது ஐந்து கோடி "ஓம் நமசிவாய மந்திரம்" ஆன்மீக வங்கியில் முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளதாக யாழ்ப்பாணம் சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத் தலைவர் வணக்கத்துக்குரிய சிவ ஸ்ரீ சபா.வாசு தேவக்குருக்கள், செயலாளர் வணக்கத்துக்குரிய சிவ ஸ்ரீ சர்வேஸ்வர ஸ்ரீ காந்தக் குருக்கள் ஆகியோர் இணைந்து விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 3 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணி முதல் சிவ ஆராதனை பக்திபூர்வமாக சித்தன் கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற இப் பிரார்த்தனை மூலமாக ஏறக்கு றைய 3கோடிக்கு மேற்பட்ட ஓம் நமசிவாய மந்திரங்கள் எழுதப்பட்டு நமசிவாய ஆன்மீக வங்கியில் சேர்க்கப்பட்டது. இதன் மூலமாக மக்கள் பல நன்மைகளையும் உயர்வுகளை யும் மன அமைதியையும் ஆன்மீக ஈடேற்றத்தினையும் பெற்றுக் கொண் டுள்ளார்கள்.

ஆதலால் இம்முறை ஐந்து கோடி மந்திரங்களை முதலீடு செய்வதற்கு இறைவனை வேண்டியுள்ளதாகவும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு பிரார்த்தனைக்கு வலுச்சேர்க்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் என சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான செயலமர்வு

ஐ.ஓ.எம். நிறுவனத்தின் அனுசரணையுடன் வெளிநாட்டு வேலை வாய்ப்பு தொடர்பான செயலமர்வு ஒன்று நாளை 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் நல்லூர்பிரதேசசெயலகமாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்தச்செயலமர்வில்மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்பை பெற்றுச்செல்லவுள்ளவர்கள், அவர்களின்உறவினர்கள்மற்றும்வெளிநாட்டு வேலை வாய்ப்பு தொடர்பான தகவல் அறிய விரும்புவோர் பங்குபற்ற முடியும் என பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (இ)







சுன்னாகம் பொலிஸாரினால் நேற்று காலை 10 மணியளவில் ஏழாலை சந்தியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நடமாடும் பொலிஸ் நிலைய ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஓய்வு பெற்ற அதிபரும் பொலிஸ் நிலைய சிவில் பாதுகாப்பு ஆலோசனை குழுவின் தலைவருமாகிய தம்பித்துரை மங்கள விளக்கேற்றுவதையும் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் எச்.எல். துஸ்மந்த உரையாற்றுவதையும் முன்பள்ளி சிறுமி ஒருவருக்கு கிராம சேவையாளர் திருமதி.தி.சசிகலா கற்றல் உபகரணம் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## கால்நடை வளர்ப்போர் சங்கப் பொதுக்கூட்டம்

கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கால்நடை வைத்திய நிலைய மண்டபத்தில் பு.இராதாகிருஷ்ணன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் கூட்டுறவு சங்க உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் கலந்து கொள்ளவுள்ளார். மேலும் இக்கூட்டத்தில் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-5-60)

# சாரதிகள் பற்றாக்குறை தொடர்ந்து நிலவுகிறது

### யாழ்.சாலை முகாமையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்.சாலைக்கு சாரதிகள் பற்றாக்குறை தொடர்ந்தும் நிலவி வருவதாக சாலை முகாமையாளர் குலபாலசெல்வம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இ.போ.சவின் யாழ். சாலைக்கு சாரதிகள் பற்றாக்குறை தொடர்ந்தும் நிலவி வருவதுடன் பேருந்துகளும் போதியளவு இன்மையால் சேவையினை சீராக மேற்கொள்ள முடியாது உள்ளது.

அண்மையில் யாழ். சாலைக்கு என 10 சாரதிகளும் 10 காப்பாளர்களும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான நியமனக்கடிதங்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. யாழ். சாலைக்கு தற்போது 68 சாரதிகள் தேவையாக இருந்த நிலையில் 10 சாரதிகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் யாழ். மாவட்டத்திற்கும் மற்றும் வெளிமாவட்டங்களுக்கும் முழுமையான சேவையினை வழங்குவதற்கு எமக்கு 89 பேருந்துகள் தேவையாக உள்ளது.

எனினும் தற்போது உள்ளவற்றில் 18 பேருந்துகள் எஞ்சின் இல்லாத நிலையிலும் 63 பேருந்துகள் ஓடக் கூடிய நிலையிலும் உள்ளன. இந்த 63 பேருந்து களைக் கொண்டே தற்போது சேவை யினை வழங்கி வருகின்றோம். இன்னும் சேவை ஈடுபடுத்தப்பட கூடிய பல பகுதிகளுக்கு இ.போ.ச.பேருந்து சேவைகள் இடம்பெறவில்லை. இதனால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர். எனினும் மேலதிகமாக பேருந்துகள் யாழ். சாலைக்கு வழங்குவதாக போக்குவரத்து அமைச்சு உறுதியளித்துள்ளது. அவ்வாறு போதியளவு பேருந்துகள் கிடைத்தவுடன் முழுமையான சேவையினை யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பகுதிக்கும் வழங்குவோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரன் பிறந்த நாள் தமிழகத்தில் நேற்று எழுச்சி



(கொழும்பு)

தமிழகத்தில் கடும் எதிர்ப்புகளை மீறி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரனின் 60 ஆவது பிறந்த நாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது.

ம.தி.மு.க.பொதுச்செயலர் வைகோ, கரூரில் கட்சி நிர்வா கிகளுடன் கேக் வெட்டி கொண்டா டினார். நாமக்கல், திருப்பூர் உள் ளிட்ட இடங்களில் பிரபாகரன் பிறந்த நாளை கொண்டாடிய ம.தி. மு.க.வினர் கைது செய்யப்பட் டுள்ளனர். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் 60 ஆவது பிறந்த நாளை உலகம் முழுவதும் சிறப்பாக கொண டாட வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ அழைப்பு விடுத்திருந்தார்.

இதற்கு பாரதிய ஜனதாவின் சுப்பிரமணியன் சுவாமி, ஹெச். ராஜா ஆகியோர் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

பிரபாகரனின் பிறந்த நாளை வைகோ கொண்டாடினால் அவரை தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து வெளியேற்றி தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும் என்றும் சுப்பிரமணியன் சுவாமி மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 முதலே தமிழகத்தின் பல இடங்களில் பிரபாகரனின் பிறந்த நாள் விழா கொண்டாட்டங்கள் நடந்தேறின.

சென்னை ராயப்பேட்டையில் தந்தை பெரியார் திராவிடர் கழகம், தமிழக முன்னேற்றப் படை ஆகியவற்றின் சார்பில் நள்ளிரவில் 60 கிலோ கேக் வெட்டி, பட்டாசுகளை வெடித்து பிரபாகரன் 'பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

இதைத் தடுக்கும் வகையில் ராயப்பேட்டையில் நூற்றுக்கணக்கான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதேபோல் நேற்று காலை சென்னை சாந்தோமில் உள்ள விழிப்புலனற்றோர் பாடசாலையில் விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் 60 கிலோ கேக் வெட்டி பிரபாகரன் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

கரூரில் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ நேற்று பிரபாகரன் பிறந்த நாளை கேக் வெட்டி கொண்டாடினார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## அகில இலங்கை இந்துமா மன்றம் நடத்தும் நாவலர் விழா கொழும்பில்

(கொழும்பு)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை, இந்து வித்தியா விருத்திச் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் அகில இலங்கை இந்துமா மன்றம் நடத்தும் நாவலர் விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அகில இலங்கை இந்துமா மன்ற தலைவர் கந்தையா நீலகண்டன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

அவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சரும் உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசருமான சத்திய வித்தகர் சி.வி.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் வரலாற்று ஆய்வாளர் என். கே. எஸ். திருச்செல்வம் எழுதிய கதிர்காமத்தை தரிசித்த சித்தர்களும் முனிவர்களும் (அகஸ்தியர் முதல் யோகர் சுவாமிகள் வரை) பி.சோமபாலன் எழுதிய Hinduism-what it is and what it is not, இந்து ஒளியின் தீபம் 19-சுடர் 01 நாவலர் சிறப்பு மலர் ஆகிய நூல்கள் வெளியிடப்படவுள்ளதோடு, நூல்களுக்குரிய வெளியீட்டுரை யினை இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசனும் நூல்களுக்குரிய விமர்சனங்களை கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ம. பால கைலாசநாத சர்மாவும் வழங்கவுள் ளனர்.

இவ்விழாவில் சப்ரகமுவ பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.நாகேஸ்வரன், நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்... எனும் தலைப்பில் இடம் பெறவுள்ள கவியரங்கில் சொல்லு தமிழ் எங்கே எனும் தலைப்பில் சட்டத்தரணி ந. காண்டீபனும் சுருதி எங்கே எனும் தலைப்பில் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ச. முகுந்தனும் பிரசங்கங்கள் எங்கே எனும் தலைப்பில் வைத்திய கலாநிதி கு.மதுரகனும் அறிவு எங்கே எனும் தலைப்பில் ஜெயவர்தனபுர பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தனும் வாதாடவுள்ளனர். (இ-5)

## தலைவர் பிரபாவின் பிறந்த நாளை முன்னிட்டு தமிழகத்திலும் பூஜை வழிபாடுகளுக்கு தடை!

### இலங்கை அகதிகள் மீது தாக்குதல்

தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் அருகே உள்ள தோப்புக்கொல்லையில் இலங்கை அகதிகள் முகாம் உள்ளது. 20 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட இந்த முகாமில் 500இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன.

முகாமில் உள்ளவர்கள் சேர்ந்து அங்கு சக்தி விநாயகர் கோவில் கட்டினர். அதற்கு இன்று 27 ஆம் திகதி கும்பாபிஷேகம் நடத்த முடிவு செய்தனர். இதற்காக வல்லத்திராகோட்டை பொலிஸில் அனுமதி கேட்டு மனு அளித்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று 26ஆம் திகதி விடுதலைப்புலிகள் தலைவர் வே. பிரபாகரன் பிறந்த நாள் என்பதாலும், இன்று 27 ஆம் திகதி புலிகளின் மாவீரர் தினம் என்பதாலும் அகதிகள் முகாமில் எந்த ஒரு நிகழ்ச்சியும் நடத்தக்கூடாது என பொலிஸார் கும்பாபிஷேக நிகழ்ச்சிக்கு அனுமதி அளிக்க மறுத்தனர்.

ஆனால் முகாமில் உள்ளவர்கள் கும்பாபிஷேக ஏற்பாடுகளை செய்தனர். நேற்று முன்தினம் யாகசாலை பூஜைகள் ஆரம்பித்தன. இதனை அறிந்த புதுக்கோட்டை பொலிஸ் நிலைய அதிகாரி உமா தோப்புக்கொல்லை அகதிகள் முகாமிற்கு வந்தார். முகாமில் உள்ளவர்களுடன் அவர் பேச்சுவார்த்தை



நடத்தினார். கும்பாபிஷேகத்தை இன்று தவிர்த்து வேறு எப்போது வேண்டுமானாலும் நடததிக் கொள்ளலாம் என அவர் கூறினார்.

மேலும் யாகசாலை பூஜைக்கு வந்த குருக்கள் மற்றும் முகாம் முக்கியஸ்தர்கள் சிலரிடம் கும்பாபிஷேகம் நடத்த மாட்டோம் என எழுதி வாங்கினர். ஆனால் முகாம் வாசிகள் இதற்கு சம்மதிக்கவில்லை. இதனால் நேற்று காலை வரை முகாமிலேயே உமா இருந்தார். காலை 6 மணிக்கு அவர் அங்கிருந்து புறப்பட்டு சென்றார்.

இதன் பிறகு முகாமில் இருந்தவர்கள் திடீரென புதுக்கோட்டை-ஆலங்குடி வீதியில் மறியலில் ஈடுபட்டனர். இதனால் அங்கு ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டனர். மறியலை கைவிட்டு கலைந்து செல்லும்படி டி.எஸ்.பி. பாலகுரு எச்சரித்தார். ஆனால் அதை பொருட்படுத்தாமல் முகாம் வாசிகள் மறியலை தொடர்ந்தனர். இதனால் பொலிஸார் அவர்கள் மீது தடியடி நடத்தினர். மறியலில் ஈடுபட்டவர்கள் கலைந்து முகாமிற்குள் ஓடினர். 42 பெண்கள் உட்பட 84 பேரை பொலிஸார் கைது செய்து வானில் ஏற்றினர். அப்பகுதியில் மேலும் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

இதன் பிறகு மீண்டும் உமா முகாமிற்கு வந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். பொலிஸ் தடையை மீறி கும்பாபிஷேகம் நடத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், வீதி மறியலில் ஈடுபட்டால் கைது செய்யப்படுவார்கள் என்றும் அவர் எச்சரித்தார். இதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது. (இ-5)

## பட்டிமன்ற நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அமரர் கணபதி இராசதுரை ஞாபகார்த்த நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன் பட்டிமன்ற இறுதிச் சுற்றுப்போட்டி வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலைக்கும் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரிக்கும் சிறப்பு நிகழ்வாக நடை பெறவுள்ளது. (இ)

## அமெரிக்காவின் கருத்தை சீனா நிராகரித்து விட்டது

தென் சீனக்கடல் பகுதியில் அமைந்துள்ள தீவு கூட்டங்களில் வியட்நாம், மலேசியா, புரூனே, தாய்வான், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள் கட்டுமான பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

தென் சீனக்கடல் பகுதி முழுவதும் தனக்கே சொந்தம் என உரிமை கொண்டாடி வரும் சீனாவும், அங்குள்ள ஸ்பிரேட்லி தீவுக்கு அருகே செயற்கை தீவு ஒன்றை ஒரு விமான ஓடுதளம் அளவுக்கு உருவாக்கி வருகிறது.

இந்த நிலையில், சர்ச்சைக்குரிய தென் சீனக்கடல் பகுதியில் சீனா மற்றும் பிற நாடுகள் மேற்கொண்டு வரும் கட்டுமான பணிகளை உடனே நிறுத்த வேண்டும் என அமெரிக்கா அறிவுறுத்தியது.

இது குறித்து அமெரிக்காவின் வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் கூறும்போது, 'தென் சீனக் கடல் பகுதியில் சீனா மேற்கொண்டு வரும் கட்டுமானப் பணிகள், அங்கு நிலவி வரும் பதற்றமான சூழ்நிலையை மேலும் சிக்கலாக்கி விடும்' என்று தெரிவித்தார்.

அமெரிக்காவின் இந்த கருத்துக்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்து உள்ளது. இது குறித்து சீன வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் ஹுவா சுனியிங் கூறுகையில், 'அந்த தீவில் நிறுத்தப்பட்டுள்ள படையினரின் நலனுக்காகவே கட்டுமானப்பணிகளை சீனா மேற்கொண்டு வருகிறது. இது குறித்து பொறுப்பற்ற விமர்சனங்களை வெளிசக்திகள் கூற உரிமையில்லை' என்று பதிலடி கொடுத்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ.கொககுவல ஸ்ரீ இராமகருஷண வததயாசாலையல நேறறு முனதனம வடமாகாண மரநடுகை மாதம சறபபாகக கொணடாடபபடடுளளது. இநநகழசசயல வடமாகாண வவசாய, கமநலசேவைகள, காலநடை அபவருததி, நாபபாசனம மறறும சுறறாடல அமைசசா பொ.ஐங்கரநேசன கலநதுகொணடு மாணவாகள மததயல உரையாறறுவதையும, மரககனறுகளை நடுகை செயவதையும படஙகளல காணலாம். தமழழ வடுதலைபபுலகளன மாவரா வாரததல எநத ஒரு வழாவையும நடததககூடாது எனறு படையனா பலவேறு கெடுபடிகளை மேறகொணடபோதும, இககாலபபகுதயல வடககன பலவேறு இடஙகளிலும நறுவனஙகளும பொதுமககளும மரநடுகையல ஆவததுடன ஈடுபடடுவருகனறமை குறிபபடததககது.

# மாவீரர்கள் தமிழர் என்பதால் நினைவு கூரத் தடை விதிப்பு

## த.தே.மக்கள் முன்னணி கண்டனம்

**தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழர்கள் என்பதால் தமிழர்களுக்கு எதிரான இனவாத சிந்தனையின் அடிப்படையிலேயே அவர்களை நினைவு கூருவ தற்கான உரிமைகளை அரசு மறுக்கின்றது என சுட்டிக்காட்டியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், விரிவு ரையாளர்கள் மீதான கொலை அச்சுறுத்தலுக்கு கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பாக அக்கட்சி விடுத்துள்ள கண்டன அறிக்கையில், யாழ். பல்கலைக கழகத்தில் கற்பிக்கும் ஒரு விரிவுரையாளரதும், நான்கு மாண வர்களதும் பெயர்களை குறிப்பிட்டு அவர் களை சுட்டுக் கொல்லுவோம் என்று எச்சரிக்கை செய்யும் துண்டுப் பிரசுரங்கள் யாழ் பல்கலைக்கழக வளவினுள் ஒட்டப்பட்டுள்ளன.

கலைப்பீடத்திலுள்ள ஆங்கிலக் கற்கைகள் துறைத் தலைவரும் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவருமான அமிர்தலிங்கம் இராசகுமாரன் மற்றும் கலைப் பீடத்தில் ஊடகத்துறையில் கல்வி பயிலும் 3ம் வருட மாணவர்களான துரைராசா தமிழ்ச் செல்வன், கணேசலிங்கம் நிவாஸ், தங்கராசா ஜங்கரன் மற்றும் புவியியல்துறையில் 3ம் வருடத்தில் கல்வி பயிலும் பிலிப்பேரிஸ் பிறிட்டோ ஆகியோரது பெயர்கள் குறிப்பிடபட்டு சுட்டுக் கொல்லுவோம் என கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மீதான இக் கொலை அச்சு றுத்தலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கொச்சைத் தமிழில் எழுதப்பட்டுள்ள அந்த துண்டுப் பிரசுரத்தில் மாவீரர் தின நிகழ்வுகளை நடத்தக் கூடாதென்றும் அவ்வாறு நடத்தினால் சுட்டுக் கொல்லு வோம் என்றும் கூறப்பட்டுள்ளது. அரசும், இராணுவத்தினரும் மட்டுமே மாவீரர் தின நிகழ்வுகளை நடாத்தக் கூடாதென தொடர் ச்சியாக அச்சுறுத்தி வருகின்ற நிலையில் 21 - 27 வரையான மாவீரர் தின வாரகாலத்தில் மாவீரர்களை நினைவு கூரக்கூடாதென அச்சுறுத்தி துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டமையானது இராணுவ உளவுத் துறையினரே மேற்கொண்டிருக்க வேண்டும் என நாம் சந்தேகிக்கின்றோம்.

கடந்த சில நாட்களாக மேற்படி மாணவர்கள் தொடர்பில் இனந்தெரியாத நபர்களால் விபரங்கள் திரட்டப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக் கிழமை இரவு யாழ். பல்கலைக்கழகத்தில் ஊடக கற்கைகள் பிரிவில் மூன்றாம் வருடத்தில் கல்வி பயிலும் க.நிவாஸ் என்பவரது வீட்டிற்கு மூன்று உந்துருளிகளில் முகத்தை மறைத்து தலைக் கவசம் அணிந்து சிவில் உடையில் சென்ற இனம் தெரியாத நபர்கள் ஐந்துபேர் நிவாசை விசாரணை என்ற பெயரில் கடத்திச் செல்ல முயன்றுள்ளனர். எனினும் நிவாஸ் சாதுரியமாக நடந்து கொண்டதன் மூலம் அந்தக் கடத்தல் முயற்சியிலிருந்து தப்பித்துக் கொண்டார். நிவாஸ் அகப்படாத நிலையில் குடும்பத்தினரை அந்த மர்மநபர்கள் அச்சுறுத்தி விட்டுச் சென்றுள்ளனர்.

சர்வதேச சட்டங்களின் பிரகாரம் போரில் இறந்தவர்களை நினைவு கூருவதற்கான உரிமை அனைவருக்கும் உண்டு. போரில் இறந்த ஜே.வி.பி உறுப்பினர்களை நினைவு கூர் பூரண அனுமதியும், சுதந்திரமும் வழங்கியுள்ள அரசானது உயிர்த் தியாகம் செய்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களை நினைவு கூர அனுமதி மறுக்கிறது. விடுதலைப் புலிகள் தமிழர்கள் என்பதால் தமிழர்களுக்கு எதிரான இனவாத சிந்தனையின் அடிப்படை யிலேயே அவர்களை நினைவுகூருவதற்கான உரிமைகளை அரசு மறுத்து வருகின்றது.

நினைவு கூருவதற்கான உரிமையை மறுத்துள்ளமை மட்டுமன்றி தமிழர்கள் மீது குறிப்பாக பல்கலைக்கழக சமூகத்தின் மீது அரச பயங்கரவாதத்தையும் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இலங்கையில் இடம்பெற்ற, இடம்பெற்றுவரும் சர்வதேச சட்ட மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்று இடம்பெற்று வரும் நிலையில் கூட அரசு தமிழ் மக்கள் மீதான அடக்குமுறையை குறைப்பதாகவோ கைவிடுவதாகவோ இல்லை. இவ்விடயம் தொடர்பில் சர்வதேச சமூகம் உரிய அக்கறை செலுத்தி மாணவர்களையும் விரிவுரையாளர்களையும் பாதுகாக்க வேண்டும் எனக் கோருகின்றோம் என அக்கட்சித்தலைவர்கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் பொதுச் செயலாளர் ஆகியோர் இணைந்து விடுத்துள்ள கண்டன அறிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## பிரதமர் பதவியை பெற ரணில் முயற்சிக்கிறார்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை உடைத்து பின்கதவு வழியாக பிரதமர் பதவியை பெற்றுக்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க முயற்சிக்கின்றார் என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

இதனால், தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மைகளும் ஏற்படப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, கல்லடி பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட பலநோக்கு மண்டபத்தை கடந்த திங்கட் கிழமை மாலை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர்மேற்கண்டவாறு தெரிவிததார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

நூறு நாட்களில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிக்க முடியாது. ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது எங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வாகவும் அமையப்போவதில்லை.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். இவற்றை இல்லாமல் செய்யாமல், நிறைவேற்று அதிகாரத்தை நூறு நாட்களில் இல்லாமல் செய்யமுடியாது.

தற்போது நாட்டில் நிலவுகின்ற அரசியல் சூழ்நிலை, சிங்களத் தலைவர்களுக்கு இடையிலான அதிகாரப் போட்டியாகும்" எனவும் மேலும் தெரிவித்தார். (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 30 செவ் 12 ல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்
தொ.இ: B/3825

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 19 1/4
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: BBA (அமெரிக்கா)
தொ.இ: B/3826

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 14 1/2 செவ் 4 ல்
தகைமை/தொழில்: A/L/ (லண்டன் PR)
தொ.இ: B/3829

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 27
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: நூலக உதவியாளர
தொ.இ: B/3830

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 61 செவ் 2 ல
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: HNDAM, CMA/ கனக்காளர
தொ.இ:G/3842

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 24 3/4 செவ் 1 ல
தகைமை/தொழில்: பட்டதாரி/ அரச தொழில்
தொ.இ; G/3845

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 37 1/2 செவ் 1இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/3849

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 12 3/4 செவ்இ2ல்
உயரம்: 4'11"
தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்
தொ.இ: G/3852

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி உரிமை மறுக்கப்படும் சிறுவர் தொழிலாளர்

இன்றைய தெற்காசிய வளர்முக நாடுகளில் காணப்படுகின்ற ஒத்த பிரச்சினைகளில்ஒன்றுசிறுவர்கள்தொழிலில் ஈடுபடுதலாகும். இதற்கு மிகப்பெரிய காரணம் குடும்ப வறுமையே. அந்த வகையில் இலங்கையிலும் சிறுவர்கள் வேலையில் ஈடுபடுவது, ஈடுபடுத்தப்படுவது மிக முதன்மையான சமூக, ஒழுக்க பிரச்சினையாக காணப்படுகின்றது.



ஐ.நா.சபையின் சிறுவர் உரிமைக்ககான அமையம் சிறுவர் உரிமை தொடர்பான சாசனத்தை வெளியிட்டபோது அதிலுள்ள அனைத்து உரிமைகளும் அனைத்து சிறுவர்களுக்கும் கிடைப்பதும் இல்லை. கிடைத்தவற்றை சிறுவர்க்ள் அனுபவிப்பதும் இல்லை. இது சிறுவர் சமூகமயமாக்கலில் ஏற்படும் பிரச்சினையாகும். ஜேர்மனி தேசத்தை சேர்ந்த சிறுவர் உள ஆய்வாளரான பிரெட்றிக் புரே, "சிறுவர்களின் ஆரோக்கியமான உடல், உள வளர்ச்சிக்கு அவர்களோடு தொடர்புடைய சமூகத்தின் பங்களிப்பு மிக முக்கியமானது'' என்கிறார். குழந்தைப் பருவத்திலே தனது தாயை இழந்த இவருக்கு அதனால் ஏற்பட்ட இழப்பும் தவிப்பும் கிராமப் புற சூழலும் இவரது சிந்தனைக்கு வழிகோலியது.

ஆகவே சமூக மயமாக்கலில் இருந்து

- எதிர்சமூகநடத்தையை கற்றுக்கொள்ளல்.
- ஒத்துப்போகாதா நடத்தையை தவிர்த்துக்கொள்ளல்.
- அச்சமூக நடத்தையை தவிர்த்து கொள்ளல்.

என்பவற்றில் ஏதோவொன்று அல்லது அனைத்தும் சிறுவரின் வாழ்வியல் ஒழுக்கத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. மேலும் சிறுவரின்உடல்உளஆளுமை வளர்ச்சிக்கு ஏற்ற வண்ணமாக குடும்பச் சமூகச் சூழல் அமைகின்ற போது அது அக் குழந்தையின் வளர்ச்சிக்கு சாதகமாக அமைகின்றது. மாறாக குடும்ப சமூக சூழலில் காணப்படும் குறைபாடுகள் அச்சிறுவர்களின் உடல் உள ஆளுமை வளர்ச்சிக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இப் பாதிப்பு அவர்களது நடத்தை பிறழ்வின் மூலம் பாதிப்பை ஏற்படுத்தி சமூக, குடும்ப மற்றும் தனிப்பட்ட ஒழுக்க நடத்தையில் பெரும் பாதகத்தை ஏற்படுத்துவதை காணமுடியும். ஆகவே சிறுவர் வறுமையும் அதனால் ஏற்படும் சிறுவர் தொழிலாளர் எனும் கட்டமைப்பையும் குறித்து ஒழுக்கவியலாளர் என்ற முறையில் சிந்திக்க வேண்டியது அவசியமாயுள்ளது.

### சிறுவர் தொழிலும் இலங்கையும்

இலங்கையில் சிறுவர் தொழிலில் ஈடுபடுதல் என்பது ஒரு பாரம்பரியமான முறையாக இருந்தபோதும் அது இன்று முழுநாட்டின் அபிவிருத்திக்கு பாரிய பிரச்சினையாகவுள்ளது. இலங்கையின் மனித வள அபிவிருத்தி சுட்டி 97 ஆகவுள்ளது. இது தெற்காசியாவின் முதலிடமாகவுள்ள போதும் சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் ஆட்கடத்தல், சிறுவர் தொழிலாளர் என்பன




நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

உதாரணமாக இலங்கையில் ஒன்பது இலட்சம் சிறுவர் தொழிலாளர் உள்ளதாக சிறுவர் மகளிர் அமைச்சு தனது 2012 ஆம் ஆண்டு அறிக்கையில் வெளியிட்டுள்ளது. அதில் மூன்று இலட்சம் சிறுவர்கள் ஆபத்தான அல்லது பாலியல் ரீதியான தொழிலில் ஈடுபடுவதாக அவ்வறிக்கை கூறுகின்றது. 4இலட்சத்து 75 ஆயிரம் சிறு வர்கள் பதினைந்து வயதுக்கு உட்பட்டவர் கள். மேற்படி விகிதமானது இலங்கையின்மொத்த சிறுவர்க ளில் 26% மாகும். அதில் பெரும்பாலானவர்கள்கிராமப்புறத்தை சார்ந்தவர்கள். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த 2 ஆம் வருட யுத்தத்தில் 2 ஆயிரம் சிறுவர்கள் ஆயுததாரிகளாக உள் வாங்கப்பட்டுள்ளார்கள். இலங்கையில் சிறைச்சாலை புனரமைப்பு மற்றும் சீரமைப்பு அறிக்கையின்படி பதிவு செய்யப்பட்டுள்ளவிபரங்களில் 25வீதம் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றங்கள் ஆகும். அதில் அம்பிலிபிட்டிய என்ற பிரதேசத்தில் மட்டும்51 வீத குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இலங்கையின் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்த கருத்தின்படி 2013 இல் சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் தொழிலில் ஈடுபடுத்தல் போன்ற குற்றங்கள் 20வீதமாக அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி தரவுகளை பார்க்கின்ற போது இலங்கையிலே சிறுவர் தொழிலாளர், சிறுவர் துஷ்பிரயோகம் என்பன எந்தளவிற்கு ஒரு பாரிய சமூக ஒழுக்க பிரச்சினையாக உள்ளதென்பதை புரிந்து கொள்ள கூடியதாக உள்ளது. மேலும் தர சமூக நிலை வேறுபாடு இன்றி அனைத்து குடும்ப பிரிவுகளை சேர்ந்த சிறுவர்களும் குற்ற செயலில் ஈடுபடுவதை காணலாம்.



பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் சிறுவர்கள் ஒழுக்க விதிகளை மீறுவதுடன் தமது ஆசான்களுக்கு எதிராக குற்ற செயல்களில் ஈடுபடுவதையும்காண்கின்றோம்.மேலும் இன்றைய நாளில் பெற்றோர்களையும் சகோதரர்களையும் சிறுவர்கள் கொலை செய்யும் அளவிற்கு செயற்படுவதை காண்கின்றோம்.

ஆகவே இது நாளாந்தம் சமூகத்தில் வளர்ந்து வருகின்ற தீர்க்க முடியாத ஒழுக்கவியல்பிரச்சினையாகவுள்ளது.

இலங்கையில் தமிழ், சிங்கள, இஸ்லாமியருடைய பாரம்பரிய முறையில்குருகுலகல்வி முறை என்று ஒன்று உண்டு. அது பெற்றோரின் தொழிலில் சிறுவர்களை ஈடுபடுத்துவதுடன் அத்தொழிலில் ஈடுபடுத்துவது பாரிய குற்றமாக கருதப்படவுவில்லை.

ஆகவே சிறுவர் பெற்றோரோடு இணைந்து தொழிலில் ஈடுபட்டனர். 1930 ஆம் ஆண்டு இலங்கையில் கல்வி அவசியம் என கருதப்பட்டு வலியுறுத்தப்பட்ட பின்பு அனைத்து சிறுவர்களும் குறிப்பாக 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் அனைவரும் கல்வியில் ஈடுபட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது,

எனினும்1998ஆம்ஆண்டு ஐ.நா. சபையின் சிறுவர் உரிமை சட்டத்தில் இலங்கையின் பிரதிநிதியாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கைச்சாத்திட்டதன் வழியாக 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் வேலையில் ஈடுபடுத்தப்படுவது குற்றமாக இலங்கையில் சட்ட வரைபுக்குள் கொண்டுவரப்பட்டது.

### சிறுவர் தொழிலாளர்

சிறுவர் தொழிலாளர் என்பது 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் முழுநேரமாக ஒரு தொழிலில் ஈடுபடுவதாகும். மேலும் சிறுவர்களின் விருப்பத்திற்கு மாறாக அவர்களை தொழிலில் ஈடுபடுத்துவதும் சிறுவர் தொழில் என்று வரையறுக்கப்படுகின்றது. மானிட பிரிவினருக்கு அவர்களுக்கு கொடுக்கப்படவேண்டிய கல்வி, ஊட்டச்சத்து, மாண்பு, ஆளுமை வளர்ச்சிக்கான பயிற்சி, உடல் ஆரோக்கியம் பராமரிப்பு மற்றும் பொழுது போக்குக்கான வாய்ப்புக்களில் ஏதோஒன்று மறுக்கப்பட்டு தொழிலில் ஈடுபடுத்தல் சிறுவர் தொழிலாகும். சிறுவர் தொழிலில் ஈடுபடுவதனால் அவர்கள் கல்வியை கற்பதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்படுகின்றது அல்லது இழக்கப்படுகின்றது. அவர்களுடைய ஆற்றல், ஆளுமை, வளர்ச்சிகள் சுரண்டப்படுகின்றது. உள, உடல் ரீதியாக பாதிப்புக்கள் ஏற்படுகின்றது. சமூகத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டு மதிப்பை இழக்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. எதிர்காலத்தில் சமூகத்துக்கும் நாட்டுக்கும் ஆரோக்கியமான ஓர் வளமாக இருக்கவேண்டிய சந்தர்ப்பம் ஆரம்பத்திலேயே அழிக்கப்படுகின்றது. உடல் உயிர் ரீதியான பாதிப்புக்கள் ஏற்படுவதனால் அவர்களுடைய ஆயுட்காலம் குறைக்கப்படுகின்றது அல்லது சிறுவயதிலே மரணம் ஏற்படுகின்றது. மேற்படி காரணங்க்ளினால் சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்துவதை தவறென்றும் அதற்கும் மேலாக சட்டரீதியான குற்றமென்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆகவே சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்துவது பாரிய குற்றமாகும்.

சிறுவர் தொழிலில் ஈடுபடுவதற்கு மிக முக்கிய காரணமாக இருப்பது சிறுவர் வறுமையாகும். சிறுவர் வறுமை என்பது சிறுவர்களுக்குரிய நல்வாழ்வில் ஏற்படுகின்ற குறைபாடுகளாகும். உதாரணமாக ஒரு சிறு பிள்ளையின் ஆரோக்கியமானநல்வாழ்விற்குஅமைய வேண்டிய சுற்றுச்சூழல், கலாசாரம், கல்வி, ஆரோக்கியம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றில் ஒன்றோ அல்லது அனைத்துமோ கிடைக்காமல் விடுவது சிறுவர் வறுமை ஆகும். சிறுவர் வறுமையில் புரிந்து கொள்வதற்கு மூன்று முக்கியமான பகுப்பாய்வு அம்சங்கள் காணப்படுகின்றன.

#### 01.மறுத்தல்

மறுப்பு என்பது சிறுவர் எவருக்கும் கிடைக்க வேண்டிய அடிப்படை வசதிகளான உணவு, உடை, பாதுகாப்பான நீர், ஆரோக்கியம்,கல்வி என்பவை தடைப்படுத்தப்படுவதாகும். இவை சுப்பாயம் கிடைக்க வேண்டும், அது கிடைக்காத போது அதுமறுத்தல்எனப்படும்.

#### 02.புறந்தள்ளல்

புறந்தள்ளல் என்பது சிறுவர்களுடைய வளர்ச்சிப்பருவத்திலேயேஅவர்களது ஆளுமை, உணர்வுகளுக்கு சமூகத்தில் கிடைக்க வேண்டிய ஒத்துழைப்புக்களிலிருந்துபுறந்தள்ளப்படுவதாகும். உதாரணமாக சமூக அமைப்புக்களில் குறிப்பாக விளையாட்டு, கல்வி,சமய, கலாசார, சிறுவர் கழகங்களில் சிறுவர்களுக்கான அபிவிருத்தி மற்றும் பொழுது போக்கு வாய்ப்புக்களில்சுப்பாயம்இணைவதற்கான வாய்ப்பளிக்க வேண்டும். சிறுவரை இவ்வாறான கட்டமைப்பிலிருந்து ஒதுக்கி வைப்பது புறந்தள்ளுதலாகும்.

#### 03.பாதிப்புக்கு உள்ளாகும் நிலை

சிறுவர் வாழும் வளரும் பருவத்தில் அவருக்கான உயிர்வாழ்தலுக்கு முழு உரிமை உண்டு. ஆனால் இன, மத, சாதிய மற்றும் பால்நிலை பாகுபாடுகளினால் சிறுவர்களின் உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்றது. உதாரணமாக இனத்துக்கெதிராக யுத்தம் நடைபெறுகின்றபோது சிறுவர் உயிரும் பறிக்கப்படுகின்றது. ஆணாதிக்கம் நிறைந்த சமூகத்தில் சிறுமிகள் பாதிக்கப்படுகின்றனர்.இவையே பாதிப்புக்குள்ளா கும் நிலையாகும்.ஆகவேசிறுவர்வறுமை சிறுவர் துஷ் பிரயோகத்திற்கும் சிறுவர் தொழிலில் ஈடுபடுவதற்கும் முக்கிய காரணமாக அமைகின்றது.

மேலும் குடும்ப சிதைவு (ஒற்றைப் பெற்றோரியம் அல்லது அநாதை ஆக்கப்படும் நிலை), நல்லாளுகை அற்ற அரசியல் சமூக கட்டமைப்பு , விழிப்புணர்வற்ற சமூகம் என்பன சிறுவர் தொழிலில் ஈடுபடுவதற்கு இதர காரணிகளாக அமைகின்றன.

இலங்கை ஆசியாவின் மனித வளச்சுட்டியில் முன்னேற்றகரமாக இருக்கின்ற போதும் சிறுவர் பெண்கள் தொடர்பாக குற்றச் செயல்களில் கணிசமான அளவு பதிவுகள் அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக கிராமப்புறங்களிலும் உட்புறக் கிராமங்களிலும் இவ்வகையான ஒழுக்க பிறழ்வுகள் காணப்படுகின்றன.

சிறுவர் உரிமை தொடர்பான சட்டம் உள்ளபோதும் அது முறையான விதத்தில் அனைத்து தரப்புகளாலும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற போதே மேற்படி பிரச்சினைக்கு முடிவு காணமுடியும். ஆயினும் இன்று அரசியலில் உள்ள முரண்பாடுகள் மற்றும் கல்வி, சமூக சிறுவர் துறைசார் உத்தியோகத்தர் அக்கறையின்மை, முதலாளி வர்க்கத்தின் பணச் செல்வாக்கு, ஏழை பாமர மக்களின் இயலாமை போன்றவற்றுடன் சிறுவர்கள் துஷ்பிரயோகம், சிறுவர் தொழிலில் ஈடுபடல் என்பன நாளுக்கு நாள் அதிகரிக்க காரணமாக அமைகிறது. இன்யை கல்வியமைச்சு இது தொடர்பான விழிப்புணர்வை முன்னெடுத்து வருவது சிறப்பான அம்சமாகும். இன்றைய சிறுவர்கள் நாளையதலைவர்கள்.எனவே சிறுவர் தொழிலாளிகளை எமது நாட்டிலிருந்து ஒழிக்க எம்மாலான பங்களிப்புக் களை நல்குவோம்.

செல்வி.சுந்தரேசன் அர்ச்சனா
3 ஆம்வருடம்மெய்யியல்துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015 சுற்றுச்சூழல் மாசடைவதை பாதுகாப்பதற்கான பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன

### மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முல்லை.மாவட்ட பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(முல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பிரதேச சபைகளினால் செயற்படுத்தப்பட்டு வரும் சடலங்கள் எரியூட்டும் பொது மயானங்கள் உட்பட திண்மக்கழிவு மற்றும் திரவக் கழிவு அகற்றல் செயல் முறைகள் உரிய சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைக்கு அமைவாகநடைபெறாமையால், பொது மக்களும் மற்றும் சுற்றுச்சூழல் உட்பட நிலத்தடி நீர் மாசடையும் சூழ்நிலை காணப்படுகின்றது. இது தொடர் பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையானது முல்லைத்தீவு மாவட்டத்தில் உரிய தரப்பினரை அறிவுறுத்துவதுடன் இது குறித்த பல்வேறுபட்ட செயற்றிட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் முல்லைத்தீவு மாவட்ட பொறுப்பதிகாரி ப.துவா ரகன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பிரதேச சபைகளின் கீழ் செயற்பட்டு வரும் சடலங்கள் எரியூட்டும் முறையானது மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் சூழ்நிலை தோற்றுவிக்கின்றது.

இவ்வாறு சடலங்களை எரியூட்டும் போது வளிமண்டலமும் மற்றும் மண்வளமும் பாதிக்கப்படுகின்றது. இதனைக் கருத்திற் கொண்டு சுற்றாடலை பாதிக்காத வகையில், சிறந்த தொழில்நுட்ப முறையில் அமைக்கப்பட்ட மின்சாரம் மூலம் தகனம் செய்யும் சுடுகாடுகளுக்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கும் செயல்முறையானது புதிய வர்த்தமானிப்படுத்தப்பட்ட கைத்தொழில் நடவடிக்கையினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந் நடைமுறையானது முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலக பிரிவு ரீதியாக கண்காணிக்கப்பட்டு மின்சாரம் மூலம் இயங்கும் தகனக்கிரியை செய்யும் மயானம் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் ஒவ்வொரு வீதம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகளில் சேகரிக்கப்படும் திண்மம் மற்றும் திரவக் கழிவுகளின் கழிவகற்றல் உரிய முறையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடைமுறைகளைக் கடைப்பிடிக்காத வகையில் நடைபெறுகின்றது.

சில இடங்களில் புதிதாக அனுமதி பெறாது மக்கள் வாழ்விடங்களுக்கு அண்மையாகவுள்ள பற்றைக் காடுகளில் கழிவுப் பொருட்கள் கொட்டப்படுகின்றன.

இதனால் எதிர்காலத்தில் நிலத்தடி நீர் மாசு அடைவதுடன் வளிமண்டலமும் பாதிக்கப்படும் நிலை ஏற்படும். இதனால் மக்கள் பல்வேறு நோய்த்தாக்கங்களுக்கு உட்படும் நிலை காணப்படுவதனால் எதிர் வரும் 2015 ஆம் ஆண்டில் இது தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால், கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு 1125 மாணவர்கள் தோற்றவுள்ளனர்

### துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

இவ்வருடம் டிசெம்பர் மாதம் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் ஆயிரத்து 125 மாணவர்கள் தோற்றி பரீட்சை எழுதவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் நான்கு இணைப்பு நிலையங்களின் மேற்பார்வையில், 10 பரீட்சை மண்டபங்களில் 21 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் 7 பரீட்சை நிலையங்களில் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுமாக மொத்தம் ஆயிரத்து 125 மாணவர்கள் பரீட்சை எழுதவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,


மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், மு/மல்லாவி மத்திய கல்லூரி, மு/பலாலிநகர் மகாவித்தியாலயம், மு/மாங்குளம் மகாவித்தியாலயம், ஆகிய பாடசாலைகளில் அமைக்கப்பட்டவுள்ள இணைப்பு நிலையங்களின் மேற்பார்வையின் கீழ் மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், மு/முத்தையன் கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை, மு/மல்லாவி மத்திய கல்லூரி மண்டப இல-01 மற்றும் மண்டப இல-02, மு/யோகபுரம் மகாவித்தியாலயம் மண்டப இல-01 மற்றும் மண்டப இல-02, மு/பாலிநகர் மகாவித்தியாலயம், மு/பாண்டியன்குளம் மகாவித்தியாலயம், மு/மாங்குளம் மகாவித்தியாலயம் மண்டப இல-01 மற்றும் மண்டப இல-02, மு/யோகபுரம் மகாவித்தியாலயம் மண்டப இல-01, மற்றும் மண்டப இல-02 ஆகிய 10 பரீட்சை நிலையங்கள் ஊடாக 21 பாடசாலைகளைச் சேர்ந்த 6 மாணவர்களும் மற்றும் ஏழு பரீட்சை நிலையங்களில் 619 தனிப்பட்ட பரீட்சார்த்திகளுமாக மொத் தம் ஆயிரத்து 125 பரீட்சார்த்திகள் இம்முறை க.பொ.த (சா/த) பரீட்சை எழுதவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-15)

# இடையூறு விளைவித்தவருக்கு நீதிமன்றில் தண்டப்பணம் விதிப்பு

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு கைவேலிப் பகுதியில் மது அருந்திவிட்டு பொது மக்கள், பெண்களுடன் கலாட்டாவில் ஈடுபட்டிருந்த நிலையில் கைது செய்யப்பட்டு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்ற வேளையில் அங்கு பொலிஸாருடனும் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்ததாக 25.08.2013 அன்று கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களுக்கு விசாரணையின் பின் 12 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருவருட கடூழிய சிறைத்தண்டனையும் விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

எதிராளிகள் சார்பில் சட்டத்தரணிகள் இஸ்மத் ஜமில் ஆஜராகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)




# சட்டவிரோதமான கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்த பொதுமக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரப்புற பிரதேசங்களில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்து வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இச்சட்டவிரோத கசிப்பு உற்பத்தி திருநகர் வடக்கு, கணேசபுரம், செல்வாநகர், சாந்தபுரம் ஆகியவற்றில் நடைபெறுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் குடும்பங்களில் தகராறு இடம்பெற்று அக்குடும்பங்கள் நிம்மதியின்றி வாழ்வதாக அயலவர்கள் தெரிவிக்கின்றனர்.

கசிப்பினை அருந்தும் இளைஞர்கள் மற்றும் குடும்பஸ்தர்கள் வீதிகளில் செல்லும் போது தகாத வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபடுவதாகவும் இதனால் பயணிப்போர் பல்வேறு இடர்பாடுகளைச் சந்திப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் வீதியில் செல்லும் பாடசாலை மாணவர்களுடன் சேட்டைகளில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குடித்துவிட்டு வீடுகளுக்கு செல்லும் குடும்பஸ்தர்கள் வீட்டிலுள்ளவர்களுடன் சண்டை செய்வதால் பிள்ளைகள், மனைவி ஆகியோர் வீதிக்கு வரவேண்டிய நிலை ஏற்படுகிறது.

இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் அயலவர்களால் முறையிடப்பட்ட போதிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென அப்பகுதி மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கட்டுப்படுத்தி இக்கசிப்பு உற்பத்தியை நிறுத்த முன்வர வேண்டுமென மேற்படி பிரதேச மக்களால் கோரிக்கை விடப்படுகிறது. (2-272)

# கிளிநொச்சி நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழுள்ள பெரிய குளங்களின் நீர்மட்ட அளவுகள்

(கிளிநொச்சி)

வன்னிப்பிரதேசத்தில் தற்போது பெய்து வரும் மழை காரணமாக கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழுள்ள பெரிய குளங்களின் நீர்வரத்து அதிகரித்துள்ளதாக இத்திணைக்கள புள்ளி விபரத் தகவல் தெரிவிக்கின்றன.

இதற்கமைய இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் 18 அடி 5 அங்குலமாகவும் அக்கராயன் குளத்தின் நீர்மட்டம் 11 அடியாகவும் கல்மடு குளத்தின் நீர்மட்டம் 15 அடி 10 அங்குலமாகவும் கரியானை நாகபடுவான் குளத்தின் நீர்மட்டம் ஒரு அடி 2 அங்குலமாகவும் கனகாம்பிகைக்குளத்தின் நீர்மட்டம் 4 அடி 7 அங்குலமாகவும் வன்னேரிக் குளத்தின் நீர் மட்டம் 5 அடி 11 அங்குலமாகவும் புதுமுறிப்பு குளத்தின் நீர்மட்டம் 7 அடி 9 அங்குலமாகவும் பிரமந்தனாறு குளத்தின் நீர்மட்டம் 3 அடி 6 அங்குலமாகவும் நீர் வரத்து கிடைக்கப்பெற்றுள்ளதாக புள்ளிவிபரத்தகவல் தெரிவிக்கின்றன.

இதேவேளை புனரமைப்பு செய்யப்பட்ட குடமுறுட்டி குளத்தின் நீர்மட்டம் 4 அடி 6 அங்குலமாக உயர்ந்துள்ளது.


இதனுடன் இரணைமடுக் குளத்தின் மழைவீழ்ச்சியானது நேற்று முன்தினம் 39.66 மில்லிமீற்றராக பதிவாகியுள்ளது தெரிவிக்கப்படுகின்றது. (2-272)

# ஆசிரியர்கள் பற்றாக்குறை

கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 585 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை ஏற்படவுள்ளதாக கிளி நொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேள் தெரிவித்துள்ளார்.

தற்காலிக இணைப்பில் கிளிநொச்சி கல்வி வலயத்தில் கடமையாற்றி வருகின்ற ஆசிரியர்கள், தற்காலிக இணைப்புக்காலம் முடிவடைந்து மாற்றலாகி செல்வதாலேயே இந்த பற்றாக்குறை ஏற்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

கிளிநொச்சி கல்வி வலயத்துக்காக அனுமதிக்கப்பட்ட அளவுக்கு ஆசிரியர்கள தற்போது உள்ளனர் எனினும், பாட ரீதியான ஆசிரியர்களுக்கு தொடர்ந்து தட்டுப்பாடு நிலவிவருகின்றது. (2)




வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு பாலர் பாடசாலை மழலைகளுக்கிடையே நடத்திய விளையாட்டு போட்டியில் வவுனியா கலைமகள் முன்பள்ளி மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றது. இவ்விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது... (படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரிபாலவுக்கு பல சேனா ஆதரவு!

## மகிந்தவின் சூழ்ச்சி என விபரிப்பு

**சிங்கள கடும்போக்குவாத அமைப்பான பொதுபல சேனாவின் ஆதரவினை எதிரணியின் பொது வேட்பாளரான முன்னாள் மத்திய சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிற்கு வழங்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளதாகவும் இந்த ஆதரவு தொடர்பில் இன்று கொழும்பில் நடைபெறும் பொது பலசேனாவின் ஊடாகவியலாளர் சந்திப்பின் போது அதன் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞான சாரதேரர் வெளியிடவுள்ளார் எனவும் அறிய முடிந்துள்ளது.**



இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, பொதுபல சேனா அமைப்பின் பகிரங்க ஆதரவை மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சார்க் மாநாட்டிற்காக நேபாளம் புறப்பட்டுச் செல்ல முன்னர் இது தொடர்பில் ஞானசார தேரரிடம் நேரடி உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடலுக்கு ஞானசார தேரர், சுற்றிலும் கறுப்புக் கண்ணாடிகள் பொருத்தப்பட்ட ஆடம்பர வாகனத்தில் அதிரடிப்படை பாதுகாப்புடன் அலரி மாளிகைக்கு வரவழைக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி, அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர் டலஸ் அழகபெரும, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்டோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டுள்ளனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தற்போதுள்ள சூழ்நிலையில் பௌத்த மேலாதிக்க அரசாங்கத்தை நிறுவ வேண்டுமானால் பொதுபல சேனா அமைப்பு தந்திரோபாய நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும். இதற்காக தனது கொள்கைகளில் சிறிது தளரவுப் போக்கினை வெளிக்காட்ட வேண்டும்.

மேலும் பொதுபல சேனாவிற்கு சிறுபான்மை மக்கள் ஒட்டுமொத்த எதிர்ப்பை வெளிக்காட்டுகின்றனர். இதனை நாம் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதாவது பொதுபல சேனா தனது ஆதரவை மைத்திரிபாலவுக்கு வழங்குவதாக பகிரங்கமாக அறிவிக்க வேண்டும். மேலும் அரசாங்கம் தொடர்பிலும் சிறிது விமர்சனங்களை முன்வைக்க வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் சிறுபான்மையினரின் வாக்குகள் மைத்திரிபால சிறிசேன தரப்பிற்கு கிடைப்பதை தடுக்கலாம். மேலும் தேர்தல் நெருங்கும் சமயத்தில் பௌத்த சிங்கள வாக்குகள் தொடர்பில் தந்திரோபாய நகர்வின் ஊடாக அவற்றை அரசாங்கத் தரப்பிற்கு பெற்றுக்கொள்ள இன்னொரு நகர்வை மேற்கொள்ள வேண்டும் என்றும் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதனை ஞானசார தேரர் மற்றும் அவருடன் வருகை தந்திருந்த திலந்த விதானகே ஆகியோர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இதனையடுத்து இன்று வியாழக்கிழமை பொதுபல சேனா ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி தனது ஆதரவை மைத்திரிபால சிறிசேனவிற்குவழங்குவதாக பகிரங்கமாக அறிவிக்கவுள்ளது. (இ-5)

## யாழில் இதுவரை 404 குளங்கள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன

யாழ். மாவட்டத்தில் 1996ஆம் ஆண்டிலிருந்து இதுவரையில் 404 குளங்கள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதாக கமநலசேவைகள் திணைக்கள வடமாகாண பிரதி ஆணையாளர் எம்.பற்றிக் நிறஞ்சன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் 992 குளங்கள் இருக்கின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள குளங்களின் குளக் கட்டுக்கள் மண்களால் அமைக்கப்பட்டே காணப்படுகின்றன. இதனால் அவை அடிக்கடி தூர்ந்து போகின்றன. அவற்றை அடிக்கடி புனரமைக்க வேண்டிய தேவையும காணப்படுகின்றன. அத்துடன், குளங்களை ஆழமாக்கும் போது குளங்களின் நீர் உப்புத்தன்மையாக மாறுகின்ற பிரச்சினைகளையும எதிர் நோக்க வேண்டியுள்ளது. இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு மிகுதி குளங்களின் புனரமைப்பு பணிகளும் முன்னெடுக்கப்படும என அவர் மேலும் தெரிவித்தார். (இ-23)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 200 |
| தக்காளி | 160 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 60 |
| கோவா | 120 | 100 | 120 |
| கரட் | 200 | 140 | 200 |
| பூசணி | 40 | 40 | 60 |
| புடோல் | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 120 | 80 | 100-120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 160 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 40 | 60 | 70 |
| பயற்றங்காய் | 150 | 200 | 140 |
| லீக்ஸ் | 250 | 240 | 240 |
| பீற்றூட் | 160 | 140 | 160 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | - | 300 | 200 |
| போஞ்சி | 120 | 140 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 40 |
| தேசிக்காய் | 120 | 150 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 35-40 |
| இராசவள்ளி | - | 120 | - |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 205

ராகுலன் பாலா

மரங்கள் நம் நாட்டின் நுரையீரல்கள்.
அவை காற்றைத் தூய்மைப்படுத்தி புத்தம் புது வலிமையை மக்களுக்குத் தருகின்றன
-ரூஸ்வெல்ட்



இரத்தினசபாபதி பாலராஜா





குணசீலன் சனோஜன்

பிகர் அருகில் இருந்தால்
"HOTEL BILL"
பிகர் தொலைவில் இருந்தால்
"PHONE BILL"
பிகர் தொலைந்தே போய்விட்டால்
"BAR BILL"
எப்படிப் பார்த்தாலும்
"BILL" நிச்சயம்
இந்த பொண்ணுங்களே இப்படித்தான் பாஸ்




எஸ்எம்கே கார்த்திகேயன்

ஆசிரியர் : இப்போதெல்லாம் பசங்களுக்கு கணக்குப் பாடம் நடத்துவதில் புதிது புதிதாக யோசித்துச் செய்ய வேண்டியிருக்கு
சக ஆசிரியர் : ஏன் இப்படிச் சொல்றீங்க?
ஆசிரியர் : ஆமா. 3X3 எவ்வளவுடான்னா ரொம்ப யோசிக்கிறாங்க... ஆனா வேற மாதிரி கேட்டா டக்குன்னு பதில் வருது...
சக ஆசிரியர் : வேற எப்படி கேட்டீங்க?
ஆசிரியர் : "திரி"ஷா X "திரி"ஷா = எவ்ளோடான்னு கேட்டா "நயன்"தாரான்னு(9) பதில் வருது பட்டுன்னு



சிவா சக்தி

காசிருந்தா காக்கா கூட அழகாயிடும்



ராகுலன் பாலா



இப்போதெல்லாம் குழந்தை பிறந்ததும் தொட்டிலில் போடும் முன்பு, பேஸ்புக்கில் போட்டுவிடுகிறார்கள்!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் சர்வாதிகாரத்தை ஒழிக்கவே எதிரணிக்கு ஆதரவு

## பிக்குகள் முன்னணி விளக்கம்

(கொழும்பு)

நாட்டில் ஜனநாயகத்தினை ஏற்படுத்தி சர்வாதிகாரத்தை ஒழிக்க எதிரணியின் பொது வேட்பாளருக்கே ஆதரவு வழங்குவோம் என ஐக்கிய பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் கொழும்பு தேசிய நூதனசாலை மண்டபத்தில் ஐக்கிய பிக்குகள் முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின்போது கினாவே ஆனந்த அனுநாயக்க தேரர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்த அரசின் ஏகாதிபத்திய ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதே எமது நோக்கம்.

நிறைவேற்று ஜனாதிபதி அதிகார முறைமையினை நீக்க வேண்டும்.

நாட்டில் ஜனநாயகத்தினை ஏற்படுத்தவேண்டும் என்பதனையே ஆரம்பத்தில் இருந்து நாம் தெரிவித்து வந்தோம். அனால், எதுவும் இதுவரை நடைபெறவில்லை.

இவை நடைபெற ஆட்சி மாற்றம் கட்டாயம் தேவை. எனவே, ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கி பொது எதிரணியினை வெற்றிபெறச் செய்வோம்.

மேலும், இராணுவ கட்டுப்பாட்டினையும் அடக்குமுறையையும் தாண்டி பொது எதிரணியினை ஆதரிக்க வேண்டியுள்ளது.

எனவே, பொது வேட்பாளரின் வெற்றிக்காக சகல மட்டத்திலும் மக்களை அணிதிரட்டி பொது எதிரணியின் வெற்றிக்காக சகல வழிகளிலும் செயற்படுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# பிரதமர் பதவிக்கு யார்தான் ஆசைப்படமாட்டார்கள்-நிமால்



(கொழும்பு)

பிரதமர் பதவிக்கு யார்தான் ஆசைப்படமாட்டார்கள் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

பிரதமர் பதவியை உரிய நேரத்தில் உரிய நபருக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்குவார்.

பிரதமர் பதவிக்காக கட்சிக்குள் நாம் மோதிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. கிடைக்க வேண்டியிருந்தால் கிடைக்கும். கிடைக்கக் கூடாது என்றால் கிடைக்காது.

கிடைத்தால் மகிழ்ச்சி அடைவேன். கிடைக்கவில்லை என்பதற்காக கவலைப்படமாட்டேன்.

கட்சிகளை பாதுகாக்க செயற்படுபவர்கள் நாங்கள். எல்லா நேரங்களிலும் கட்சியை பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம்.

உண்மையிலேயே பிரதமர் பதவி குறித்த எதிர்பார்ப்புக்கள் இல்லாமல் இல்லை. யார்தான் பிரதமர் பதவியை வேண்டாம் என்பார்கள்.

பிரதேச சபை உறுப்பினர் கூட பிரதமராகவே விரும்புகின்றார்.

எனினும் எதிர்பார்ப்புக்கள் எல்லா நேரங்களிலும் வெற்றியடைவதில்லை.

நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்களை ஞாபகப்படுத்தியே நாம் மக்களிடம் வாக்கு கேட்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.


அரசாங்கம் வெறும் பொருளாதார அபிவிருத்தியை மட்டும் ஏற்படுத்தவில்லை. மனித வள மேம்பாடு, உட்கட்டுமான வசதிகளை விருத்தி செய்தல் என பல்வேறு துறைகளில் அபிவிருத்தியை ஏற்படுத்தியுள்ளதாக சிங்கள பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சர்வாதிகாரத்துக்கு முடிபுகாணும் காலம் தற்போது மலர்ந்துள்ளது

சர்வாதிகார ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வரும் காலம் மலர்ந்துள்ளதாக புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களின் ஜனநாயகத்தை நிலைநாட்டக் கூடிய ஓர் ஆட்சி முறைமையை உருவாக்க வேண்டும்.

அரசாங்கம் பொதுவாக நாட்டின் அரசியல் அமைப்பு, நீதிமன்றம், நாடாளுமன்றம், தேர்தல் ஆணையாளரின் நடவடிக்கைகள், அரசாங்க அதிகாரிகளின் நடவடிக்கைகள் போன்றவற்றுக்கு இடையூறு ஏற்படும் வகையில் செயற்பட்டு



வருகின்றது.

பலவந்தமான அடிப்படையில் நாட்டின் பல்வேறு துறைகளை அரசாங்கம் பலவீனப்படுத்தி வருகின்றது.

மக்கள் இந்த அரசாங்கத்தை விரட்டியடிக்க வேண்டுமென கருதுகின்றனர்.

நாடாளுமன்றம், நீதிமன்றம் மற்றும் அதிகாரிகளை அரசாங்கம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது..

வெளியுறவுத்துறை கடுமையான அரசியல் மயப்படுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவிற்கு வேண்டப்பட்டவர்களே இராஜதந்திர சேவையில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலின்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## சகாதேவன் வழங்கிய நீதி

ஆன்மீகச் சொற்பொழிவாளர் ஒருவர், " ஒரு ஞானி எப்படியிருப்பார்? " என்ற கெள்விக்கு விளக்கம் கொடுத்தார்.

"ஞானி எப்படி இருப்பார் என்று கேட்டால், மகாபாரதத்தில் வரும் சகாதேவன் போன்று இருப்பார்" என்பது அவருடைய பதில்.

ஒரு ஞானி நீதியை மட்டும் தான் பார்ப்பார். அது தன்னுடைய சொந்தக்காரர்களையோ, தனக்கு வேண்டியவர்களையோ எப்படிப் பாதிக்கிறது என்பதைப்பற்றி அவர் கவலைப்பட்டார்.

அவருக்கு நீதி மட்டும் தான் முக்கியம்.

சகாதேவன் அதற்குச் சரியான ஓர் உதாரணம் தான். கிருஷ்ணன் தூது போவதற்கு முன் பஞ்சபாண்டவர்களை அழைத்து அவர்களின் கருத்தைக் கேட்கிறார்.

"யுத்தம் வேண்டாம் " என்கிறார் தர்மர்.

பீமன், அர்ஜுனன், நகுலன் ஆகியோர் " யுத்தம் வேண்டும் " என்கிறார்கள்.

அதன்பின் கிருஷ்ணன் சகாதேவனிடம் சென்று " நீ என்ன சொல்கிறாய்?" என்று கேட்கிறார்.

அதற்கு சகாதேவன் " கிருஷ்ணா, உன்னுடைய கருத்து எதுவோ அதுதான் என்னுடைய கருத்தும் " என்று கூறிவிட்டான்.

சகாதேவனுக்கு, " கண்ணன் விருப்பப்படி தான் எல்லாம் நடக்கப் போகிறது " என்பது தெரியும்.

தான் போருக்கு ஏற்பாடு செய்வது சகாதேவனுக்குப் பரிந்து விட்டது என்பதை கண்ணன் உணர்ந்து கொண்டார்.

" உன் கூந்தலை நானே முடிக்கிறேன்" என்று திரௌபதிக்கு வாக்குக் கொடுத்த கண்ணன், போருக்கு ஏற்பாடு செய்யாமல் இருக்க முடியுமா?

என்றாலும், "பாரதப் போர் நடைபெறாமல் இருக்க என்ன வழி?" என்று சகாதேவனிடம் வினவினார் கண்ணன்.

அதற்கு சகாதேவன் கூறிய பதில் என்ன தெரியுமா?

"பாரதப் போர் நடைபெறாமல் இருக்க வேண்டும் எனில் கர்ணனுக்கு முடி சூட்ட வேண்டும். அதற்கு முன் அர்ஜுனனைக் கொல்ல வேண்டும். பின் திரௌபதியின் கூந்தலை முடிக்க வேண்டும்" என்றான் சகாதேவன்.

கர்ணன், பஞ்சபாண்டவர்களுக்கு வேண்டாத எத்தனையோ காரியங்களைச் செய்தவன். அப்படியிருந்தும், "கர்ணனுக்கு முடி சூட்ட வேண்டும்" என்று சகா தேவன் ஏன் கூறினான்.

கர்ணனுக்கு முடிசூட்டினால் துரியோதனன் " வேண்டாம் " என்று சொல்ல மாட்டான். அதற்கு தர்மரும் சம்மதிப்பார்.

ஏனென்றால், தர்மரைப் பொறுத்த வரையில் எப்படியோ போர்வராமல் இருந்தால் சரி கர்ணன் தன் தமையன் என்று தெரிந்ததும் அவர் இன்னும் மகிழ்ச்சியடைவார்.

அது சரி...அர்ஜுனனை ஏன் கொல்ல வேண்டும்?

அர்ஜுன்ன கர்ணனின் பரமவிரோதி. அவன் கர்ணனுக்கு முடிசூட்டுவதற்கு சம்மதிக்கமாட்டான். அதனால் அர்ஜுனனை முதலில் கொல்ல வேண்டும்.

சரி...திரௌபதியின் கூந்தலை ஏன் முடிக்க வேண்டும்?

அவள், " என் கூந்தலை முடியமாட்டேன் " என்று சபதம் எடுத்தாள் அல்லவா? அதனால் அவளது சபதத்தை நிறைவேற்ற வேண்டும். இதுதான் சகாதேவன் சொன்ன பதிலுக்கு விளக்கம்.

இப்போது யோசித்துப் பாருங்கள்...

சகாதேவன் நீதியைத் தான் பார்த்தான். தன்பதிலால் சொந்தபந்தமெல்லாம் எந்த அளவிற்குப் பாதிக்கப்படும் என்பதைப் பற்றி அவன் கவலைப்படவில்லை.


ஞானிகள் இப்படித்தான் இருப்பார்கள் என்று அந்த ஆன்மீகச் சொற்பொழிவாளர் குறிப்பிட்டார்.

அவர் சொல்வது சரிதான்... அதற்காகச் சொந்த பந்தங்களைப் பற்றி கவலைப்படாதவர்கள் எல்லாம் ஞானிகள் என்று நாம் நினைத்து விட முடியாது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலை மேலே மந்திரப் பானை!

…மலை அடிவாரத்தில் அந்தச் சிறுவனின் வீடு இருந்தது.

அவனுக்கு அப்பா இல்லை.

அவர் இருந்தபோது நிறையச் சொத்துக்கள் இருந்தன.

அந்தச் சொத்துக்களை, மலை உச்சியிலிருந்த ஒரு பணக்காரன் ஏமாற்றி எடுத்துக் கொண்டான்.

இப்போது, அவர்களிடம் இருப்பது, ஒரு பசு மட்டுமே.

அம்மாவும் மகனும் சாப்பாட்டுக்கே மிகவும் சிரமப்பட்டனர்.

மகனை அழைத்த அம்மா, இந்தப் பசுவைப் பக்கத்தில் உள்ள நகரத்தில் விற்றுவிட்டு வா என்று அனுப்பினார்.

மாட்டின் கழுத்தில் கயிற்றைக் கட்டிகொண்டு சிறுவனும் கிளம்பினான்.

வழியில் ஒருவரைச் சந்தித்தான்.

அவர் துணியால் மூடிய ஒரு பொருளை வைத்திருந்தார்,

சிறுவனைப் பார்த்து, எங்கே போகிறாய்? என்று கேட்டார்.

இந்தப் பசுவை விற்பதற்காகச் சந்தைக்குப் போகிறேன் என்றான்.

அப்படியா… அந்தப் பசுவை எனக்கு விற்கிறாயா? என்று கேட்டார்.

நீங்கள் எவ்வளவு தருவீரகள்? என்றான.

இந்தப் பானையை உனக்குத் தருகிறேன் என்றார்.

பசுவுக்குப் பதிலாக பானையா? நான் தர மாட்டேன் என்றான் சிறுவன். அப்போது, மெல்லிய ஒரு குரல் என்னை வாங்கிக்க, என்னை வாங்கிக்க என்று பானையிலிருந்து வந்தது.


சிறுவனுக்கோ ஆச்சர்யமாக இருந்தது.

பசுவைக் கொடுத்து, பானையை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தான்.

அவனைப் பார்த்த அம்மா ஆர்வமுடன், மகனே, பசுவை விற்றுவிட்டாயா? என்று கேட்டார்.

ஓ… பசுவுக்குப் பதில், இதோ இந்தப் பானையை வாங்கி வந்தேன் என்றான்.

அம்மா அதிர்ந்தார்.



உனக்கு மூளையே இல்லையா? யாராவது பானைக்காகப் பசுவை விற்பார்களா? இதை என்ன செய்வது? என்று சத்தம் போட்டபடி, அந்தப் பானையை வெளியே வீசப்போனார்.

அப்போது, என்னை வீசாதீர்கள்.

என்னை அடுப்பில் வைத்து தண்ணீர் ஊற்றிக் கொதிக்கவையுங்கள் என்றது அந்தப் பானை.

பானை பேசியதைப் பார்த்த அம்மாவுக்கு, ஒரே ஆச்சர்யம்.

பானை கூறியபடியே அதை அடுப்பில் வைத்து, தண்ணீர் ஊற்றி, அடுப்பை மூட்டினார்.

தண்ணீர் கொதிக்க ஆரம்பித்தது.

சற்று நேரத்தில்…

நான் போய் உங்களுக்குச் சாப்பிட ஏதாவது கொண்டு வருகிறேன் என்றது பானை.

காற்றில் பறந்து மலை உச்சிக்குப் போன பானை, அங்கே இருந்த பணக்காரன் வீட்டுச் சமையல் அறைக்குள் நுழைந்து, ஒரு பக்கமாக அமர்ந்தது.

பணக்காரனின் மனைவி, பலகாரங்களை விதவிதமாகச் சுட்டுக்கொண்டிருந்தார்.

வீடே கமகமத்தது.

பலகாரங்களை வைக்க பாத்திரம் தேடினாள்.

அப்போது அந்தப் பானை அவள் கண்ணில் பட்டது.

இந்தப் பானை எங்கிருந்து வந்தது? நல்லாத்தான் இருக்கு' என்று நினைத்தவாறு, பலகாரங்களை அந்தப் பானைக்குள் வைத்தார்.

பிறகு, கணவரை அழைக்கப் போனார்.

உடனே, அந்தப் பானை காற்றில் மிதந்து மலை அடிவாரத்தில் உள்ள சிறுவனின் வீட்டுக்கு வந்தது.

அம்மாவும் மகனும் பலகாரங்களை ருசித்துச் சாப்பிட்டனர்.

அடுத்த நாள், என்னை அடுப்பில் வைத்து தண்ணீர் ஊற்றிக் கொதிக்கவிடுங்கள் என்றது பானை.

தண்ணீர் கொதிக்க ஆரம்பித்ததும் காற்றில் மிதந்தவாறு பானை வெளியே போனது.

மலை உச்சியில் பணக்காரனின் வயல்வெளியில், கோதுமை அறுவடை நடந்துக்கொண்டிருந்தது.

(தொடரும்)




- ❖1703 - இங்கிலாந்து, டெவன் என்ற இடத்தில உள்ள கலங்கரை விளக்கம் அங்கு நிகழ்ந்த பெரும் சூறாவளியினால் சேதமாக்கப்பட்டது.
- ❖1830 - அன்னை மரியா உலக உருண்டைமேல் நின்று கொண்டு கத்தரீன் லபோரேக்குக் காட்சியளித்தார்.
- ❖1895 - பாரிசில் அல்பிரட் நோபல் நோபல் பரிசுக்கான திட்டத்தை தெரிவித்து தனது சொத்துக்களை அப்பரிசுக்கான மூலதனமாக அறிவித்தார்.
- ❖1912 - மொரோக்கோவின் வடக்குக் கரையை எசுப்பானியா தனது ஆளுகைக்குள் அறிவித்தது.
- ❖1935 - இரத்மலானை விமான நிலையத்துக்கு முதலாவது விமானம் மதராசிலிருந்து வந்திறங்கியது.
- ❖1964 - பனிப்போர்: இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு அணுவாயுதச் சோதனைகளை நிறுத்தும்படி ஐக்கிய அமெரிக்காவையும் ரஷ்யாவையும் கேட்டுக் கொண்டார்.
- ❖1971 - சோவியத்தின் மார்ஸ் 2 விண்கலம் தனது துணை விண்கோள் ஒன்றை செவ்வாய்க் கோளில் இறக்கியது. இது செவ்வாயின் மோதி செயலிழந்தது. செவ்வாயில் இறங்கிய முதலாவது கலம் இதுவாகும்.
- ❖1989 - ஈழப்போரில் இறந்த போராளிகளை நினைவு கூரும் முகமாக மாவீரர் நாள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரால் அறிவிக்கப்பட்டது.
- ❖1999 - நியூசிலாந்தின் முதலாவது பெண் பிரதமராக தொழிற்கட்சியைச் சேர்ந்த ஹெலன் கிளார்க் தெரிவு செய்யப்பட்டார்.
- ❖2001 - ஹபிள் விண்வெளித் தொலைநோக்கி மூலம் ஓசிரிசு கோளில் ஆவியாகக்கூடிய நிலையில் ஐதரசன் மண்டலம் கண்டுபிடிக்கப்பட்டது. சூரிய குடும்பத்திற்கு வெளியே உள்ள கோள் ஒன்றில் வளி மண்டலம் கண்டுபிடிக்கப்பட்டது இதுவே முதல் தடவை.
- ❖2005 - பிரான்சின் ஏமியென்சு நகரில் உலகின் முதலாவது மனித முகமாற்றுப் பொருத்து வெற்றிகரமாக இடம் பெற்றது.
- ❖2006 - கனடாவில் பிரெஞ்சுமொழி பேசும் மக்களை பெரும்பான்மையாக கொண்ட கியூபெக் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் தனியான ஹதேச இனம் என்ற அங்கீகாரத்தை கனடிய நாடாளுமன்றம் வழங்கியது.

பிறப்புகள்

- ❖1934 - யோசப் பரராஜசிங்கம், இலங்கை, மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர், (இ. 2005)
- ❖1940 - புரூஸ் லீ, தற்காப்புக்கலை நிபுணர், நடிகர் (இ. 1973)
- ❖1942 - ஜிமி ஹென்றிக்ஸ், அமெரிக்ககிட்டார் கலைஞர் (இ. 1970)
- ❖1960 - யூலியா திமொஷென்கோ, உக்ரேனிய அரசியல் வாதி, பிரதமர்
- ❖1963 - திலீபன், தமிழீழ விடுதலைப் புலிப் போராளி, உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்தவர் (இ. 1987)

இறப்புகள

- ❖1852 - அடாலவ்லேஸ், ஆங்கிலேயக் கணிதவியலர் (பி. 1815)
- ❖2008 - வி. பி. சிங், முன்னாள் இந்தியப் பிரதமர் (பி. 1931

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து– 03

....சல சல சலன்னு சலம்பலாயிருந்த பஞ்சாயத்துல அரவம் அடங்கிப் போச்சு. காத்துக்கும் அரசமர எலைகளுக்கும் நடக்கிற கைகலப்பத் தவிர வேறொண்ணுஞ் சத்தமில்ல. நாட்டாம காவக்காரன் தலையாரியோட பெருசுகளும் உட்காந்திருக்குதுக. அரச மரத்துப் பிள்ளையார் கோயில் கல்திட்டுல.

காடு கரைக்கும் வெளியூருக்கும் போன ஆளுகளத் தவிர ஊரே கூடி ஒக்காந்திருக்கு தரையில துண்டு துணி விரிச்சும் விரிக்காமலும்.

கல்யாணமாகிப் பத்தே நாள்ல அத்துவிட்டுற அளவுக்கு என்னப்பா குத்தம் பண்ணுனா கருவாச்சி?

அதையும் இதையும் கேட்டு அசிங்கப்படுத்தாதீக. சிலதைச் சொல்லலாம் சிலதைச் சொல்ல முடியாது.

அவன் சத்தாந்தான் கொஞ்சத்துக்கு கொஞ்சம் தணிச்சிருக்கே தவிர, உள்ள இருக்கிற மப்பு கொறையல.

அவன் சொல்லுக்கு கீழே உண்ம இருக்குதானு அவனையே உத்து உத்துப் பார்க்குறாரு நாட்டாமக்காரரு.

பெறவியிலயே ஒரு தப்பான பெறவி கட்டையன்னு பேசுவாக ஊருக்குள்ள. அவன் மூஞ்சிக்குள்ளயே முரு உறுப்புக்கும் இன்னொரு உறுப்புக்கும் சம்பந்தம் இருக்காது. ஒண்ணுக்கொண்ணு சண்ட புடிக்கும். பள பள பளனு நெத்தி பாறை மாதிரி. அந்தப் பாறைக்குக் கீழே ஒடுங்கி நிக்கிற நரி மாதிரி இடுங்கி நிக்கிற கண்ணு.

சின்ன மூக்கு துவாரம் இரண்டும் பெருசு. முருங்க மரத்துல அட புடிச்சு பொட்டிக்குப் பூட்ன மாதிரி சின்ன வாய்க்குப் பெரிய உதடு. பெருங்கொண்ட மண்ட. அதுல பூரானங்க குடும்பத்தோட உள்ள புகுந்து சுருண்டுக்கிட்டு வெளியே றவே மாட்டோம்ன்னு வெவகாரம் பண்ற மாதிரி சுருட்ட முடி.



ரொம்ப உசரமில்லை கட்டையன். அதுக்காக அவன் குட்டையனுமில்ல. கருந்தேக்கங் கட்டைய எழச்சு எழச்சுப் பண்ண மாதிரி நெஞ்சுக் கூடு. எண்ணய அப்பிப் அப்பிக் கருங் கல்லுச் செலைக்குக் கடைசியாக ஒரு நெறம் வரும் பாருங்க... அந்தக் கெட்டிக் கறுப்பு கட்டையன் கறுப்பு. காதுக்குக் கீழ எடது கழுத்துல ஓணான் ஒண்ணு தலகீழாகத் தொங்குற மாதிரி ஒரு தழும்பு. பதினாறு பதினேலு வயசுல திருட்டு ஆடு பங்கு பிரிச்ச தகராறுல குத்துப்பட்டது.

அவன் வேட்டிய மடிச்சுக் கட்னாத்தான் விசேசம். நடந்துபோற தூணுக காலுக ரெண்டும். அதுல கட்டுவிரியங் குட்டிக சுருண்டு கிடக்குற மாதிரி முடிச்சு முடிச்சா முண்டு கட்டிக் கெடக்கும் நரம்புக. அவன் நடந்து போனா ஊரே அத வேடிக்க பாக்கும்; நண்டான் சூண்டான் கண்டா பயந்து ஓடி ஒளிஞ்சு போகுங்க.

அந்த ஊரிலேயே பொதுவா யாரும் சிரிக்கிறதல்ல. அதுலயும் கட்டையன் சிரிக்க யாரும் பார்த்ததில்ல. அவன் எப்பவாச்சும் சிரிச்சிருந்தாலும் அந்தச் சிரிப்பை வாங்கி வெளிய அனுப்ப வேணுங்கிற வசதியில்ல மூஞ்சியில.

பஞ்சாயத்தக் கூட்டச் சொன்னவன் நீயி. வெவகாரம் ஒப்பிக்க வேண்டியவன் நீயி. தீர விசாரிக்காம எப்படித் தீர்ப்புச் சொல்றது? பிரச்சினை என்னான்னு பேசப்பா சபையில.

அய்யா! போனாப் போகுது– பரம்பரைப் பகை திரட்டுமேன்னு தான் கருவாச்சிய கல்யாணம் பண்ணினேன். வாழ வந்த பெறகு தான் அவ வகிசி தெரியுது. அவ கஞ்சி காச்சிறால்ல. செவக்கி அடுப்பெரிக்கத் தெரியல. கடலெண்ண ஊத்தித் தாளிக்கச் சொன்னா வேப்பெண்ண ஊத்தி வெளாவிற. விடிஞ்சு எந்திரிக்கிறால்ல. மேலு வலிக்குது மேலு வலிக்குதுன்னு பொந்துக்குள்ள போன நண்டு மாதிரி பொத்திப் பொத்திப்படுத்துக் கிறா.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

# கவலைகள் இன்றி வாழ்தல்!

## ஆன்மீகம் 87

..நீங்கள் விழிப்புணர்வுடன் இருக்க கற்றுக் கொள்ளும் பொழுது உங்கள் மனதை உங்கள் விருப்பப்படி உபயோகிக்க முடியும். அது உங்கள் கையில் ஒரு இன்றியமையாத கருவியாகிவிடுகிறது. நீங்கள் அதை விரும்பும்பொழுது உபயோகிக்கலாம். அது ஒரு அபாயகரமான எதிரி என்ற நிலையிலிருந்து ஒரு நம்பத்தக்க நண்பன் என்ற நிலைக்கு மாறி விடுகிறது.

உங்களுடைய உள்பேச்சு குறையும் பொழுது உங்களுடைய tps (ஒரு வினாடியில் வரும் எண்ணங்கள்) குறையும் பொழுது– இது ஒரு வினாடியில் ஒரு பகுதி நேரம் நிகழுமானால்கூட, அந்த ஒரு நொடியில் ஒரு பகுதி நேரத்தில் நீங்கள் நிகழ்காலத்தில் முழுமையாக இருக்கிறீர்கள்.

அப்பொழுது உங்களால் உங்கள் இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும் ஒரு திறந்த புத்தகம்போல் அணுக முடியும். உங்களுடைய உள்பேச்சு அதிகமாக இருக்கும் பொழுது tps-ம் அதிகமாக இருக்கும். அதனால் நீங்கள் எப்பொழுதுமே இறந்த காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோதான் இருப்பீர்கள். ஒருபோதும் நிகழ்காலத்தில் இருக்க மாட்டீர்கள்.

இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் அணுகும் திறன் என்று நான் எதைச் சொல்கிறேன் என்பதை உங்களுக்கு தெளிவாக விளக்குகிறேன்.



நீங்கள் ஒரு சொற்பொழிவிலோ அல்லது விருந்திலோ இருக்கும் பொழுது திடீரென்று இந்தக் காட்சிகள் ஏற்கனவே நிகழ்ந்ததைப் போல் உணருகிறீர்கள். [illegible] இடம் அங்கிருக்கும் சில [illegible]ட்கள் கூட எல்லாக் காட்சிகளும் இதற்கு முன் ஏற்கனவே நிகழ்ந்திருப்பதாகவும், இப்பொழுது மீண்டும் ஒரு முறை நடப்பதைப் போலவும் உணர்கிறீர்கள். நீங்கள் உலுக்கப்படுகிறீர்கள். [illegible]றன்று நீங்கள் வெகு [illegible] தொடர்பு கொள்ளாத உங்கள் நண்பரைப் பற்றி நினைக்கிறீர்கள். அவர் தொலைபேசியில் உங்களை அழைக்கிறார். அடுத்த கணங்களில் என்ன நடக்கப் போகிறது என்பதை உங்களால் முன்கூட்டியே சொல்ல முடிகிறது. இதுபோன்ற சம்பவங்கள் நிகழும் பொழுது நீங்கள் உலுக்கப்படுவதாக உணர்கிறீர்கள். உண்மையில் நீங்கள் உலுக்கப்பட்டு நிகழ்காலத்திற்குள் தள்ளப்படுகிறீர்கள். அவ்வளவுதான் அதுகூட எதிர்பாராத விதமாக வேண்டுமென்றே நிகழ்ந்ததல்ல!

நீங்கள் ஒருபோதும் விழிப்புடன் நிகழ்காத்தில் இருப்பதேயில்லை. எப்பொழுதும் இறந்த காலத்திலோ அல்லது எதிர்காலத்திலோதான் இருக்கிறீர்கள்.

நீங்கள் இறந்த காலத்திலிருந்து எதிர்காலத்திற்கு நிகழ்காலத்தைத் தொடாமலேயே சென்றுவிடுகிறீர்கள். இதுதான் உண்மை. ஆனால், ஒரு கணம் எதிர்பாராத விதமாக உங்கள் எண்ணங்கள் -tps- குறைந்து நீங்கள் உலுக்கப்பட்டு நிகழ்காலத்திற்குள் தள்ளப்படுகிறீர்கள்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியாவில் தங்கியுள்ள ஈழத்தமிழர்களும், அவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளும்

இலங்கைக்குத் திரும்பி வரும் தமிழ் மக்களில் சிலர் ஒரு பிரச்சினையுமின்றி நாட்டிற்குள் பிரவேசிக்கின்றனர். ஆனால், இவர்கள் மீது ஏதாவது சந்தேகம் ஏற்படும்போது இவர்களது கடந்த காலம் தொடர்பாக விசாரிக்கப்பட்டு விமான நிலையத்தில் வைத்தே இவர்கள் தடுத்து வைக்கப்படுகின்றனர்.

இந்நிலையில் இலங்கைக் குத் திரும்பும் தமிழ் மக்கள்




Malaysian Tamils protest அகதி நிலையை உறுதிப்படுத்தும் அட்டைகளை வைத்திருந்த போதிலும், இவ்ர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் என குற்றம் சுமத்தப்பட்டு இந்த ஆண்டில் சிலர் மலேசியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர். இந்தச் சூழலானது மலேசியாவில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு மேலும் பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது.

**இவ்வாறு Al Jazeera ஊடகததில் கோலாலம்பூரிலிருந்து Kate Mayberry எழுதியுள்ள செய்திக் கட்டுரையிலிருந்து தமிழாக்கம் பிரசுரிக்கப்படுகிறது**

தற்போது மலேசியாவில் புகலிடம் கோரியுள் இலங்கையைச் சேர்ந்த 41 வயதான மாலா அச்சத்தை மறைக்க முயற்சித்துக்கொண்டு தனது கதையைக் கூறினார். இவரது நடுங்கும் கைகளில் தனது குடும்பத்தவர்கள் இலங்கையின் வடக்கில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக எவ்வாறான துன்பங்களை அனுபவித்தனர் என்பதை விரிவுபடுத்திய எட்டுப்பக்க முறைப்பாட்டு மனு ஒன்றை வைத்திருந்தார்.

இந்த மனுவானது ஐ.நா அகதிகளுக்கான உயர் ஆணையாளரிடம் கையளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்தது. தனக்கும் தனது மூன்று பிள்ளைகளுக்கும் ஐ.நா வரையறையின் பிரகாரம் அகதி நிலை வழங்கப்பட வேண்டும் எனவும், இதன் மூலம் தானும் தனது பிள்ளைகளும் உறுதியான வாழ்வை வாழமுடியும் எனவும் மாலா குறிப்பிட்டிருந்தார். "ஒவ்வொரு நாளையும் நான் மிகவும் அச்சத்துடனேயே கழிக்கிறேன்" என மாலா தெரிவித்தார். இங்கு இவரது உண்மையான பெயர் மாற்றப்பட்டுள்ளது.

தற்போது மலேசியாவிலுள்ள 4,300 இலங்கைத் தமிழ் அகதிகளில் பெரும்பாலானவர்கள் பல ஆண்டுகளாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழ்ந்துள்ளனர். 2009 இல் இலங்கையில் தொடரப்பட்ட உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து மலேசியாவில் தஞ்சம் புகுந்த இலங்கைத் தமிழரகளில் பலர் தமது சொந்த நாட்டுக்குச் சென்றபோதிலும், ஏனையோரின் வாழ்வு பாதிப்படைந்துள்ளது.

அகதி நிலையை உறுதிப்படுத்தும் அட்டைகளை வைத்திருந்த போதிலும் இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் என குற்றம் சுமத்தப்பட்டு இந்த ஆண்டில் சிலர் மலேசியாவில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர். இந்தச் சூழலானது மலேசியாவில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு மேலும் பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது

"இந்த நிலையானது நாங்கள் அனைவரும் வெளிச்சத்தை நோக்கி ஒன்றாகச் சென்றுகொண்டிருந்த போது திடீரென இருட்டில் அகப்பட்டுக் கொண்டுள்ளது போன்ற உணர்வைத் தோற்றுவிக்கிறது" என மலேசியாவிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் நிறுவனத்தின் நிர்வாக உறுப்பினரான றஞ்சினி பாஸ்கரன் தெரிவித்தார். "இந்த நிலையில் மக்கள் எவ்வாறு வாழ முடியும்?" எனவும் இவர் வினவுகிறார்.

மலேசியாவில் அகதி நிலையைத் தீர்மானிப்பதற்குப் பொறுப்பான ஐ.நா அகதிகளுக்கான உயர ஆணையகத்துடன் மலேசியாவிலுள்ள இலங்கைத் தமிழர்கள் தொடர்புகளைப் பேணுவதற்கு மலேசியாவிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் நிறுவனம் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்டது. இலங்கைத் தமிழ் அகதிகள் நிறுவனமானது மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரின் புறநகர்ப பகுதியில் செயற்படுகிறது. இந்நிறுவனமானது மலேசியப் பாடசாலைகளில் அங்குள்ள அகதிகள் கல்வி கற்பதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளதால் இவர்களுக்கான கல்வியை வழங்குவதுடன், நடைமுறைசார் ஆலோசனைகள், உளவியல்சார் ஆதரவுகளையும் வழங்கி வருகிறது.

கடந்த ஆண்டில் அகதிநிலை கோரி விண்ணப்பிக்கப்பட்டவர்களுள் குறைந்தது 60 பேருக்காவது அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாகவும், ஆனால் மலேசியாவிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கான நிறுவனமானது இதனை எதிர்த்து வாதிடுவதாகவும் இவர்களின் அகதிக் கோரிக்கை நியாயமானதே என உறுதியாகக் கூறுவதாகவும் அகதிகளுக்கான சட்டவாளர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறு அகதி நிலை மறுக்கப்பட்டவர்கள் இன்னமும் ஒரேயொரு தடவையே தமது கோரிக்கையை முன்வைப்பதற்கான வாய்ப்பைக் கொண்டுள்ளதால் இவர்கள் தமது பிரச்சினைகளை மீண்டும் விரிவாக எழுதிக் கையளித்துள்ளனர்.

150,000 வரையான அகதிகளின பதிவுகளைக் கொண்டுள்ள ஐ.நா அகதிகள் நிறுவனமானது உண்மையில் பாதுகாப்புத் தேவைப்படுபவர்களை அடையாளங்கண்டு அவர்களுக்கு அகதிநிலையை வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதாக கூறியுள்ளது. "இந்த ஆண்டு நாங்கள் மீண்டும் மீண்டும் எடுத்துக்கூறியும் அதனை ஏற்காது அகதிகள் சிலர் அவர்களது நாட்டுக்குத் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்" என மலேசியாவுக்கான ஐ.நா அகதிகள் உயர் ஆணையகத்தின் பிரதிநிதி றிச்சார்ட் ரவ்லே தெரிவித்துள்ளார்.

"நாங்கள் சிலரை அவர்களது நாட்டுக்குத் திருப்பியனுப்ப வேண்டாம். இவர்கள் தொடர்பாக ஆராய வேண்டும் என அழுத்தம் திருத்தமாக எடுத்துக்கூறியும் அது பலனளிக்கவில்லை. அகதிகளை அவர்களது சொந்த நாட்டுக்குத் திருப்பியனுப்புவதைத் தடுப்பதற்கு எமக்கென ஒரு வரையறை உள்ளது. அதற்கப்பால் நாங்கள் எதுவும் செய்ய முடியாது" என றிச்சார்ட் ரவ்லே குறிப்பிட்டார்.

"எங்களால் முடிந்தவரை இந்த அகதிகளைப் பாதுகாப்பதற்கான பரிந்துரைகளையும் விளக்கத்தையும் நாங்கள் வழங்குகிறோம். ஆனால் மலேசியா போன்ற நாடுகளில் அந்நாடுகளின் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளைக் கட்டுப்படுத்தும் உரிமை எமக்கில்லை" என அவர் மேலும் குறிப்பிட்டார்.

தமிழ்ப் புலிகள் என குற்றம் சுமத்தப்பட்ட மூன்று பேர் மே மாத நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இரவு நேரத் தேடுதல் நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்டனர். இவர்களில் இருவர் ஐ.நா அகதிகள் அட்டையையும் மூன்றாவது நபர் தனது விண்ணப்பத்திற்கான பெறுபேற்றுக்காகக் காத்திருந்த நிலையிலும் கைதுசெய்யப்பட்டனர். இதில் தலையீடு செய்வதற்கான வாய்ப்பை ஐ.நா அகதிகள் நிறுவனம் கொண்டிருக்கவில்லை.

இந்த மூன்று பேரும் தற்போது இலங்கை இராணுவப் புலனாய்வாளர்களால் நிர்வகிக்கப்படும் பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அகதி என அடையாளங் காணப்படுபவர் அவரது சொந்த நாட்டில் உயிர் ஆபத்தைச் சந்திக்கும் நிலையிலிருக்கும் போது அவரைத் திருப்பியனுப்புவதானது மிகவும் மோசமான மீறலாகும் என யோர்க் பல்கலைக்கழகத்தின் பிரயோகிக்கப்பட்ட மனித உரிமைகளுக்கான மையத்தின் ஆய்வாளரும் விரிவுரையாளருமான அலைஸ் நா மின்னஞ்சலில் குறிப்பிட்டுள்ளார்.

"உயிர் அச்சுறுத்தலிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அகதி நிலை வழங்கியவர்களை நாடு கடத்துவதானது அனைத்துலகச் சட்டத்தின் பிரகாரம் அடிப்படை மீறலாகவே கருதப்படுகிறது. 1951 அகதிகள் சாசனத்தில் கைச்சாத்திட்ட மற்றும் கைச்சாத்திடாத நாடுகள் அனைத்தும் இதனைக் கடைப்பிடிக்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளன" என அலைஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா உட்படப் பல்வேறு நாடுகளின் நம்பகமான புலனாய்வுத் தகவல்களை ஆதாரமாகக் கொண்டே மலேசியாவிலிருந்த புலிகள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்களை இலங்கைக்கு நாடு கடத்தியதாக அகதிகள் சாசனத்தில் கைச்சாத்திடாத மலேசியா தெரிவித்துள்ளது.

"இவர்களுக்கு ஐ.நா அகதி நிலை வழங்கிய போது இவர்கள் தொடர்பான தகவலை அறிந்திருக்கவில்லை. சில தகவல்கள் குறிப்பாக புலனாய்வு சார் தகவல்கள் அனைத்துத் தரப்பினராலும் அறியப்படுவதில்லை" என மலேசியாவின் உள்விவகார பிரதி அமைச்சர் Wan Junaidi Tuanku Jaafar சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் மேலும் நால்வரை யூலை மாதத்தில் மலேசியா கைது செய்துள்ளது. 2009 லிருந்து இது வரை கைதுசெய்யப்பட்ட தமிழ்ப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் 14 பேரில் ஏழு பேர் அகதிநிலையை உறுதிப்படுத்தும் அட்டைகளை வைத்திருந்தனர்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும், இலங்கையின் வடக்கில் இன்னமும் மக்கள் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர். முன்னாள் போர் வலயத்தில் இலங்கை இராணுவத்தினர் தொடர்ச்சியான கண்காணிப்பை மேற்கொள்கின்றனர்.

இறுதிக் கட்ட யுத்தத்தில் பங்குபற்றிய இரு தரப்புக்களாலும் இழைக்கப்பட்ட பல்வேறு போர்க் குற்றங்களை விசாரணை செய்வதற்கு இலங்கை அரசாங்கமானது ஐ.நாவுக்கு பல்வேறு எதிர்ப்புக்களை வழங்கியது. "இலங்கையில் நிலைமை சாதாரணமாக உள்ளது எனக் கூறமுடியாது" என கொழும்பிலுள்ள இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்று இயக்குனர் ஜெகன் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

"இலங்கையின் வடக்கிற்கு வெளிநாட்டுக் குடியுரிமை பெற்றவர்கள் பயணிப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கில் இலங்கை இராணுவம் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளது. எப்போதும் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற, கைது செய்யப்படுகின்ற நிலை காணப்படுகிறது" என ஜெகன் பெரேரா மேலும் கூறியுள்ளார். தான் இலங்கை இராணுவத்தால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாக தனது நேர்காணலில் தெரிவித்த போதிலும் அந்த விடயம் முதலாவது விண்ணப்பத்தில் குறிப்பிடப்படவில்லை எனக் கூறி தனது அகதி நிலைக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாக மாலா குறிப்பிட்டார்.

"எனக்கு என்ன நடந்தது என்பதை முதலில் கூற நான் தயக்கமுற்றேன். ஆனால், எனக்கு வழங்கப்பட்ட உளவள ஆலோசனையின் பின்னர் இது தொடர்பாக என்னால் கூறமுடிந்தது" என்கிறார் மாலா. தமது அகதி நிலை மறுக்கப்பட்ட போதிலும் பெரும்பாலான தமிழர்கள் தொடர்ந்தும் மலேசியாவில் தங்கியிருப்பதே தமது உயிருக்குப் பாதுகாப்பானது எனக் கருதுகிறார்கள்.

தாம் தமது சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படலாம் என்கின்ற அச்சத்தில் இலங்கைத் தமிழர்களான கிறிஸ் மற்றும் அவரது மனைவி ஆகிய இருவரும் மலேசியாவில் தங்கியுள்ளனர்.

தாம் தமிழ்ப் புலிகளுடன் செயற்பட்டதாக இலங்கை அரசாங்கம் குற்றம் சுமத்திய நிலையிலேயே 2010 இல் நாட்டை விட்டு வெளியேறியதாகவும், இந்நிலையில் தாம் மீண்டும் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்படக் கூடாது என இறைவனிடம் பிரார்த்திப்பதாகவும் இவர்கள் கூறினர். "எமது அகதி நிலை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டபோது நாம் மிகவும் வேதனைப்பட்டோம். நாங்கள் எமது வாழ்வை நினைத்து அச்சப்பட்டதாலேயே மலேசியாவில் தஞ்சம் புகுந்தோம்.

நாங்கள் மீண்டும் எமது நாட்டுக்குத் திரும்ப முடியாது. அவ்வாறு செல்வதானது நாங்கள் சாவதற்குச் சமமாகும். அத்துடன் எமது வாழ்வும் முடிந்துவிடும்" என கிறிஸ் தனது உணர்வுகளைக் கட்டுப்படுத்த முயற்சித்தவாறு தெரிவித்தார்.

*-நித்தியபாரதி-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை-2014

## மாதிரி வினாத்தாள்- யாழ். வலயம்

### தொடர்பாடல் ஊடகக்கற்கை I

3 மணித்தியாலங்கள்

*அறிவுறுத்தல்கள்.*

*எல்லா வினாக்களுக்கும் விடை தருக.*

*1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (i) (ii) (iii) (iv) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிந்தெடுத்து, அதனை குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி இடுவதன் மூலம் காட்டுக.*

20.தொலைக்காட்சி ஊடகம் வழியாக செய்தி ஒலிபரப்புச் செய்யப்படும் வழிமுறைகளாக அமைவன

1)குரல்கள், இசைகள் 2)அசையும், அசையா காட்சிப்படங்கள்
3)நிழற்படம், ,எழுத்துக்கள் 4)குரல்கள், நிழற்படம்

21. செய்தி அறிக்கையின் இறுதி அறிக்கையில் "அறியப்படக் கூடியதாக உள்ளது", " நம்பப்படுகிறது" போன்ற சொற்றொடர்கள் பிரயோகிக்கப்படுவது

1) செய்தியின் அமைப்பு, ஒழுங்கமைப்பு நேர்த்தியாக அமையாத போது
2) செய்தி அறிக்கை உறுதிப்படுத்தப்பட்டதாக காணப்படும் போது
3) உயர்மட்ட தகவல் மூலம் காணப்படும் போது
4) தகவல் மூலங்களில் பலவீனம் காணப்படும் போது

22.வில்லை ஊடாக ஒளி செல்லும் துவார அளவை கட்டுப்படுத்துவதன் மூலம் கமராவுக்குள் வரும் ஒளியை கட்டுப்படுத்த பயன்படுவது

1)வில்லை 2)கமராத்துவாரம்
3)வில்லைத்துவாரம் 4)புகைப்படல நாடா

23.வேலையுலகு, அபிவிருத்தி, சந்தை, வர்த்தக நிலைமைகளை வெகுசன ஊடகங்கள் பிரதிநிதித்துவப்படுத்துவது பின்வருமாறு குறிப்பிடப்படும்

1)பொருளாதார ஊடக பிரதிநிதித்துவம் 2)சமூக ஊடக பிரதிநிதித்துவம்
3)அழகியல் சார் பிரதிநிதித்துவம் 4)சமய ஒழுங்கு முறை பிரதிநிதித்துவம்

24.நிறுவனம் ஒன்றின் உள்ளக தொடர்பாடல் இடம்பெறுகின்ற வழிமுறைகளாக அமையக்கூடியன

1)அனுசரணை, கடிதங்கள், சுவரொட்டி, உபசாரங்கள்
2)உபசாரங்கள், அனுசரணை, உள்ளக மாநாடு, அழைப்பு மணி
3)சுவரொட்டி, கண்காட்சி, அழைப்பு மணி, கடிதங்கள்
4)அழைப்பு மணி, உள்ளக மாநாடு, உபசாரங்கள், அறிவிப்புப் பலகை

25.இலக்க(Digital)புகைப்படத் தொழில்நுட்பத்தின் அனுகூலமாக அமையாதது

1)உயர் ஒளி உணர்வு வீச்சுக்களில் புகைப்படம் பிடிக்க முடியும்
2)புகைப்படலத்தை ஒரு தடவை மட்டும் பயன்படுத்தலாம்
3)கணனி வலையமைப்புடன் இலகுவாக இணையக்கூடியன
4)புகைப்படலத்தை பதிப்பு செய்யவும் மற்றும் செம்மைப்படுத்தவும் இலகுவானது

26.வெகுசன தொடர்பாடல் ஊடாக பெறுமானங்கள், ஆற்றல்களை அடிப்படையாகக் கொண்டு ஒருவரைப்பற்றி தோற்றப்பாடுகள் கட்டியெழுப்பப்படுவது பின்வருமாறு அழைக்கப்படும்

1)குடியுரிமை 2)அபிவிருத்தி
3)பண்பாடு 4)சமூகப்படிமம்

27.சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரையில் புகைப்படங்களும் உள்ளடக்கப்பட்டு இருந்தன. இவ்வாறான புகைப்படங்கள்

1) சிறப்பு புகைப்படம் 2) விளம்பர புகைப்படம்
3) செய்தி புகைப்படம் 4) துரித புகைப்படம்

28. ஆசிரியர் கற்பித்தலின் போது புத்தகம் ஒன்றின் பகுதியை உடனடியாக கருவி மீது வைத்து எறிவைக்கு உட்படுத்தி காட்சிப்படுத்தினார். இதற்கு மிகப் பொருத்தமான கருவி

1) பல்லூடக எறிவை 2) மேற்தலை எறிவை
3) துரித எறிவை 4) வழுக்கி எறிவை

29. பத்திரிகை நிறுவனமொன்றில் சிறப்பு அம்சப் பிரிவில் பணியாற்றுவோர்

1) சிறப்புக் கட்டுரையாளர், சுயாதீன எழுத்தாளர்
2) சுயாதீன எழுத்தாளர், செம்மைப்படுத்துவோர்
3) சிறப்புக் கட்டுரையாளர், ஒப்புநோக்குநர்
4) சுயாதீன எழுத்தாளர், ஒப்புநோக்குநர்

30. அறிவிப்பாளர் - முன்வைப்புநர் இயல்பு நிலையாக அமைவன

1)தயாரிக்கப்படும் பிரதியை முன்வைப்பவர் - இயல்பாக முன்வைப்பவர்
2)படைப்புமிக்க நிலையில் காணப்படுபவர் - தயாரிக்கப்படும் பிரதியை முன்வைப்பவர்
3)ஆக்கத்திறன் வாய்ந்த பணி - வாசிப்புப் பணி
4)ஆவணத்துடன் பணிபுரிதல் - ஆவணமின்றி சந்தர்ப்பத்திற்கேற்ப செயற்படுபவர்

31. சுயாதீன தொலைக்காட்சி சேவையானது

1) வரையறுக்கப்பட்ட நிறுவ்னம் 2) அரச கம்பனி
3) அரச கூட்டுத்தாபனம் 4) தனியார் கம்பனி

32. ஊடகத்துறை தொடர்பான கருத்தரங்கு ஒன்றில் ஊடகவியலாளர் இயல்பு பற்றி பின்வரும் கருத்துக்கள் பகிரப்பட்டன

A –ஊடக நிறுவனத்திற்கு செய்திகளை தகவல் மூலத்தை அடிப்படையாக கொண்டு வழங்குபவர்
B –ஊடகவியலாளர் தொழில்சார் வாண்மையாளர்
C –ஊடக நிறுவன கொள்கைகளுக்கு செப்பனிடுபவர்கள்
D –செய்திகளை செய்தி அறையில் செம்மைப்படுத்துபவர்

மேற்படி கருத்துக்களில் ஊடகவியலாளர் இயல்புகளாக அமைவன

1)Aயும்,C யும்
2)Aயும்,Bயும்,Dயும்
3)Aயும்,Bயும்,C யும்
4)Aயும்,Cயும்,D யும்

33. முறைசாரா தொடர்பாடலின் பலமாக கொள்ள முடியாதது

1)முறைசார் தொடர்பாடலுக்கு சவாலாகக் காணப்படுதல்
2)கீழ்மட்ட ஊழியர்களுக்கு இடையில் நெருக்கமான இடைத்தொடர்பை உருவாக்கும்
3)முறைசார் தொடர்பாடல் வலுப்பெறுவதற்கு உதவுதல்
4)முறைசார் தொடர்பாடல் வழியாக கிடைக்காத பல்வேறு தகவல்களைப்பெறமுடிதல்

34. பின்வருவனவற்றுள் தொடர்பாடல் தடையை இழிவளவாக்குவதற்கான வழிமுறையாக அமையாதது

1) உணர்வுபூர்வ தன்மையை நீக்குதல் 2) ஒரு வழித் தொடர்பை வலுப்படுத்தல்
3) மொழியை நேர்த்தியாக பயன்படுத்தல் 4) இருவழித் தொடர்பை வலுப்படுத்தல்

35.உரையாடல் அற்ற வாய்மொழி அற்ற தகவல் வெளிப்பாட்டு வழிமுறைக்கு எடுத்துக்காட்டுக்களாக அமைவன

1) உடல்மொழி, ஒப்பனை, கையசைவுகள், தொடுகை, வர்ணித்தல்
2) அமைதி, கதைகூறல், உடல்மொழி, முக வெளிப்பாடு, ஆடையலங்காரம்
3) விளக்குதல், ஒப்பனை, கையசைவுகள், உடல்மொழி, தொடுகை
4) ஒப்பனை, உடல்மொழி, கண்தொடர்பு, கையசைவுகள், தொடுகை

36. குழுத் தொடர்பாடல் பற்றிய கருத்துக்கள் பின்வருமாறு முன்வைக்கப்பட்டுள்ளன

A –குழு அங்கத்தவரை கட்டுப்படுத்தலும், வினா எழுப்புவதை மறுத்தலும்
B –குழு அங்கத்தவர்கள் நேர முகாமையை பின்பற்றுதல் அவசியமானது
C –குழுவின் அங்கத்தவர் பங்களிப்புக்களை ஊக்குவித்தல்
D –குழு அங்கத்தவர்களின் கருத்துக்களை செவிமடுத்தலும், மதிப்பளித்தலும்

மேற்குறித்தவற்றுள் குழுத் தொடர்பின் போது பின்பற்ற வேண்டியவை

1)Aயும்,C யும்
2)Aயும்,Bயும்,D யும்
3)B யும் C யும்,D யும்
4)A, B,C,D எல்லாம்

37. ஷெனோன் மற்றும் வீவர் தொடர்பாடல் மாதிரியில் தகவல் சென்றடையும் இடம் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது

1) உச்சஸ்தாளம் (Destination) 2) மூலம் (Source)
3) பெறுநர் (Receivers) 4) தாக்கம் (Effect)

38. பின்வரும் வெகுசன ஊடகங்களில் நவீன ஊடகங்களை new media குறித்து நிற்பன

1) பத்திரிகை, தொலைபேசி, இணையம், வலையமைப்புகள்
2) வலையமைப்புகள், கைத்தொலைபேசி, இணையம், சமூக ஊடகங்கள்
3) சமூக ஊடகங்கள், வானொலி, தொலைக்காட்சி, இணையம்
4) வானொலி,தொலைக்காட்சி, சமூக ஊடகங்கள், கைத்தொலைபேசி

39. "X" என்பவர் தகவலை முன்வைக்கும் போது "Y" பெறுநராகவும்,"Y"என்பவர் தகவலை முன்வைக்கும் போது "X" பெறுநராகவும் தொடர்பாடல் செயன்முறையில் ஈடுபடும்போது அவதானிக்கப்படக்கூடிய தொடர்பாடல் வகையும் வடிவமும் முறையே

1) குழுத் தொடர்பாடல், வாய்மொழிமூலத் தொடர்பாடல்
2) நபரிடைத் தொடர்பாடல், வாய்மொழிசாரா தொடர்பாடல்
3) நபரிடைத் தொடர்பாடல், வாய்மொழிமூல தொடர்பாடல்
4) குழுத் தொடர்பாடல், வாய்மொழிசாரா தொடர்பாடல்

40. "தெரு வழியில் நபர் ஒருவருடன் உரையாடுதல் வகுப்பாசிரியருடன் உரையாடுதல், பெற்றோருடன் உரையாடுதல்" சந்தர்ப்பங்களுக்கு பொருத்தமான இடைவெளிகளை முறையே குறிப்பன

1) நேச இடைவெளி, சமூக இடைவெளி, தனியாள் இடைவெளி
2) தனியாள் இடைவெளி, சமூக இடைவெளி, நேச இடைவெளி
3) நேச இடைவெளி, சமூக இடைவெளி, தனியாள் இடைவெளி
4) சமூக இடைவெளி,தனியாள் இடைவெளி, நேச இடைவெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துலங்கா மர்மம்

**“மாவீரர்கள் ஒரு சத்திய இலட்சியத்துக்காக மரணிக்கிறார்கள். அவர்களது சாவு, சாதாரண மரண நிகழ்வு அல்ல... எனது தேச விடுதலையின் ஆன்மீக அறைகூவலாகவே மாவீரர்களது மரணங்கள் திகழ்கின்றன. சத்தியத்துக்காக சாகத் துணிந்துவிட்டால், ஒரு சாதாரண மனிதப் பிறவியும் சரித்திரத்தைப் படைக்க முடியும். எமது விடுதலைப் போராட்டத்தின் பளுவை அடுத்த பரம்பரை மீது சுமத்த நாம் விரும்பவிலலை. எமது கடின உழைப்பின் பயனை அவர்கள் அனுபவிக்கவேண்டும். எமது வாழ்நாளில் எமது இலட்சியம் நிறைவேறாது போகலாம். அப்படியாயின், அடுத்த தலைமுறைக்குப் போராட்டத்தைக் கையளிக்கும் தெளிந்த பார்வை எமக்கு உண்டு!“ இப்படிச் சொன்னவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன்! ,,**




நவம்பர் 26ஆம் திகதி பிரபாகரனுக்கு 60ஆவது பிறந்தநாள். அதாவது அவருக்கு இது மணி விழா ஆண்டு. வழக்கமாகவே நவம்பர் மாதக் கடைசி என்பது ஈழத்தமிழர்கள், ஈழ ஆதரவாளர்கள் உணர்ச்சிபூர்வமாகக் கொண்டாடும் நாட்களாக அமையும்., நவம்பர் 27ஆம் திகதி புலிகள் அமைப்பின் முதல் களப் போராளியான கப்டன் சங்கர் மரணித்த நாள். அதற்கு முந்தைய நாள் நவம்பர் 26 பிரபாகரன் பிறந்தநாள். எனவே, 25, 26, 27 ஆகிய மூன்று நாட்களையும் மாவீரர் தினங்களாக விடுதலைப்புலிகள் அமைப்பு கொண்டாடும். தலைமறைவு வாழ்க்கையில் இருந்த பிரபாகரன், நவம்பர் 27ஆம் திகதிதான் வானொலியில் பேசுவார். அதற்காக உலகம் முழுவதும் தமிழர்கள் அந்த நாளுக்காகக் காத்திருபபார்கள். 2009ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பிறகு, புலிகளின் வானொலி செயற்படவில்லை. அதனால் மாவீரர் தின உரைகளும் இடம்பெறவில்லை.

“பிரபாகரன் போரில் கொல்லப்பட்டார்' என்று இலங்கை அரசு அறிவித்தது. ஆனாலும் பிரபாகரன் பிறந்தநாள், மாவீரர் தினக் கொண்டாட்டங்கள் தொடர்ச்சியாக நடக்கின்றன. 1954ஆம் ஆண்டு வேலுப்பிள்ளை பார்வதி தம்பதியருக்கு வல்வெட்டித் துறையில் பிறந்தவர் பிரபாகரன். அவருக்கு இது 60 ஆவது பிறந்த நாள்.

வானவெளியில் வாண வேடிக்கைகள் நடக்கட்டும்... பட்டாசு வெடிகள் முழங்கட்டும் சர்க்கரைப் பொங்கல் வழங்கப்படட்டும் ஆலயங்கள், வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்கின்றவர்கள் பூசை நடத்தட்டும். பிரபாகரன் என்ற பெயரை உச்சரித்தாலே மானத் தமிழனின் நாடி நரம்புகளில் மின்சாரம் பாயுமல்லவா? பிரபாகரன் பிறந்தநாள் விழாவில் தமிழர்கள் எழுப்பும் வாழ்த்து முழக்கம் விண்ணை முட்டட்டும். சுதந்திரத் தமிழ் ஈழ விடியலுக்குக் கட்டியம் கூறும் விதத்தில் தாய்த் தமிழகத்திலும், உலகம் எங்கிலும் தமிழர்கள் தமிழ்க்குலத் தலைவனின் பிறந்த நாளைக் கொண்டாடுங்கள் என்று பகிரங்கமாகவே அழைப்பு விடுக்கிறார் வைகோ.

## அவன் பெயரை உச்சரித்தாலே நாடி நரம்பில் மின்சாரம் பாயுமல்லவா-வைகோ முழக்கம்

“காலம் தந்த தலைவன் மேதகு பிரபாகரன் 60' என்ற தலைப்பில் தஞ்சை முள்ளிவாய்க்கால் முற்றத்தில் 26, 27 ஆகிய இரண்டு நாட்களும் நிகழ்ச்சிகளை நடத்துகிறார் பழ.நெடுமாறன். ஒருவார கால நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடத்தி வருகிறது சீமானின் நாம் தமிழர் கட்சி. இன்னும் பல தமிழர் இயக்கங்கள் விழாக்களைத் திட்டமிட்டு வருகின்றன. ஈழத் தமிழர்கள் உலகம் முழுவதும் பரவி உள்ளார்கள். அவர்கள் வாழும் இடங்கள் அனைத்திலும் கொண்டாடடங்கள் தொடங்க இருக்கிறது.

2009ஆம் ஆண்டு மே மாதம் அது. இலங்கையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கடலோரத்தில் உள்ள வெள்ள முள்ளிவாய்க்கால் பகுதி. இலங்கை இராணுவத்துக்கும் விடுத லைப்புலிகளுக்கும் இடையில் இறுதிகட்டப் போர் உச்சத்தில் இருந்தது. அந்தப் போரில் விடுதலைப்புலிகள் ஒட்டுமொத்தமாக அழிக்கப்பட்டனர் என்று இலங்கை இராணுவம் அறிவித்தது. விடுதலைப்புலிகள் தரப்பில் இருந்து எந்தப் பதிலும் வரவில்லை. பிரபாகரனின் மூத்த மகன் சார்லஸ் ஆன்டனி, விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு தலைவர்கள் நடேசன், புலித்தேவன் உட்பட அந்த இயக்கத்தின் முக்கிய தலைவ ர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர் என்று இலங்கை இராணுவம் அறிவித்தது. அத்துடன் அவர்கள் பிணமாக இருக்கும் படங்களையும் வெளியிட்டனர். அந்த நேரத்தில் பிரபாகரனைப் பற்றி மட்டும் எநதத் தகவலும் வெளிவரவில்லை. மறுநாள், பிரபாகரன், விடுதலை ப்புலிகள் இயக்கத்தின் உளவுப் பிரிவு தலைவர் பொட்டு அம்மான், கடல் புலிகள் தலைவர் சூசை ஆகியோரும் கொல்லப்பட்டு விட்டதாக இலங்கை இராணுவம் அறிவிக்க... உலகத் தமிழர்கள் அனைவரும் செய்வதறியாது கலங்கி நின்றனர். பிரபாகரனின் உடல் மட்டும் கண்டுபிடிக்கப்பட்டதாக வீடியோவையும், புகைப்படங்களையும் இராணுவம் வெளி யிட்டது

அன்றைய காங்கிரஸ் அரசு பிரபாகரனின் போஸ்மார்ட்டம் ரிப்போர்ட்டை கேட்டு விண்ணப்பம் செய்தது. ஆனால் அதனை இலங்கை அரசு தரவில்லை. “பிரபாகரனை உடனடியாக எரித்து அவரது சாம்பலைக் கடலில் கலந்து விட்டோம்' என்று சொன்னார்கள். ஐந்து ஆண்டுகள் ஆகியும் பிரபாகரனின் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டை இதுவரை இலங்கை அரசு மத்திய அரசிடம் ஒப்படைக்கவில்லை. “பிரபாகரனின் அப்பா, அம்மா ஆகிய இருவரும் முகாமில்தான் இருநதார்கள். அவர்களை வைத்து பிரபாகரனின் உடலை உறுதிப்படுத்தி இருக்க வேண்டும்” என்று சொன்னதற்கும் இலங்கையிடம் இருந்து பதில் இல்லை.

இந்தியாவில் 1991ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டது. இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை தடையை நீட்டித்துக் கொண்டே இருப்பார்கள். காங்கிரஸ் ஆட்சி முடியும் போது, ஐந்து ஆண்டுக்கு தடை செய்து விட்டார்கள். இந்தத் தடைக்கான காரணங்களில் ஒன்றாக, “விடுதலைப்புலிகள் இயக்கம் செயற்பட்டு வருகிறது. அவர்கள் தமிழீழத்தையும் தமிழகத்தையும் சேர்த்து ஒரே நாடாக ஆக்குவதற்கான முயற்சிகளையே மேற்கொண்டு வந்தார்கள்' என்று காரணம் சொல்லப்படுகிறது. 2009இல் அழிக்கப்பட்ட இயக்கத்துக்கு 2018 வரைக்கும் தடைவிதிக்கக் காரணமே பிரபாகரன், பொட்டு அம்மான் பற்றிய சந்தேகங்கள்தான் என்றும் சொல்லப்படுகிறது.

முள்ளிவாய்க்காலில் நடந்த இறுதிப் போரின் இனப்படுகொலையை நினைவுபடுத்தும் வகையில் தஞ்சாவூரில் பழ.நெடுமாறன் முயற்சியால் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தை அமைத்தனர். இந்த நினைவு முற்றத்தில் போரில் கொல்லப்பட்டவர்களின் புகைப்படங்கள் வடிவமைக்கப்பட்டு உள்ளன. இறந்தவர்களைப் பற்றிய குறிப்புகளும் இங்கே உள்ளது. அதில் பிரபாகரன் படம் வைகககப்படவில்லை. “பிரபாகரன் உயிரோடு இருக்கிறார். அவர் கொல்லப்பட்டார் என்பதை ஆதாரத்துடன் சொல்லுங்கள். அதன் பிறகு நான் என் பதிலைச் சொல்வேன்” என்று நெடுமாறனும் சொல்லி வருகிறார். ““பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்று எப்படிச் சொல்லி வருகிறீர்கள்?” என்று மத்திய உளவுத் துறை அதிகாரிகள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வந்து நெடுமாறனைக் கேட்டுவிட்டுச் செல்கிறார்கள். “இது நீங்கள் கண்டுபிடிக்க வேண்டியது”என்று அவரும் அவர்களுக்குப் பதில் அளித்து வருகிறார்.

இப்படி இலங்கை அரசு, மத்திய அரசு, புலம்பெயர் தமிழர்கள், ஈழ ஆதரவாளர்கள் அனைவருக்கும் இன்னும் விலகாத மர்மமாகவே இருக்கிறது. பிரபாகரன் தனது வழிகாட்டியாகச் சொன்னது நேதாஜி சுபாஸ் சந்திர போஸை. “இந்தியா உடனடியாக சுதந்திரம் அடைந்தே தீரவேண்டும். அதற்கு ஒரே வழி போர். அதைத் தவிர வேறு வழியே இல்லை' என்று நம்பியவர் நேதாஜி. எல்லோருக்கும் பிறந்தநாள் என்று ஒன்று வந்தால், நிச்சயம் இறந்த நாளும் என்றாவது ஒருநாள் வரும். ஆனால், இறந்தநாள் என்பது மர்ம நாளாகவே இருப்பது நேதாஜிக்கு அடுத்து பிரபாகரனுக்குத்தான்!

**ஜூனியர் விகடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலியா தேர்தலில் ஆதிக்கம் செலுத்தும் இந்திய வம்சாவளியினர்

(பிரிஸ்பேன்)

அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாணத்தில் நாளை மறுதினம் 29 ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தலில் போட்டி, பிரசாரம் என இந்திய வம்சாவளியினர் ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

விக்டோரியா மாகாணத்தில் 1.10 இலட்சத்துக்கும் அதிகமான இந்திய வம்சாவளியினர் வசித்து வருகின்றனர்.

இம்மாகாணத்தில் அதி வேகமாக வளர்ச்சியடைந்து வரும் சமூகமாக இந்திய சமூகம் உள்ளது.

பஞ்சாபி வேகமாக பரவி வரும் மொழியாகவும், இந்துமதம் வேகமாக பரவும் மதமாகவும் உள்ளது.

இந்திய வம்சவாளியினர் இங்கு அதிக முக்கியத்துவம் பெறறு வருகின்றனர்.

தேர்தலில் புறநகர்ப்பகுதிகளில் ஏராளமான இந்தியர்கள் போட்டியிடுகின்றனர்.

லிபரல், லேபர், கிரீன்ஸ், அவுஸ்த்ரேலின் கிறிஸ்டியன்ஸ் என பல்வேறு கட்சிகள் சார்பிலும், சுயேச்சையாகவும் ஏராளமான இந்தியர்கள் போட்டியிடுகின்றனர்.

லிபரல் கட்சி இந்திய வம்சாவளியினர் 6 பேரைக் களமிறக்கியுள்ளது.

அவுஸ்திரேலியன் கிரீன் கட்சி 3 இந்திய வம்சாவளியினரைக் களமிறக்கியுள்ளது.


இத்தேர்தலில் மொத்தம் 896 பேர் போட்டியிடுகின்றனர். இதில், 21 பதிவு பெற்ற கட்சிகள் சார்பில் 789 வேட்பாளர்களும், 107 பேர் சுயேச்சையாகவும் போட்டியிடுகின்றனர்.

இந்தியர்கள் அதிகம் போட்டியிட்டாலும், நாடாளுமன்றத்தில் ஒரு இந்திய வம்சாவளி உறுப்பினர் கூட இல்லை. அதேசமயம் சீனா, இலங்கை, கம்போடியா வம்சாவளியினர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர்.

இந்தியர்கள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவு என, வியந்தம்வாலே கவுன்சிலர் குப்தா, முன்னாள் லேபர் கட்சி வேட்பாளர் மனோஜ் குமார் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

ஆனால், லிபரல் கட்சி வேட்பாளர் புல்விந்தர் சிங், அரசியல் பிரதிநிதித்துவம் அவுஸ்திரேலிய கலாசாரத்துடன் இந்தியர்கள் இணைவதற்குத் துணை புரியும், இம்முறை ஓரிரு இந்தியர்கள் வெற்றி பெறக்கூடும் என தெரிவித்தார். (இ-5)

# சீன நிலக்கரி சுரங்கத்தில் தீ; விபத்தில் சிக்கி 24 பேர் பலி!



சீனாவின் வடகிழக்கு மாகாணமான லியானிங்கில் நிலக்கரி சுரங்கத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில் 24 பேர் உடல் கருகிப் பலியாகினர்.

மேலும், 52 பேர் படுகாயம் அடைந்தனர். சீனாவில் ஹெங்டா நிலக்கரி சுரங்கத்திற்குள் ஊழியர்கள் பணியில் ஈடுபட்டு இருந்த போது இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது. காயம் அடைந்தவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு அங் குள்ள வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். தீ விபத்து சம்பவத்தை அடுத்து ஹெங்டா தனது அனைத்து சுரங்கங்களி லும், பாதுகாப்பு ஏற்பாடுகளை பரிசோதனை செய்வதற்காக பணிகளை நிறுத்தி வைத்துள்ளது. ஹெங்டா நிறுவனத்தில் 4 ஆயிரத்து 600 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். சீனாவில் நிலக்கரி சுரங்கங்களில் விபத்து ஏற்படுவது தொடர் கதையாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




# மனிதவெடிகுண்டுத் தாக்குதலில் சிக்கி நைஜீரியாவில்45 பேர் உடல் சிதறி பலி!

## போகோஹறாம் தீவிரவாதிகள் அராஜகம்

**நைஜீரியாவில் போகோஹறாம் தீவிரவாதிகளின் ஆதிக்கமும் அட்டூழியமும் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் நிலையில் பொதுமக்களை இலக்கு வைத்து நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைப்படைத் தாக்குதலில் 45 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறிப் பலியானதாக தெரிவிக்கப்படுகின்றது.**



நைஜீரியாவின் போர்னோ மாநில தலைநகர் மாய்துகுரியில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடத்தை குறிவைத்து தீவிரவாதிகள் இரண்டு இடங்களில் நேற்று முன்தினம் வெடிகுண்டு தாக்குதல் நடத்தினர். அதில் ஒன்று, பெண் மனித வெடிகுண்டாகும். சந்தையில் நடந்த இந்த தாக்குதல்களில 45இற்கும் மேற்பட்டவர்கள் பலியானதாக சுகாதார பணியாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஏராளமான மக்கள் இறந்ததாக நைஜீரியாவின் தேசிய அவசர நிலை மேலாண்மை முகாமை உறுதி செய்துள்ளது.

ஆனால், எத்தனை பேர் இறந்தார்கள் என்பதை அதிகாரபூர்வமாக வெளியிடவில்லை.

நைஜீரியாவில் மேலும் ஒரு நகரத்தை போகோ ஹராம் தீவிரவாதிகள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததையடுத்து இந்த தாக்குதல் நடந்துள்ளது.

வடக்கு நைஜீரியாவில் இஸ்லாமிய நாட்டை உருவாக்க 5 ஆண்டுகளாக சண்டையிட்டு வரும் போகோ ஹராம் தீவிரவாதிகள், மாய்துகுரியில் பலமுறை தாக்குதல் நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஐரோப்பிய நிறுவனங்கள் குறித்து போப் பிரான்ஸில் கடும் விமர்சனம்



ஐரோப்பிய நிறுவனங்களை போப பிரான்ஸிஸ் கடுமையாக விமர்சித்துள்ளார். ஸ்ட்ராஸ் பர்கிலுள்ள ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் உரையாறறும்போதே போப் இந்நிறுவனங்களை கடுமையாக சாடியுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தை தங்களிடமிருந்து விலகித் தனியாக நிற்கும் ஒரு அமைப்பாகவே மக்கள் பார்க்கிறார்கள் என்றும், மக்கள் உணர்வுகளுக்கு ஏற்ற வகையில் இல்லாமல் அது சட்டங்களை இயற்றியுள்ள குற்றங்களுக்கு ஆளாகியுள்ளது என்றும் போப் தமது உரையில் குற்றம் சாட்டினார்.

அப்படியான நிலைப்பாடு மக்களுக்கு தீங்கு ஏற்படுத்தியுள்ளது என்றும் அந்த நிறுவனத்தின் மீதான நம்பிக்கையின்மை மேலும் அதிகரித்துள்ளது என்றும் போப் பிரான்ஸிஸ் தெரிவித்துள்ளார்.

நீடித்திருக்கக் கூடிய வகையில் இல்லாமல், சமூகத்தின் சில உறுப்பினர்கள் சுயநலத்துடன் கூடிய ஆடம்பரமான, சொகுசு வாழ்க்கையை வாழ்கிறார்கள் என்றும் போப் குற்றம் சாட்டினார்.

வட ஆபிரிக்காவிலிருந்து படகு மூலம் ஐரோப்பா வந்து குடியேற வேண்டும் எனும் நோக்கில் பயணம் மேற்கொள்பவர்களுக்கு மத்திய தரைக் கடல் ஒரு பெரும் உயிர்க் கொல்லியாகத் திகழ்கிறது என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டு எச்சரிக்கை விடுத்தார். (இ-5)

# சத்தமாக இசை கேட்ட சிறுமி சுட்டுக்கொலை

## பாகிஸ்தானில் சம்பவம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் சத்தமாக இசை கேட்ட சிறுமி தனது உறவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தின் மதன் கல்லான் கிராமத்தில் ரேஹானா பிபி (வயது-16) என்ற சிறுமி கடந்த திங்கட்கிழமை தனது வீட்டில் இசை கேட்டுக் கொண்டிருந்தார்.

அப்போது சத்தம் அதிகமாக இருந்ததை அடுத்து வீட்டுக்குள் வந்த சிறுமியின் உறவினர், சத்தத்தை குறைக்கும்படி கூறினார்.

இருப்பினும் சிறுமி அவரது பேச்சைக் கேட்டு சத்தத்தை குறைக்காத நிலையில், தன்னிடம் இருந்த துப்பாக்கியை எடுத்து சிறுமியை நோக்கி அவர் சுட்டார்.

இதனை அடுத்து அங்கு வந்த சிறுமியின் தந்தை தனது மகள் இரத்த வெள்ளத்தில் இருப்பதை கண்டு வைத்தியசாலைக்கு தூக்கச் சென்றார். ஆனால் சிறுமி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தாள்.

இது குறித்து பொலிஸாரிடம் சிறுமியின் தந்தை தகவல் அளித்த நிலையில், குற்றச் செயலில் ஈடுபட்டவர் தப்பியோடியது தெரியவந்தது.

இந்தக் கொலைச் சம்பவம் குறித்து வழக்குப் பதிவு செய்து தலை மறைவான நபரை பாகிஸ்தான் பொலி ஸார் தேடி வருகின்றனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ச; பழைய நரியிலும் பார்க்க தந்திரமிக்க நரி

...இவற்றின் மூலம் அவர் மேற்கொள்ளும் இவ்வித நியமனங்களனைத்திற்கும் வேண்டிய அடிப்படைத்தகைமை என்பது அவர்மீது அவர் வைக்கும் விசுவாசமொன்றேயாகும். பாராளுமன்றம் தொடர்ந்தும் உறுதியான முறையில் தனது சொந்தக்கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது என்பதை எல்லோருக்கும் நினைவுபடுத்தும் விதத்தில் அவர் வெளிப்படுத்தும் நயவஞ்சகமான வசீகரப்பேச்சில் ஈவிரக்கமற்றவிதமான ஆபத்தும் இளையோடுவதை உணரக்கூடியதாயிருக்கும்.

அவருக்கு எதிராகக் கிளம்பக் கூடிய எந்த விதமான எதிர்ப்பு அறிகுறிகளும், அவரவர் அல்லது அந்தந்த அமைப்புகள் மற்றும் அவர்களது தொடர்புகள் பற்றிய உளவறியும் ஏவல்கள் மூலம் அவர்களது நற்பெயர்களுக்கோ அல்லது கௌரவத்திற்கோ ஏற்படக்கூடிய களங்கள் பற்றிய எதுவித கவலையுமின்றி நசுக்கப்படுவதாகவே இருக்கும். சரத்பொன்சேகா மற்றும் ஷிராணிபண்டாரநாயக்க போன்றோருக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட பாரதூரமானதும் கௌரவக் குறைச்சலானதுமான நடவடிக்கைகளுடன் ஏனைய பல்வேறு குற்றச்சாட்டுக்கள் மற்றும் அவர்களது பதவிகளுக்கு வேறு நபர்கள் நியமிக்கப்பட்டது போன்ற சம்பவங்களும் கூட மேற்கூறிய நயவஞ்சக நடைமுறைகளுக்கு எடுத்துக்காட்டான ஆதாரங்களாகும்.

பெரும் அதிகாரத்திற்கும் ஊதியத்திற்கும் உரித்தான பதவிகளில் ஆண்களோ பெண்களோ பதவிக்கு பொருத்தமான தகுதியுடையவர்களோ இல்லையே, தனக்கு நெருக்கமானவர்களையும் நண்பர்களையுமே நியமிக்கும் ராஜபக்சவின் இவ்வித செயற்பாடுகள் அவரது தனிப்பாணியொன்று மட்டுமே என அவரைக் குற்றம் சாட்டுவோர் வாதிட்டாலும்கூட உண்மையில் அவரது இச்செயற்பாடுகள் நியமனம் பெறுவோர்கள் தனக்கு முற்றிலும் விசுவாசமுள்ளவராக இருக்கவேண்டுமென்ற அவரது எதிர்பார்ப்புக்கு பிரதியுபகாரமான ஒன்றேயாகும்.

பிரதி அமைச்சர்களை கண்காணிக்க நியமிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து பிரதேசசபை தலைவர்கள் வரையிலான மகிந்தவின் இத்தகைய பலதர ஆட்கள் குற்றச்செயல்களில் ஈடுபட்டு தப்பித்துக் நிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் முன்னொருபோதும் இடம்பெற்றிருக்காதவையேயாகும். இப்போது சர்வதேச தரத்திலான இரண்டு பெருந்தெருக்கள் நாட்டிற்கு கிடைத்துள்ளதுடன் மேலும் கூடுதலான வீதி அபிவிருத்திகளும் அதே தரத்தில் இடம்பெற்று வருகின்றன. இவையெல்லாம் மிகவும் பாரிய நிதிச் செலவில் இடம்பெற்று வருகின்ற போதிலும் முன்பிருந்த யாழ்தேவி சேவையிலும் மிக விரைவான கடுகதி வேக சேனையொன்றுக்கான வடக்கு மற்றும் தெற்கிற்கான நீண்ட புகையிரதப்பாதையொன்றுடன் கூடிய சேவையாக அது இப்போது நடந்துகொண்டிருப்பதுடன் கொழும்பிலும் சிங்கப்பூர் பாணியிலான புதிய துறைமுக நகரமொன்றும் கூட இலங்கை மக்கள் எவருமே எதிர்பார்க்காத மிகப்பெரிய செலவிலான பாரிய திட்டங்களாக உருவெடுத்துள்ளனர். ராஜபக்சவுடைய சொந்த ஊரா பாதிப்பதாகவேயுள்ளது. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின பரிதாப நிலையானது கற்றுக்கொள்ளப்படவேண்டியஎடுத்துக்காட்டாகவேயுள்ளது.

ஆமாம் சாமி! போடும் அமைச்சர் ஒருவரின் நிமித்தம் அமைச்சு வேலைகளெல்லாம் ஒழுகீனமாகியுள்ளன. கண்காணிப்பை மேற்கொள்ளும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே அலுவல்களையும் பார்த்துக்கொள்ளும்போது அதிகாரிகள் அவருக்கு தலையசைத்து ஆமோதித்து மரியாதை செய்வதை கண்டுங்காண்ணாதவராக, வெளிநாடுகளுக்குச் செல்ல தனக்குக் கிடைக்கும் இலவச பயணங்கள் பற்றிய கனவில் அமைச்சர் திளைத்திருப்பதை காணமுடியும்.

வருடந்தோறும் மனித உரிமை விடயம் சம்பந்தமாக வரும் சபை அமர்வுகளில் இறுதியாக இடம்பெற்ற சில அமர்வுகளில் வெளி விவகார அமைச்சு தனது விளக்க அறிக்கைகளை முற்றிலும் திருப்திகரமற்ற விதத்திலேயே வெளிக்காட்டியிருந்தது. இதன் காரணமாகவேதான்,

**சண்டே டைம்ஸ் பத்திரிகையில் 2014.11.16 அன்று ராஜபக்ச; பழைய நரியிலும் பார்க்க தந்திரமிக்க நரி என்னும் தலைப்பில் வெளியான கருத்துக்கள் பகுதியின் தமிழாக்கம் பிரசுரிக்கப்படுகிறது.**

பார்க்க ராஜபக்சவின் வார்த்தைகளே சிங்கள மக்களிடையே ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய தான நிலைமையே தற்போதுள்ளது.

வேரோடி எடுத்த முதல் குடும்ப அரசியல் விருட்சத்தின் கிளைகள் மேலும் பரந்து விரிந்து பெருமளவில் விமர்சனங்கள் வெடித்துக் கிளம்ப காரணமாயிற்று. அல் ஜெஸீரா தொலைப்படக்காட்சிக்கான நேர்காணல் ஒன்றில் இதுபற்றிய கேள்வியொன்றின்மீது பதிவளிக்கையில் முழு நாடுமே எமக்கு உறவு முறைதான் என்று கூறியபடி வேடிக்கையான முறையில் கெக்கட்டமிட்டு உரத்துச் சிரித்



## எனக்கு விசுவாசமாகவுள்ளவர்களுக்கு வெகுமதியுண்டு; இல்லாதவர்களுக்கு அதற்கான தண்டனை உண்டு!

கொள்பவர்களாகவே இருக்கின்றனர். இது மட்டிலான அவரது கருத்து மிகவும் தெளிவான ஒன்றேதான், எனக்கு விசுவாசமாக உள்ளவர்களுக்கு வெகுமதி உண்டு, அவ்விதமில்லாதவர்கள் அதற்கான தண்டனைக்குத் தப்ப முடியாது. தனது பிரபல்யத்தை தக்கவைத்துக் கொள்வதன்மூலம் தன்னுடைய அதிகாரத்தை மேலும் மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கென்றே ஒரு சில மூலோபாய உத்திகளை ராஜபக்சவை செயற்படுத்தி வருகின்றனர்.

அதாவது, தேசபக்தி என்ற அடிப்படைக் கோம்பாட்டையே திரும்பத்திரும்ப தேவைக்கேற்ப வேண்டிய நேரங்களில் நினைவூட்டி போர் நினைவுகள் தட்டியெழுப்புவது, உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் மற்றும் அதிருப்தி மட்டிலான எந்தவித கருத்துக்களையும் விசேடமாக அரச அமைப்புகளிடையே எழக்கூடிய இந்தவிதமான அதிருப்தி கருத்துக்களும் சகித்துக்கொள்ளப்பட மாட்டாது என்ற வலியுறுத்தல்கள்மூலம் எச்சரிப்பது போன்ற செயற்பாடுகள்.

நாட்டுப்புற பெரும்பான்மை சிங்கள வாக்கு வங்கிகளிலேயே பெருமளவில் தங்கியிருப்பதான ஓர் நிலையை ஏற்படுத்திக்கொண்டதன் மூலம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி கொள்வதற்கு சிறுபான்மை மக்களது ஆதரவும் தேவை என ஏற்கனவே ஜே.ஆர் வரித்துக்கொண்ட கோட்பாட்டு நியாயங்களை காற்றிலே பறக்க விட்டிருந்தார் ராஜபக்ச. உண்மையில் தாம் தனிமைப்படுத்தப்பட்டுவிட்டதான ஓர் உணர்வுக்குள் சிறுபான்மை மக்கள் தள்ளப்பட்டுவிட்டதுமன்றி அதன் விளைவாக இலங்கையின் நற்பெயருக்கு சர்வதேச ரீதியில் களங்கமேற்பட்டு நாடே தனிமைப்படுத்தப்படும் கிய அம்பாந்தோட்டைப்பிரதேசத்திற்கு சர்வ தேச தரத்திலான சர்வதேச துறைமுகமொன் றும் விமான நிலையமொன்றும் பெரியதொரு ஆசீர்வாதமாக கிடைத்தபோதிலும் அவர் அறிந்தோ அறியாமலோ அவற்றை சீனாவிற்கு விற்றுவிட்டால் என்ற பரவலான குற்றச்சாட்டுமுள்ளது.

ஓர் விடயம் பற்றிய செய்தியை நீதிநிர்வாகத்தின் பார்வைக்கு சமர்பிக்கும் நோக்கம் ராஜபக்சவுக்கு இருக்குமானால் அவ்விடயம் அவருக்கு வெற்றிகரமாகவே அமையும். மூன்றாவது தடவையும் பதவிவகிக்கும் தகுதி ராஜபக்சவுக்கு இருக்கிறது என்ற கருத்தினை உச்சநீதிமன்றம் நவம்பர் 10 ஆம் திகதி அறிவித்தபோது நிலைமையை பொருத்தமாக விளக்கும் விதத்தில் சிங்களப்பத்திரிகையொன்று கேலிச்சித்திரம் ஒன்றினை வெளியிட்டுள்ளது.

உயர்நீதிமன்றங்களுக்கு மேற்கொள்ளப்படும் நியமனங்களுக்கு இலங்கை சட்டவாளர் சங்கம் தனது எதிர்ப்பினைத் தெரிவித்து குற்றஞ்சாட்டியிருந்த போதிலும் இப்போது சிலர் ராஜபக்ச சார்பாக கொடியசைத்து ஆதரவு தெரிவிக்க வெட்கப்படுவதில்லை. நீதி வழங்கப்பட வேண்டுமென்பது மட்டுமல்ல அது செயற்படுத்தப்படும்படி பார்த்துக்கொள்ளவும் வேண்டும் என்ற நெடுங்கால பழமொழியொன்றினை மறுவளமாக நீதிசெயற்படுத்தப்படுபடி பார்த்துக்கொள்வது மட்டுமல்ல, அது வழங்கப்படவும் வேண்டும் என்று மாற்றிக்கூற வேண்டிய நிலைக்கு சட்டவாளர்கள் சிலர் அதனை மாற்றிவிட்டனர். தத்தமது நேரடி அதிகாரிகளுக்கே பொறுப்புக் கூறுவதென்ற நடைமுறையான கலாசாரமும்கூட சகல மட்டங்களிலும் ஊடுருவியிருக்கும் நிலைமையானது நாட்டினது சகல அலுவல்களையும் ஐ.நா. மனித உரிமை சபையின் முன்பாகவும் அனைத்து மேற்குலக நாடுகளுக்கும் முன்பாகவும் குற்றச்சாட்டுகளுக்கும் முகம்கொடுக்கவேண்டிய நிலை நாட்டுக்கு ஏற்பட்டுள்ளது. போருக்குப் பிந்திய காலகட்டத்தில் வடபகுதி தமிழர்கள் சம்பந்தமான விடயங்களில் ராஜபக்ச மேற்கொண்ட இழுத்தடிப்புகள் காரணமாக, அவர் விடுவித்ததாகக் கூறும் அம்மக்களே கூட, போரினை வெற்றிகொண்டு சமாதானத்தை இழந்துபோனதாக குற்றஞ்சாட்டுவது மிகவும் சரியானதேயாகும்.

இனப்பிரச்சினை விடயத்தில் அவரது நிலைப்பாடு உறுதியற்றதாகவே இருக்கிறது; முன்னர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் ஒருவரிடம் இனப்பிரச்சினை விடயத்தில் 13 ஆவது திருத்தத்திற்கும் அப்பால் சென்று தீர்வு காண்பதாக வாக்குப் பண்ணியது வெறும் வாச்சவாடல் ஆகியது. இவ்விதமாக அவர் தனது வாக்குறுதியிலிருந்து பின்வாங்கியமை புதுடில்லியுடனான சச்சரவுக்கு வழிகோலியதாயிற்று.

வெளிநாடுகளிலுள்ள ஈழத்தமிழர் அமைப்புகள் இலங்கைக்கு சிரமங்களை ஏற்படுத்தி வரும் ஒரு காலகட்டத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் உணர்வுகளைத் தூண்டாத நுட்பமான அணுகுமுறைகளே தேவைப்படுவதாயிருக்கிறது. சமூகங்களுக்கிடையில் இணக்கப்பாட்டினை ஏற்படுத்தக்கூடியதும் தீர்வொன்றை சிங்களமக்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க நிலையொன்றினை ஏற்படுத்தக்கூடிய பிரத்தியேகமான இடத்தில் தாம் இருக்கிறார் என்பதை ஜனாதிபதி உணரவேண்டும். ஏனென்றால், விக்ரமசிங்கவின் வார்த்தைகளிலும் தார் ராஜபக்ச. அநேகமான உறவினர் மக்களாலேயே தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதே அவரது வாதமாயிருந்தது. ஆனாலும், விசேஷமாக அதிருப்தியுடன் கூடிய முணுமுணுப்பு அலைகள் சுதந்திரக் கட்சிகளுக்குள்ளேயே தொடர்ந்தும் பரவிக்கொண்டிருக்கிறது. வேறு எவருக்குமே இடமில்லாத, ராஜபக்சவின் முதன்மைக் குடும்ப அரசியல் பயணத்தில் 28 வயதேயான இளைஞர் நாமல் ராஜபக்ச வாகன மிதிபடியில் தொங்கிய படி பயணம் செய்வதிலுள்ள ஆபத்தை ராஜபக்ச உணர்வாரா? உணர்வது அவசியம்!

தற்போது அரசிற்கு எதிரான அணியினரின் ஜனாதிபதி பொதுவேட்பாளரின் எதிர்பாராத தெரிவுடன் எதிர்பாராத அதிர்ச்சிகாரணமாக நிகழ்வுகள் பல இடம்பெற்றுக்கொண்டுள்ளன. இரு தரப்புகளிடையேயான கட்சித் தாவல்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன, இடம்பெறக்காத்திருக்கின்றன. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையினை ஒழிப்பதென்ற கொள்கை அடிப்படையில் எதிர்க்கட்சிகள் ஒன்றுதிரண்டு ஓரணியாக களமிறங்கக் காத்திருக்க, மறுபுறம் ஐ அணித் தலைவர்கள் நிறைவேற்று அதிகார முறைமையை போற்றிப் புகழ்வது முரணான ஒன்றாகவே உள்ளது. இருப்பினும் தற்போதுள்ள நிலையிலும் இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவிக்கான போட்டியில் தனித்துக்களமிறங்குவதிலும் திருப்திப்படுபவராகவே மகிந்த ராஜபக்ச காணப்படுகிறார்.

**தமிழில்-யோகர்**

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் தாழ்த்தாது மின்சாரக் கட்டணத்தை அறவிடுங்கள்

## கிளிநொச்சி பொதுச்சந்தை வர்த்தகர்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மரக்கறி சந்தை வியாபாரக் கட்டடத் தொகுதிக்கான மின்சாரம் நேற்று முன்தினம் மாலை 3 மணியளவிலிருந்து நேற்று வரை தடைப்பட்டிருந்தமையால் வியாபாரத்தில் ஈடுபடும் மரக்கறி வியாபாரிகள் மெழுகுவர்த்தியின் ஒளியுடன் தமது வியாபார நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி பொதுச் சந்தையில் மின்சாரம் இன்மையால் இருள் சூழ்ந்த நிலையில் 300 இற்கு மேற்பட்ட மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர்களின் வர்த்தக நடவடிக்கை பாதிப்படைந்ததுடன் இரவு நேரங்களில் அவ்விடம் இருள் சூழ்ந்து கடைகள் பாதுகாப்பின்றி, காணப்பட்டதாகவும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறித்த பகுதியைச் சேர்ந்த கடை உரிமையாளர்களினால் கரைச்சி பிரதேச சபையினர் நில வாடகையாக ஆயிரத்து 250 ரூபா அறவிடுவதுடன் மின்சார கட்டணமாக மாதா மாதம் 20 வோல்ட் மின்குமிழ் ஒன்றிற்கு 584 ரூபாவும் 23 வோல்ட் மின்குமிழ் ஒன்றிற்கு 700 ரூபாவும் 15 வோல்ட் மின்குமிழ் ஒன்றிற்கு 440 ரூபாவும் ஒரு மின்சார திராஸ் உட்பட ஒரு மின்குமிழுக்கு மாதம் ஆயிரத்து 415 ரூபாவும் கட்டணமாக செலுத்தி வருகின்றனர்.

ஆனால் இக் கட்டணங்களை கரைச்சி பிரதேச சபையினர் மாதா மாதம் அறவிடாது 6 அல்லது 7 மாதங்கள் கடந்த நிலையில் வர்த்தக நிலையங்களுக்கு வருகை தந்து அறவிட்டுச் செல்கின்றனர்.

இருந்த போதிலும் தமக்கான மாதாந்த கட்டணம் அதிகப் படியாக அறவிடப்படுவதாக பணம் பெற



வருவோரிடம் வர்த்தகர்கள் வினவிய போது, இது மின்சார சபையினரின் கட்டணம் எனக் கூறுவதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

அன்றாடம் தமது வாழ்வாதாரத்திற்காகவே சந்தை வியாபாரத்தில் ஈடுபடும் வர்த்தகர்கள் இப்பணத்தினை மாதாமாதம் செலுத்தாது ஆறு மாதங்கள் கடந்த நிலையில் தம்மிடம் இருந்து அறவிடப்படுவதால் அதனை செலுத்த இடர்பாடுகளை சந்திப்பதாக தெரிவிக்கின்றனர்.

இக்கட்டணத்தை மாதா மாதம் கரைச்சி பிரதேச சபையினர் அறவிட வேண்டுமென அவர் கோரிக்கை விடுக்கின்றார்.

இந்நிலையில் நேற்றைய தினம் கரைச்சி பிரதேச சபையினர் ஆறு மாதங்கள் கடந்த மின்சாரப் பட்டியலை வர்த்தகர்களிடம் கொண்டு சென்று காண்பித்து அக்கட்டணத்தை எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் செலுத்தாவிடின் உங்கள் வர்த்தக நிலையங்களை பூட்ட வேண்டிவருமெனஎச்சரித்துசென்றதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின் றனர்.

எனவே மாதா மாதம் மின்சாரக்கட்டணத்தை வர்த்தக நிலையங்களில் இருந்து பெற்று கரைச்சி பிரதேச சபை சபையினர் மின்சார சபையினிடம் செலுத்துவதன் மூலம் இப்பகுதிக்கான மின்சார துண்டிப்பை நிறுத்த முடியுமென கிளிநொச்சி பொதுச்சந்தை வர்த்தகர்களால் கோரிக்கை விடப்படுகின்றது. (2-271-254)

## கொல்களத்திலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் சிறந்த முறையில் அகற்றப்படாமையால் துர்நாற்றம்



வவுனியா நகரசபைக்குச் சொந்தமான கொல்களம் துர்நாற்றம் வீசுவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்

ஏ-9வீதி தாண்டிக்குளப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கொல்களத்திலிருந்து துர்நாற்றம் எழுவதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

இக்கொல்களத்தில் தினமும் பத்திற்கும் மேற்பட்ட மாடுகள் வெட்டப்படுவதுடன் அவை இறைச்சிக்காக வவுனியா நகரம் உட்பட பல பிரதேசங்களுக்கு விற்பனை செய்யப்பட்டு இந்நிலையில் மக்களால் செறிந்து வாழும் குறித்த பிரதேசத்தில் இக்கொல்களத்தில் இருந்து வெளியேற்றப்படும் நீர் மற்றும் கழிவுப் பொருட்கள் சீரான முறையில் அகற்றப்படுவதில்லை

இதனால் அப்பகுதி எங்கும் துர்நாற்றம் வீசுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் கொல்களத்தில் இருந்து நாய்கள் மற்றும் காகங்கள் இறைச்சித்துண்டுகளையும் எலும்புகளையும் எடுத்துச்சென்று அயல் வீடுகளில் போடுவதால் அப்பகுதி அசுத்தமாவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் காகங்கள் எலும்புத் துண்டுகளை காவிச் சென்று அயல் கிணறுகளில் போடுவதால் குடிநீருக்குப்பயன்படுத்தப்படும் நீர் அசுத்தமடைவதாக தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து சீரான ஒழுங்கு முறையில் கழிவகற்றலைமேற்கொள்ள வேண்டுமென அப்பகுதி மக்கள் கேட்கின்றனர். (2-250)

## திருவையாறு உள்ளக வீதிகளை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)


திருவையாறு மூன்று பகுதிகளை உள்ளடக்கிய கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசமாகும்.

திருவையாறு பிரதேசத்தில் உள்ள உள்ளக வீதிகள் எவையும் இது வரை புனரமைக்கப்படவில்லையென அப்பகுதி பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பிரதேசத்தில் மக்கள் மீள்குடியேற்றிய பின்னர் அனைத்து வீதிகளும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

திருவையாறு சாந்தபுரம் படித்த மகளிர் திட்டம் ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய 480 கிலோ மீற்றர் நீளமான உள்ளக வீதிகளே இது வரை புனரமைக்கப்படாது காணப்படுகின்றது. குறித்த வீதிகளினூடாக கனரக வாகனங்கள் விவசாயிகள் பொதுமக்கள் பாடசாலை மாணவர்கள் என பல்வேறு பட்ட தரப்பினர் பயணித்து வருகின்றனர்.

எனவே காலம் தாழ்த்தாது உரியவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள முன்வரவேண்டுமென அப்பகுதி மக்களால் கோரிக்கை விடப்படுகின்றது. (2-271)




## நாய்களுக்கான கர்ப்பத்தடை சத்திர சிகிச்சை

கிளிநொச்சி சிவநகர் கிராம அலுவலர் பிரவில் கிளிநொச்சி சுகாதார பிரிவினரால் , பெண் நாய்களுக்கான கர்ப்பத்தடை சத்திர சிகிச்சை நேற்றை தினம் சிவநகர் பொது மண்டபத்தில் வைத்து நடைபெற்றது.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னரும் இத்தகைய சத்திர சிகிச்சை பெண் நாய்களுக்கு அதற்கான விசேட சத்திர சிகிச்சையாளர்களால் நடத்தப்பட்டது.

மிருகங்களை கொலை செய்வது தடுக்கப்பட வேண்டும் என்ற மகிந்த சிந்தனைக்கமைவாக இச் செயற்பாடு நடத்தப்பட்டு வருகின்றது.

எனினும் உருத்திரபுரம் சந்தைப் பகுதி , பேரூந்து நிலையத்தை அண்மித்த வீதி பகுதிகளில் , மிகக் கூடுதலான நாய்கள் அவ்வீதியில் படுத்துறங்கி போக்குவரத்து செய்வோருக்கு இடையூறு ஏற்படுத்துவதுடன் பயணிப்போரை துரத்திக் கடிக்க எத்தணிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் வீதி முழுவதும் நாய்களின் மலத்தினால் துர்நாற்றம் எழுவதால் அவ்வீதியூடாக பயணிக்கும் பாடசலை சிறுவர்கள், சந்தைக்கு செல்வோர் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

உயிர்ப்பலிசெய்யாதுவிட்டுகின்ற போதும் தெருவோரங்களில் நடமாடும் கட்டாகாலி நாய்களை கட்டுப் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென சம்பந்தப்பட்டோரி பம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(2-254)

## கோழிகளை களவாடிய இரு சிறுவர்கள் பிணையில் விடுதலை

கிளிநொச்சியைச் சேர்ந்த இரு சிறுவர்கள் 15 ஆயிரம் பெறுமதியான கோழிகளை களவெடுத்ததாக கூறி 26.11.2014 அன்று கைது செய்யப்பட்டு முல்லைத்தீவு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டவேளை இரு சிறுவர்களும் குற்றத்தை ஒப் புக் கொண்டதை அடுத்து இருவ ரையும் 10 ஆயிரம் ரூபா சொந்தப் பிணையிலும் 3 வருட காலத்திற்கு நன்னடத்தை காலத்தில் இருக்கும் வகையில் நிபந்தனை அடிப்படை யில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா விடு தலை செய்துள்ளார். சிறுவர்கள் என்ற காரணத்தினால் இம்மூன்று வருட நன்னடத்தை காலத்தினுள் குற்றச் செயல்களில் ஈடுபடக் கூடாது எனவும் எச்சரிக்கை படுத்தப்பட்டுள்ளார்கள்.

இக்காலப்பகுதியினுள் குற்றச் செயலில் ஈடுப்பால் குற்றச் செயல்களுக்கான தண்டனைத்தீர்ப்பு அறிவிக்கப்படுமெனவும் எச்சரிக்கை செய்யப் பட்டுள்ளார்கள். எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சுதர்சன் ஆஜராகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் வவுனியா மாவட்டத்திற்கான அமர்வுகள்

(வவுனியா)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமற் போனவர்கள் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் வவுனியா மாவட்டத்திற்கான பொதுசன அமர்வுகள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை நடைபெறுமென இவ்வாணைக்குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ. குணதாச அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எதிர்வரும் 14, 15 ஆகிய இருநாட்களும் காலை9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை செட் டிக்குளம் பிரதேச செயலகத்திலும் எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை வவுனியா பிரதேச செயலகத்திலும் மறுநாள் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை வவுனியா பிரதேச செயலகத்திலும் நடைபெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆணைக்குழு முன் வாய் மூல சாட்சியங்கள் அளிப்பதற்கு அழைக்கப்பட்டோர் மேற்குறிப்பிட்ட திகதிகளில் இவ்வமர்வுகளில் கலந்து கொள்ளும்படி அவர் கேட்டுள்ளார்.

செட்டிக்குளம் மற்றும் வவுனியா பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பிரதேசத்தில் வசிக்கும் ஒரு தனி நபர்,நபர்கள் அல்லது அமைப்புக்கள் தமது முறைப்பாடுகளை இவ்வாணைக்குழுவிற்கு மேற்குறிப்பிட்ட திகதிகளில் உரிய இடங்களில் சமர்ப்பிக்கலாம் என அவர் கூறியுள்ளார்.

இப் புதிய முறைப்பாடுகள் குறிப்பிட்ட தினங்களில் பதிவு செய்யப்படுவதுடன் அவை தொடர்பான வாய் மூல சாட்சியங்கள் பெறுவதற்கான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சார்க் நாடுகளின் எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டும்

## மோடி வலியுறுத்து



சார்க் உறுப்பு நாடுகளுக்கு இடையே நிலவிவந்த வெறுப்பு மனப்பான்மையும், அவநம்பிக்கையும் நீங்கி நேர்மறை எண்ணங்கள் மேலோங்கி நிற்கிறது என பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்தார்.

18ஆவது சார்க் உச்சி மாநாடு நேபாள தலைநகரம் காத்மாண்டுவில் நேற்று 26ஆம் திகதி தொடங்கியது. மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவிக்கையில்,

இந்தியாவின் எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும் என விரும்புகிறேனோ, அவ்வாறே சார்க் உறுப்பு நாடுகளின் எதிர்காலமும் சிறப்பாக அமைய வேண்டும் என விரும்புகிறேன்.

தெற்காசிய நாடுகள் படிப்படியாக ஒன்றுபட்டு வருகின்றன. சார்க் நாடுகளுக்கு மத்தியில் வெறுப்பு மனப்பான்மையும், அவநம்பிகையையுமே நிலவிவந்த சந்தேகம் நீங்கி, நேர்மறை சிந்தனைகள் மேலோங்கி நிற்கின்றன.

இந்தியா- நேபாளம் இடையே எரிசக்தித் துறையில் புதிய உடன்பாடு ஏற்பட்டுள்ளது. இதேபோல், தற்போது பூடான் நாட்டுடன் புதிய ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், நம் மக்கள் எதிர பார்ப்புக்கு ஏற்றவாறு நாம் வேகமாக செயல்படவில்லை.


சார்க் நாடுகளுக்கு இடையேயான வர்த்தக உறவு மேம்படுத்தப்பட வேண்டும். வர்த்தக நோககுடன் இந்தியா வரும் சார்க் கூட்டமைப்பு நாடுகளைச் சேர்ந்த வர்களுக்கு 3 முதல் 5 ஆண்டுகளுக்கான தொழில் ரீதியான விசா வழங்கப்படும். வர்த்தக மேம்பாடடிற்கு வர்த்தக உடன்படிக்கைகளை எளிமைப்படுத்துதல் அவசியம். இந்திய சந்தைக்கான பொருள்களை பிற தெற்காசிய நாடுகள் உற்பத்தி செய்ய வேண்டும்.

உலகம் முழுவதும் அண்டை நாடுகளிடையே நல்ல உறவு இருக்க வேண்டும். பரஸ்பரம் ஒருவரிடம் இருந்து இன்னொருவர் கற்றுக்கொள்ள நிறைய உள்ளது.

தெற்காசிய நாடுகீளில் உள்ள மாணவர்கள் ஆன் - லைன் கல்வி மூலமும் இ-லைப்ரரி மூலமும் இணைந்திருக்க வேண்டும். தெற்காசிய பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும்.

மருத்துவ உதவிகள் பெற சார்க் நாடுகளில் இருந்து இந்தியா வருபவர்களுக்கு உடனடியாக மருத்துவ விசா வழங்கப்படும். தெற்காசிய பிராந்தியத்தில், சுற்றுலாத் துறையை மேம்படுத்த வேண்டும்.

மும்பை தாக்குதலில் பல உயிர்களை இழந்தது ஒரு முடிவுறாத வலியை ஏற்படுத்திவிட்டது. மும்பை தாக்குதல் நினைவு தினம் அனுசரிக்கப்படும் இந்நாளில், பயங்கரவாதத்தை ஒடுக்க நாம் அனைவரும் ஒத்துழைப்போம் என உறுதி கொள்ள வேண்டும்" என்று மோடி மேலும் தெரிவித்தார். (இ-5)







# சென்னையில் நாம் தமிழர் கட்சி சார்பில் பிரபாகரன் பிறந்த நாள் கொண்டாட்டம்



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பிறந்தநாள் விழா நாம் தமிழர் கட்சி சார்பில் நேற்று தமிழகம் முழுவதும் கொணடாடப்பட்டது. சென்னை வளசர வாக்கத்தில் உள்ள வீட்டில் வைத்து நாம தமிழர் கட்சி தலைவர் சீமான, மனைவி கயல் விழியுடன் கேக் வெட்டி, பிரபாகரன் பிறந்தநாளை கொண்டாடினார். இதில் நாம் தமிழர் கட்சியின் நிர்வாகிகள் தொண்டர்கள் திரளாக பங்கேற்றனர்.

பிரபாகரன் பிறந்த நாளையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் நாம் தமிழர் கட்சியினர் ஏற்பாடு செய்திருந்தனர். பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு கொப்பி புத்தகங்கள், வழங்கப்பட்டன.

26 இடங்களில் இரத்ததான முகாம் நடைபெற்றது. குருதிக் கொடை பாசறை ஒருங்கிணைப்பாளர் அரிமாநாதன் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார். பல இடங்களில் மருத்துவ முகாமும் நடைபெற்றது. மரக்கன்றுகளும் நடப்பட்டன.

திருவொற்றியூர் ராஜா கடை கங்கா காவிரி திருமண அரங்கில் நேற்று மாலை வரலாற்று "தலைவனுக்கு வாழ்த்துப்பா" என்ற மலர் வெளியீட்டு விழாவும், கூட்டமும் நடைபெற்றது. இதில் சீமான் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

ராயப்பேட்டை வி.எம். தெருவில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணிக்கு தந்தை பெரியார் திராவிடர் கழக த்தின் வடக்கு மண்டல அமைப்பாளர் கரு. அணணாமலை, தமிழர் முனனேற்ற படையின் தலைவர் வீரலட்சுமி மற்றும் பலர் கேக் வெட்டி பிறந்தநாளை கொண்டாடினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# உயிரை மாய்த்துக்கொள்ளும் விவசாய பெருங்குடி மக்கள்

(டில்லி)

**இந்தியாவில் நடப்பாண்டில் விவசாயிகளின் கொலை அதிக ரித்துள்ள அதேவேளை மத்திய அரசு மாநில அரசின் மீதும் மாநில அரசுகள் மத்திய அரசின் மீதும் குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளன. இதேவேளை இந்தியாவில் உள்ள ஆறு மாநிலங்களில், இந்த ஆண் டில் மட்டும் இது வரை 300க்கும் அதிகமான விவாசாயிகள் தற் கொலை செய்துள்ளதாக மத்திய அரசு தகவல் வெளியிட்டுள்ளது.**

## நடப்பாண்டில் 300 பேர் தற்கொலை



விவசாய சமூகத்தினருக்கு ஏற்படும் துன்பங்கள் காரணாமாக, 2014 ஆம் ஆண்டில் தற்கொலை செய்துகொண்ட விவசாயிகளின் எண்ணிக்கையை மத்திய விவசாயத்துறைக்கான இணையமைச்சர் சஞ்சீவ் குமார் பல்யான் வெளியிட்டுள்ளார்.

முதனிடம்

மகாராஷ்டிர மாநிலத்தில் அதிகபட்சமாக ஏப்ரல் மாதம் வரை 204 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இதற்கு அடுத்தபடியாக தெலுங்கான மாநிலத்தில் 69 விவசாயிகளும், கர்நாடக மாநிலத்தில் 19 விவசாயிகளும் தற்கொலை செய்து கொண டுள்ளார்கள். அதைப்போல்குஜராத் கேரளா மற்றும் ஆந்திரா ஆகிய மூன்று மாநிலங்கள் அளித்துள்ள தகவலின படி அம்மாநிலங்களில் தலா மூன்று விவசாயிகள் மாண்டுள்ளார்கள்.

விவசாயம் மற்றும் விவசாய கடன் தொடர்பான விடயங்கள் மாநில அரசுகள் தொடர்புடையது என்பதால், அந்தந்த மாநில அரசாங்கங்களே இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக மத்திய விவசாயத்துறைக்கான இணையமைச்சர் சஞ்சீவ் குமார் குறிப்பிட்டுள்ளார். மேலும் தற்கொலை செய்துக்கொண்ட விவசாயிகளின் குடும்பங்களுக்கு அளிக்கப்படும் இழப்பீடுகளையும் மாநில அரசுகள் வழங்குவதாகவும், அதற்காக மாநில அரசுகளுக்கு தேவைப்படும் உதவிகளை மத்திய அரசு செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசின் தற்போதைய வரவு செலவு திட்டத்தில், விவசாயத்துறையின் மேம்பாட்டிற்கான திட்டத் தேவைக்காக என ரூபாய் 22,309 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## 80 இலட்சம் குழந்தைகள் புற்று நோயினால் பாதிப்பு

புற்றுநோயை வென்றவர்கள் தினம் சென்னை கீழ்ப்பாக்கம் "கன்சர் கேர்" வைத்தியசாலையில நேற்று முன்தினம் நடந்தது. இதில் ஆளுநர் ரோசய்யா கலந்து கொண்டு பேசியதாவது,

இந்தியாவில் 2 கோடி பேர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 80 இலட்சம் பேர் 2 வயதுக்கும் கீழுள்ள குழந்தைகள் ஆவர். 30 சதவீத புற்றுநோயை ஆரம்ப நிலையில் கண்டறிந்தால் குணப்படுத்தி விடலாம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உணவுப்பழக்க வழக்கம், வாழ்க்கை முறை மாற்றங்களை கொணடு வருவதன் மூலம் புற்று நோயை தடுக்கலாம். மருத்துவர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இணைந்து உடற்பயிற்சியின் முக்கியத்துவம், உடல் எடையை எவ்வாறு பராமரிப்பது, ஆரோக்கிய உணவு பழக்க வழக்கம், புகை பழக்கம், புகையிலை மெல்லுதல் ஆகியவை குறித்த விழிப்புணர்வை மக்களிடத்தில் ஏற்படுத்த வேண்டும்.

புற்றுநோய் சிகிச்சை என்பது சாதாரண ஏழை மக்களுக்கு எட்டாக் கனியாகவே உள்ளது. எனவே தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அறக்கட்டளைகள், நல்ல மனம் படைத்தவர்கள் புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன் வரவேண்டும். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவீரர்கள் புதைக்கப்படுவதில்லை
விதைக்கப்படுகின்றவர்கள்.
~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மாவீரர்கள் உத்தமமானவர்கள் அவர்களை அனைவரும் மதிக்க வேண்டும்

இன்று நவம்பர் 27. தமிழ் மக்களைப் பொறுத்த வரை இன்றைய நாள் ஒரு புனிதமான தினம். உரிமைப் போராட்டத்திற்காக மரணமடைந்த தியாகிகளை நினைவு கூருகின்ற இந்த நாளை இலங்கை அரசும் தென்பகுதி மக்களும் வித்தியாசமான கண் கொண்டு பார்ப்பது துரதிர்ஷ்டவசமானது.

மாவீரர்கள் இலங்கை அரசுக்கு எதிராகவோ அல்லது சிங்கள மக்களுக்கு வீம்பாகவோ போராடவில்லை. அவர்கள் தமிழ் மக்களின் வாழ்வுக்காக- விடுதலைக்காக போராடியவர்கள். எனவே, அவர்களைத் தமிழ் மக்கள் ஒரு போதும் மறக்க மாட்டார்கள்.

இன்னொருவரின் வாழ்வுக்காக தன்னுயிரைத் தியாகம் செய்வதென்பது சாதாரணமானதன்று. அதற்குள் இருக்கக் கூடிய விடுதலை உணர்வு, மண் பற்று, மக்கள் மீது கொண்ட பாசம் என்பன அளவிடற்கரியன. அத்தகையதொரு தியாகத்தை செய்தவர்களே மாவீரர்கள்.

இவர்கள் எல்லா உரிமைகளும் கிடைத்த நிலையில்; ஒரு போராட்டத்தை நடத்தியவர்கள் அல்ல, மாறாக இந்த மண்ணில் காலாகாலமாக தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டனர். அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன. இடையிடையே இனக்கலவரங்களைத் தோற்றுவித்து தமிழ் இனம் அழிக்கப்பட்டது.

இத்தகையதொரு கொடூரமான சூழ்நிலையிலேயே தமிழ் இளைஞர்கள் போராட முற்பட்டனர். தமிழ் இளைஞர்களின் ஆயுதப்போராட்டத்தை இலங்கை அரசுகள் நடுநிலையோடு நோக்கியிருந்தால் மாவீரர்கள் என்பதற்கோ-மாவீரர்தினம் என்பதற்கோ சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கமாட்டாது.

தமிழ் இளைஞர்களின் நியாயமான போராட்டத்தை முறியடிக்க முற்பட்டு, முப்பது ஆண்டு காலயுத்தத்தை இலங்கைத் திருநாடு சந்தித்தது. எத்தனையோ மனித இழப்புகள், சொத்தழிப்புகள், வேதனைகள், துன்ப துயரங்கள் என எங்கும் இருள் மயமாகின.

இறுதியாக 2009 மே மாதத்தில் நடந்த மிகக் கொடூரமான யுத்தத்தில் தமிழ் மக்கள் அழிக்கப்பட்டனர். சிங்கள-தமிழ் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கைகள் அறுந்து போயின.

எத்தனை ஆறுதல்கள் கூறினாலும் போரில் அகப்பட்டவர்கள், உறவுகளை இழந்தவர்கள் ஒரு போதும் இந்தக் கொடூரத்தை மறக்க மாட்டார்கள். யுத்தம் செய்து ஒரு போராட்ட அமைப்பை முறியடித்து விட்டோம் என்று நினைக்கலாம். ஆனால் போரினால் பாதிக்கப்பட்ட இந்த நாட்டின் ஒரு பகுதி மக்கள் ஒரு போதும் தங்களுக்கு நடந்த நிட்டூரத்தை மறக்க மாட்டார்கள் என்பதுடன் அந்தக் கொடூரத்தின் வடுக்களை வரலாறுகளாக்கி அதையே தங்களின் விடியலுக்கான விதையாக்கிக் கொள்வர் என்பது உலக வரலாறும் அனுபவமுமாகும்.

ஒரு விடுதலைப் போராட்டம் முடிவுறுவது என்பது சம்பந்தப்பட்ட இரு தரப்பிற்கும் வெற்றியாக அமைய வேண்டும். அந்த வெற்றி நாட்டுக்கான வெற்றியாக இருக்கும். எனினும் இது பற்றி நம் நாட்டு ஆட்சியாளர்கள் சிந்தித்திலர். அத்தகையதொரு சிந்தனை இருந்திருக்குமாயின் மாவீரர்களை இந்த நாட்டின் போர்வீரர்களாக மாற்றியிருப்பார்கள். தம் இனத்துக்காக உயிர்த்தியாகம் செய்யத் தயாரான வீரர்களை நாட்டின் போர் வீரர்களாக திசை மாற்றும் போது அவர்களிடம் இருக்கக் கூடிய விசுவாசமும் நாட்டுப்பற்றும் எங்கள் நாட்டின் மேன்மைக்கும் ஒழுங்கு கட்டுப்பாட்டிற்கும் பேருதவியாக அமைந்திருக்கும்.

எனினும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண விரும்பாத பேரினவாதம் உரிமை கேட்டவர்களை பயங்கரவாதிகளாகப் பார்த்துக் கொண்டது. இதனால் மிகச் சிறந்த வீரர்களை இந்த நாடு இழந்து போனது. அந்த இழப்புகளை ஈடுசெய்வது முடியாத காரியமாயினும் விட்ட தவறைத் திரும்பத் திரும்ப செய்யாமல் மாவீரர்களுக்குரிய கௌரவத்தை-மரியாதையை வழங்க இலங்கை ஆட்சியாளர்கள் முன்வர வேண்டும்.

துட்டகைமுனுவின் பரம்பரை என்று கூறுவதில் பெருமை உண்டு என தென்பகுதி நினைக்குமாயின் மாவீரர்களுக்கு வணக்கம் செய்வதில் எந்தத் தடையும் தடுப்பும் தேவையில்லை என்பதை அவர்கள் உணர்ந்தாக வேண்டும்.

# மத ரீதியான பதற்றத்தை பொது பல சேனா தூண்டுகிறது

## ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் குற்றச்சாட்டு

(ஜெனிவா)

இலங்கையில் சிறுபான்மை முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ மதத்தினருக்கு எதிராக கடந்த இரண்டு ஆண்டுகளில் பொது பல சேனா அமைப்பு சுமார் 500 தாக்குதல்களை நடத்தியுள்ளதாக ஐ.நாவின் சிறுபான்மையினர் விவகாரங்களுக்கான சிறப்பு அறிக்கையாளர் ரிட்டா ஐசக் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜெனிவாவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமான சிறுபான்மையினர் விவகாரங்களுக்கான அமைப்பின் 7-வது அமர்வில் ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் ரிட்டா ஐசக் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இவ்வறிக்கையில், இலங்கையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக 350 தாக்குதல்களையும், கிறிஸ்தவ மக்களுக்கு எதிராக 150 தாக்குதல்களையும் பொது பல சேனா நடத்தியுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், தீவிரவாதக் கருத்துக்களை பொது பல சேனாவும், ஏனைய குழுக்களும் பரப்புவதாகவும் குற்றம் சுமத்தியுள்ள இந்த அறிக்கை, சிங்கள பௌத்தர்களே மேன்மையானவர்கள் என்று இனவாதக் கருத்துக்கள் மக்கள் மத்தியில் பரப்பப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது.

இன அடிப்படையிலான, மத நம்பிக்கைகளுக்கு எதிரான, முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ மக்கள் மீதான பொது பல சேனா உள்ளிட்ட அமைப்புகள் நடத்தும் தாக்குதலை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்றும் கடந்த ஜுலை மாதம் 2ஆம் திகதி தானும், ஏனைய ஐ.நா சிறப்பு அறிக்கையாளர்களும



இணைந்து வெளியிட்ட அறிக்கையில் கோரிக்கை விடுத்திருந்ததாகவும் இந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, இலங்கை, ஆப்கானிஸ்தான், கொலம்பியா, கொங்கோ ஜனநாயகக் குடியரசு, குவாட்டமாலா, ஈராக், கிர்கிஸ்தான், மியான்மார் மற்றும் சோமாலியா ஆகிய நாடுகளில் சிறுபான்மை பெண்கள் திட்டமிட்ட பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐ.நாவின் அரசியல் மற்றும் மனிதவுரிமைகள் முன்னுரிமைகளுக்கு ஏற்ப ஐ.நா அபிவிருத்தித் திட்டம் மற்றும் மனிதாபிமான பிரிவுகளால் இலங்கையில் முழுமையாக செயற்பட முடியவில்லை என்றும் ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் ரிட்டா ஐசக் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## மாயாதேவி ஆலயத்தில் மகிந்த வழிபாடு

(காத்மண்டு)

சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நேபாளம் சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கௌதம புத்தர் அவதரித்த லும்பினிக்குச் சென்று வழிபட்டுள்ளார்.

காத்மண்டு திரிபுவன் விமான நிலையத்தை நேற்றுமுன்தினம் காலை சென்றடைந்த அவர், அங்கிருந்து சிறப்பு உலங்குவானூர்தி மூலம் லும்பினிக்குச் சென்றார்.

அங்கு புத்தர் பிறந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள மாயாதேவி ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அதையடுத்து அசோகர் தூணில் வழிபாடுகளை முடித்துக் கொண்டு, காத்மண்டு திரும்பியுள்ளார்.

அத்துடன், நேற்று ஆரம்பமான சார்க் தலைவர்களின் உச்சிமாநாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் உள்ளிட்ட சார்க நாடுகளின் தலைவர்களையும் சந்தித்துப் பேசியுள்ளார். (செ-11)

## லோயர்ஸ் கலக்டிவ் மைத்திரிக்கு ஆதரவு

(கொழும்பு)

4000 ற்கும் மேற்பட்ட இலங்கை சட்டத்தரணிகளை உள்ளடக்கிய லோயர்ஸ் கலக்டிவ் என்ற அமைப்பு எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்கவுள்ளதாக அந்த அமைப்பின் ஏற்பாட்டாளர் லால் விஜய நாயக்க தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்ளவுள்ள பிரசார கூட்டங்களில் இந்த அமைப்பை சேர்ந்தவர்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி உரையாற்றுவார்கள் என அவர தெரிவித்துள்ளார்.

மேலும் தேர்தல் பிரசாரங்களின் போது பழிவாங்கப்படுவோரிற்கு எதிராக இந்த அமைப்பை சேர்ந்தவர்கள் ஆஜராவார்கள், முன்னாள் பிரதம நீதியரசரின் பதவிநீக்கத்தை எதிர்த்து ஆரம்பித்த பிரசாரத்தையே நாங்கள் முன்னெடுக்கிறோம், சட்டத்தின் ஆட்சியையும், நீதித்துறையின் சுதந்திரத்தையும் மீண்டும் ஏற்படுத்த விரும்புகின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி
பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சி-02
நாளை வெளிவரும்
(ஆ-ர்)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

"பூட்டன் நாட்டிய பனைமரம் காய்க்கிறது
பாட்டன் நட்ட பலாமரம் பூக்கிறது
வெட்டி எரித்ததன்றி நீயென்ன நிழல் வைத்தாய்
மாசடையாச் சூழல் சாவடையா வாழல்"

~கவிஞர் புதுவை இரத்தினதுரை

## சத்திய தரிசனம்



### உற்சாகமாக வேலை செய்


❖ எண்ணம், சொல், செயல் மூன்றும் ஒன்றுக்கொன்று முரண்பாடு இல்லாமல் ஒன்றாக இணைய வேண்டும்.

❖ ஆடம்பரம் என்னும் அரக்க குணம் இல்லாமல் வாழுங்கள். எளிமையில் தான் இனிமை இருக்கிறது.

❖ புகழ், இகழ் இரண்டையும் சமமாகக் கருதுங்கள். மனம் அமைதி யுடன இருக்க இதுவே சிறந்த வழி.

❖ பிறருடைய அந்தரங்க விஷயங்களில் குறுக்கிடாமல் இருப்பதே மேலான பண்பு.

❖ சோர்வை தள்ளிவிட்டு, எப்போதும் உற்சாகத்துடன் ஏதாவது ஒரு வேலையில் ஈடுபடுங்கள்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### கோலம் போடுதல்

✦ வீட்டு வெளிமுற்றம், படிக்கட்டுக்கள், கூடம், உள்முற்றம், திண்ணை நடை, துளசிமாடம், பசுக்கூட்டம், பூஜை அறை முதலிய இடங்களில் கோலம் போடவேண்டும்.

✦ பெண்கள் குனிந்து நிமிர்ந்து கோலமிடுவதால் அவர்களுடைய கர்ப்பப்பை வலுப்பெறும். குண்டலினி சக்திக்கு ஊக்கம் ஏற்படும். கைகள் வளைந்து நெளிவது கைகளுக்கு நல்ல பயிற்சியைக் கொடுக்கும்.

✦ புள்ளிகளும் கோடுகளும் நல்ல நினைவாற்றலையும் கற்பனைச் சக்தியையும் பெருக்கும். கோலம் பலவகை யந்திர உருவ அமைப்புகளுடன் போடப்படுகிறது. இதனால் வீட்டிற்கு வரக்கூடாத சக்திகள் வராது.

✦ கல்மாவைக்கொண்டு கோலம் போடக்கூடாது. அரிசி மாவினாலே தான் கோலமிடவேண்டும்.

✦ கோலமிடுவதை வேலையாட்கள் செய்யக்கூடாது. வீட்டுப்பொண்கள் தான் செய்யவேண்டும்.

✦ ஒரு கோட்டுக் கோலமோ, மூன்று இழைக்கோலமோ போடக்கூடாது. இரட்டை இழைக்கோலம்தான் போடவேண்டும்.

✦ தெற்கு பார்த்து நின்று கோலம் போடக்கூடாது. போடும் கோடும் தெற்கில் முடியக்கூடாது. கோலம் கவர்ச்சியாகவும் அழகாகவும் அமைவது நல்ல சகுனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாடுவாரா கிளார்க்; சந்தேகத்தில் அவுஸ்திரேலியா



அவுஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்திய அணி நான்கு டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இந்தத் தொடரின் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் அடுத்த மாதம் 4ஆம் திகதி தொடங்குகிறது.

முதல் டெஸ்ட் போட்டிக்கான அவுஸ்திரேலிய அணியில் இடம் பிடித்துள்ள அணித்தலைவர் மைகேல் கிளார்க் உடல் தகுதியை பொறுத்தே ஆடும் லெவனில் இடம் பெறுவார் என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் ஏற்கனவே தெரிவித்து இருந்தது.

தசைப்பிடிப்பால் அவதிப்பட்டு வரும் மைக்கேல் கிளார்க் 28ஆம் திகதி தொடங்கும் 2 நாள் பயிற்சிப் போட்டியில் விளையாடி உடல் தகுதியை நிரூபிப்பாரா என்பதில் சந்தேகம் உள்ளது.

மைக்கேல் கிளார்க்கின் உடல் தகுதி விடயத்தில் தெரிவாளர்களும், அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரியமும் குழப்பத்தில் உள்ளது.

மைக்கேல் கிளார்க் முதல் டெஸ்டில் விளையாடுவது குறித்த தனது நிலைப்பாட்டை உறுதிப படுத்த வேண்டும் என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரிய தலைமை நிர்வாகி ஜேம்ஸ் சுதர்லேண்ட் தெரிவித்துள்ளார்.

முதல் டெஸ்டில் மைக்கேல் கிளார்க் ஆடமாட்டார் என்று இது வரை அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படாவிட்டாலும், மைக்கேல் கிளார்க் முதல் டெஸ்டில் களம் காண்பது சந்தேகம் தான். (க)

# குத்துச்சண்டை வீராங்கனை சரிதாவுக்கு ஆதரவாக களம் இறங்கும் சச்சின்



இந்திய குத்துச்சண்டை வீராங்கனை சரிதா தேவிக்கு வாழ்நாள் தடை விதிக்க சர்வதேச குத்துச் சண்டை சங்கம் நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், இதுபற்றி ஆலோசனை நடத்துவதற்காக நட்சத்திர கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர், விளையாட்டுத்துறை மந்திரி சர்பானந்த சோனோவலை சந்திக்க உள்ளார்.

தென்கொரியாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியின் போது அரையிறுதியில் தோல்வியடைந்த சரிதா தேவி தனது பதக்கத்தை வாங்க மறுத்தார். இதனால், அவர் சர்வதேச போட்டிகளில் இருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார். தொடர்ந்து விசாரணை நடத்திய சர்வதேச குத்துச்சண்டை சங்கம், சரிதா தேவிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க முடிவு செய்துள்ளது.

ஆனால், திறமையான வீராங்கனையான சரிதா தேவியின் குத்துச் சண்டை வாழ்க்கை முடிந்து விடக்கூடாது என்பதால் அவரை தண்டனையில் இருந்து காப்பாற்ற இந்திய அதிகாரிகள் முயற்சி எடுத்து வருகின்றனர்.



தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்துள்ள சரிதா தேவியை மன்னித்து, போட்டிகளில் பங்கேற்க செய்ய விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநிலங்களவை உறுப்பினரான சச்சின் டெண்டுல்கர் கடந்த வாரம் விளையாட்டுத்துறை மந்திரிக்கு கடிதம் எழுதியிருந்தார். இந்நிலையில், மந்திரியை நேரில் சந்தித்து இது பற்றி ஆலோசனை நடத்த உள்ளார் சச்சின். (க)



பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் இடம்பெற்ற மாகாணமட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தின் 15 வயதுப்பிரிவு அணியினர் இரண்டாம் இடத்தினை பெற்றுக்கொண்டனர் .அவ் அணியினரை படத்தில் காணலாம். (க-23)

# இன்றைய போட்டி

(மானிப்பாய்)

மாகாண மட்ட ஆளுநர் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் வடமராட்சி லீக்கிற்கான போட்டிகள் இடம்பெறுகின்றன.

இப் போட்டிகள் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறுகின்றது.

இன்று மாலை 3 மணிக்கு இடம் பெறவுள்ள லீக் போட்டியொன்றில் பிரிவு ஏ ல் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து டயமண்ட்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் செய்யும் கென்யா கிரிக்கெட் அணி

PAKISTAN CRICKET BOARD

கென்யா கிரிக்கெட் அணி அடுத்தமாதம் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து 5 ஒருநாள் போட்டிகளில் விளையாட இருக்கிறது. டிசம்பர் 11 ஆம் திகதி கென்யா அணி பாகிஸ்தான் வந்து சேரும். அதன்பின் 13ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை 5 ஒருநாள் போட்டிகள் நடைபெற இருக்கிறது. அதன் பின் 21ஆம் திகதி கென்யா அணி தாயகம் திரும்பும். 5 போட்டிகளும் லாகூரில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கென்யா அணி பாகிஸ்தானில் முன்னதாகவே சுற்றுப் பயணம் செய்ய முதலில் முடிவு செய்யப் பட்டது.

ஆனால், பாகிஸ்தான் அரசு அனுமதி கொடுக்காததால் தடைப் பட்டு வந்த இந்த தொடர் அடுத்த மாதம் நடக்க இருக்கிறது.

CRICKET KENYA

கடந்த 2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை அணி பாகிஸ் தானில் விளையாடி வந்தது. ஒரு போட்டியில் பங்கேற்பதற்காக மைதானத்திற்கு பஸ்சில் செல்லும் போது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். அதன்பின் எந்த அணியும் பாகிஸ்தான் சுற்றுப்பயணம் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்குமுன் அயர்லாந்து அணியை பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் அழைத்தது. ஆனால், ஜ/ன் மாதம் நடந்த தீவிரவாத தாக்குதல் காரணம் காட்டி அந்த அணி மறுத்து விட்டது. (க)

# முதலிடத்தினை பிடிப்பதே எனது இலக்கு சாய்னா நேவால்



முதலாமிடத்தைப் பெறுவதே இலக்கு என இந்திய பட்மிண்டன் வீராங்கனை சாய்னா நேவால் அளித்த பேட்டியில் தெரிவித்தார். 'உலக தரவரிசையில் 9ஆவது இடத்தில் இருந்த நான், 3 பட்டங்கள் வென்று 4ஆவது இடத்திற்கு முன்னேறியது மகிழ்ச்சி அளிக்கிறது. அடுத்த மாதம் நடக்கும் டுபாய் சுப்பர் சீரிஸ் போட்டியிலும் சிறப்பாக செயற்படுவேன் என்று நம்புகிறேன். உலக தரவரிசையில் முதலிடத்தை பிடிப்பதே எனது இலக்கு. அதற்காக கடினமாக உழைத்து கொண்டிருக்கிறேன்' என்றார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர்களை...

உம்மை எம் இதயக் கோவிலில் வணங்கிடுவோம் ஈழம் வென்றிடச் சூளுரைப்போம் என எழுதப்பட்ட வாசகங்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்கள் யாழ்ப்பாண பாடசாலைகளில் பரவலாக வீசப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் நாள் நிகழ்வுகள் இன்றையதினம் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையிலேயே இவ்வாறு துண்டுப்பிரசுரங்கள் வீசப்பட்டுள்ளன.

நவம்பர் மாதம் 27-ம் திகதி மாவீரர்கள் தினம் அனுஷ்டிக்கப்படுகின்ற நிலையில் வடக்கில் இந்நிகழ்ச்சிகள் நடைபெற்றுவிடக் கூடாது என்கின்ற நிலையில் பொலிஸாரும் இராணுவமும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

புலனாய்வுப்பிரிவினர் ஒவ்வொரு வீதிகளிலும் நிலைநிறுத்தப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறாக பாதுகாப்பு கெடுபிடிகளிற்கு மத்தியிலும் யாழிலுள்ள சில பாடசாலைகளிலும் மற்றும் சில வீதிகளிலும் குறிப்பாக சந்திகளிலும் இத்துண்டுப்பிரசுரங்கள் பரவலாக வீசப்பட்டுள்ளன.

அத்துண்டுப்பிரசுரங்களில் உயிரை விதையாக்கி உதிரத்தை உரமாக்கி கனவு தேசத்தைக் கருவாக்கி ஓய்ந்த கரும்புலிகளே! மாவீரர்களே! உங்களின் கனவு நிஜமாகும் தமிழரின் நாடு உருவாகும் என எழுதப்பட்டுள்ளது.

மாவீரர் நாள் நவம்பர் 27 வீரவணக்கம் என தலைப்பிடப்பட்டு கார்த்திகைப் பூக்கள் மற்றும் மாவீரர் தின சின்னங்கள் என்பனவும் பெண் புலிப் போராளியொருவர் துப்பாக்கி [illegible] குறிபார்க்கும் படங்கள் என்பனவும் பொறிக்கப்பட்டு இறுதியில் தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் என எழுதப்பட்டுள்ளது. (செ-4)

# மாவீரர்...

[illegible] பொன்னாலை வீதி என பிரதான [illegible] உட்பட அனைத்து வீதிகளும் இராணுவ ரோந்துகள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு இடங்களிலும் ஆகக்குறைந்தது இரு புலனாய்வாளர்களாவது நிலை நிறுத்தப்பட்டு ஒரு மணி நேரத்திற்கு ஒரு தடவை இராணுவ ரோந்து சுழற்றி முறையில் இடம் பெற்று வருகின்றன.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியிலுள்ள கட்சி அலுவலகங்கள் குறிப்பாக பிரதான வீதியில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய ம[illegible] முன்னணி அலுவலகம், மாட்டீன் வீதியிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலுவலகம், கிளிநொச்சியிலுள்ள அறிவகம் உள்ளிட்ட கட்சி அலுவலகங்கள் முன்பாக புலனாய்வுப் பிரிவினர்கள் மற்றும் இராணுவத்தினர் நிலை நிறுத்தப்பட்டு தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

யாழில் உள்ள ஆலயங்களிற்கு சென்ற இராணுவத்தினர் ஆலயங்களில் மணி அடிக்க வேண்டாம், தீபம் காட்ட வேண்டாம் என பூசகர்களிற்கு கூறியுள்ளனர்.

நித்திய பூஜைகளினை செய்வதற்கு ஆலயங்களிற்கு சென்ற பூசகர்களினை இராணுவத்தினர் திருப்பியனுப்பி சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

நேற்றையதினம் பிள்ளையார் சதுர்த்தி [illegible]ன்பதனால் பிள்ளையார் ஆலயங்களில் விசேட வழிபாடுகளும் அன்னதான நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இவற்றினையும் இராணுவத்தினர் தடை செய்தமையினால் சமைத்த உணவுகளும் ஆலயங்களில் தேங்கிக் கிடந்தன.

சாவகச்சேரி, பளை, கச்சாய் ஆகிய இடங்களிலுள்ள விநாயர் ஆலயங்களிற்கே இந்த கதி ஏற்பட்டுள்ளது.

பெரிய ஆலயங்கள் அனைத்தும் இராணுவ முகாம்கள் போல் ஆலயங்களினை சுற்றி இராணுவத்தினர் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை சித்தன்கேணி, வடலியடைப்புப் பகுதியில் மரண வீடு ஒன்று நேற்று நடைபெற்றது. இறந்தவரை அடக்கம் செய்வதற்கு வீதி வழியாக எடுத்துச் செல்லும் போது வெடி கொளுத்திக் கொண்டு சென்றனர். அதன் சத்தத்தினை கேட்ட இராணுவம் சம்பவ இடத்திற்கு ஓடி வந்தனர். வரும் போது தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்தநாளை கொண்டாடுகின்றார்கள் என்று சிந்தனையில் வந்தவர்கள் இறந்தவரின் உடல் அடக்கம் செய்வதற்கு எடுத்துச் சென்றதைக் கண்ட பின்பே அமைதியடைந்தனர்.

மேலும் நேற்று 26-ம் திகதி தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரனின் பிறந்த தினத்தை வடக்கு மக்கள் கொண்டாடிவிடக் கூடாது என்ற நோக்கில் விஸ்தரிக்கப்பட்ட இராணுவ பாதுகாப்பு நிலைமைகள் மாவீரர் தினமான இன்று மேலும் அதிகரித்த நிலையில் காணப்பட வாய்ப்புள்ளது.

இதனால் வடக்கு முழுவதும் இராணுவ அச்சம் கலந்த பதற்ற நிலைமை நீடித்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

# இறுதி போர்க்...

யாளர் சையிட் அல் ஹுசேன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சு அனுப்பிய கடிதம் ஒன்றுக்கு பதிலளித்து அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விசாரணையின் முக்கியமான பிரச்சினைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர பணியகத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று இக்கடிதத்தில் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன், இந்த விசாரணைக்காக சாட்சியங்களை சமர்ப்பிக்கும் கால எல்லை முடிந்து விட்டது என்றும், அதற்கான மின்னஞ்சல் முகவரிகள் மூடப்பட்டு விட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவால் பணிக்கப்பட்ட ஆணைக்கமைய நடுநிலையுடனும், நேர்மையுடனும், சுதந்திரமாகவும் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐ.நா விசாரணைகள் நிபுணத்துவத் திறனின்றி மேற்கொள்ளப்படுவதாகவும், முறையற்ற முறையில் சாட்சியங்கள் பெறப்படுவதாகவும் இலங்கை அரசாங்கம் முன்னர் குற்றம்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(செ-11)

# யாழ்...

வாயில்களிலும் புலனாய்வுப் பிரிவினர் நிலை கொண்டிருந்தனர்.

பல்கலைக்கழகத்திற்குள் உட்செல்வோரும் உள்ளிருந்து வெளியே வருவோரும் வழி மறிக்கப்பட்டு கடும் சோதனைகளிற்கு இராணுவத்தினரால் உட்படுத்தப்பட்டிருந்தனர்.

பல்கலைக்கழக நடவடிக்கைகள் அனைத்தினையும் புலனாய்வுப் பிரிவினர் 24 மணி நேரம் கண்காணித்து வருகின்றனர்.

இராணுவ மற்றும் புலனாய்வுப் பிரிவினரின் கெடுபிடிகளினால் யாழ்.பல்கலைக் கழக சூழலில் பதற்ற நிலையோடு கூடிய அச்ச நிலை நீடித்திருந்தது.

இன்றையதினம் மாவீரர்தினம் என்பதனால் யாழ்.பல்கலையில் நேற்று இரவு பவல் வாகனத்தில் இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். (செ-4)

# பல இடங்களில்...

டன் வழமைக்கு மாறாக கடலலைகள் அதிகளவில் ஆர்ப்பரிப்பதால் கடற்றொழிலாளர்கள் கடலுக்கு செல்வதை தவிர்த்துள்ளனர்.

இதன் காரணமாக முல்லைத்தீவில் மீன்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளது.

மட்டக்களப்பில் பெய்து வரும் மழையினால் மாவட்டத்தின் பல பகுதிகளிலுள்ள வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

நேற்றுக் காலை முதல் தொடர்ச்சியாக பெய்து வரும் அடை மழையினால் பரீட்சைக்கு செல்லும் மாணவர்களும் பெற்றோரும் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மழை காரணமாக மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரும்போக நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான மழையின் காரணமாக படுவான்கரைப் பிரதேசம் பாதிக்கப்பட்டு ள்ளது.

பட்டிப்பளை பிரதேச செயலகப்பிரிவின் 40 வட்டை, தாந்தாமலை, மாவடிமுன்மாரி போன்ற வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளில் வானிலை மப்பும் மந்தாரமுமாக காணப்படுகின்றது.

நிலவும் சீரற்ற வானிலையினால் போக்குவரத்தை மேற்கொள்வதில் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அம்பாறையின் பிரதான வீதிகளிலுள்ள வடிகான்களில் நீர் நிரம்பி காணப்படுவதால் மக்கள் சுகாதாரப் பிரச்சினைகளையும் எதிர்நோக்கியுள்ளனர்.

இதேவேளை அம்பாறையில் பெய்து வரும் அடை மழையினால் நிரம்பிய அக்கரைப்பற்று முகத்துவார நீர் கடலுக்குள் வெளியேற்றப்பட்டு வருகின்றது.

அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு பிரதேசங்களில் தாழ் நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

புத்தளம் மாவட்டத்திலும் நேற்று காலை முதல் குளிரான காலநிலையுடன் மழை பெய்து வருகின்றது.

மாவட்டத்தின் பல தாழ்நிலப் பகுதிகளிலும் வெள்ளம் தேங்கியுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் பெய்து வரும் பலத்த மழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கிண்ணியா குறிஞ்சாக்கேணி பாலத்தை மேவி மழை நீர் பாய்வதால் பாலத்தின் ஊடாக போக்குவரத்தை மேற கொள்வதில் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதேவேளை நாட்டைச் சூழவுள்ள கடற் பகுதிகள் கொந்தளிப்புடன் காணப்படும் எனவும் இந்த சந்தர்ப்பத்தில் காற்றின் வேகம் 70 கிமீ வரை வலுவடையக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய வாய்ப்புள்ளதால் மக்களை அவதானமாக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது. (செ-11)

# இலங்கை அணி வெற்றி



மெய்ன் அலி, ரவி போபாரா ஆகியோரின் துடுப்பாட்டத்தை துருப்புச்சீட்டாக வைத்து இங்கிலாந்து அணி இறுதிவரை போராடிய போதிலும் இறுதியில் இலங்கை அணி 25 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 7 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது.

இதன்படி இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி நேற்று கொழும்பு ஆர். பிரேமதாஸ அரங்கில் நடைபெற்றது.

போட்டியின்நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத் தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத் தாடிய இலங்கை அணிக்கு,

டில்சான் - குசல் பெரேரா ஆரம்பித்து வைத்த அதிரடியான ஆரம்ப இணைப் பாட்டத்தை (120), பின்வரிசை வீரரான ஜீவன் மென்டிஸ் முடித்து வைக்க இலங்கை அணி 50 ஓவர்களின் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 317 ஓட்டங்களை குவித்தது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பில் டில்சான் 88, குசல் பெரேரா 59, ஜெயவர்த்தன 55, இறுதியில் வாணவேடிக்கை நிகழ்த்திய ஜீவன் மென்டிஸ் (14 பந்துகள் 2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள்) 30 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பில் ட்ரெட்வெல், ஸ்ரோக்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

318 ஓட்டங்கள் என்ற கடின வெற்றியிலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு அணித் தலைவர் குக் - மெய்ன் அலி சிறப்பான (51)அடித்தளமிட்டது. அவர்களின் சிறப்பான அடித்தளத்தை தொடர்ந்து வந்த வீரர்கள் பயன்படுத்தாத போதிலும் ரவி போபாரா கைகொடுத்தார். எனினும் அவரால் இங்கிலாந்து அணியை வெற்றிப்பாதையை நோக்கிய பயணிக்க வைக்க முடியவில்லை.

இறுதியில் இங்கிலாந்து அணியால் 47.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 292 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பில் ஆரம்ப வீரர் மெய்ன் அலி 119, போபாரா 65, இயன் பெல் 35 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் திஸார பெரேரா 3, அஜந்த மென்டிஸ், ஹேரத் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக இலங்கை அணியின் டில்சான் தெரிவானார்.

இரு அணிகளுக்கும் இடையிலான 2 ஆவது ஒருநாள் போட்டி நாளை மறுதினம் இதே மைதானத்தில் ஆரம்பமாகிறது. (கு)

# பாருக் எம்.பி...

படலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேன நேற்று காலை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகோத்தாவுக்கு சென்று கட்சியின் தலைவர்களுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

அத்துடன், சிறிகோத்தாவில், அமைக்கப்பட்டுள்ள பொதுவேட்பாளரின் தேர்தல் பரப்புரைக்கான மத்திய நிலையத்தையும் மைத்திரிபால சிறிசேன திறந்து வைத்துள்ளார்.(செ-11)

# உதய...

கொழும்பு கட்டளைக் தலைமையகத்திற்கு திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இதனை பலாலி இராணுவ ஊடகபிரிவு பொறுப்பதிகாரி மேஜர் மல்லவராச்சி வலம்புரிக்கு உறுதிப்படுத்தியுள்ளார்.

யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதியாக உதய பெரேரா கடந்த ஜனவரி மாதம் பொறுபேற்றிருந்த நிலையில் பொறுப்பேற்று ஒரு வருடம் கூட பூர்த்தியாகாத நிலையில் திடீரென அவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட கட்டளைத்தளபதியாக இருந்த உதய பெரேரா யாழ்.மாவட்டத்திற்கு இடம்மாற்றம் பெற்று தற்போது கொழும்பிற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடத்திற்கு இஸ்ரேலுக்கான இலங்கை துணைத்தூதராக உள்ள ஜகத் அல்விஷ் நியமிக்கப்படலாம் என நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவின் நட்பு பெரி...

இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்த பின்னர் த ஹிந்துவுக்கு வழங்கிய செவ்வியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

மோடி ஆட்சிக்கு வந்த பின்னர் இலங்கையுடன் திறந்த வெளிநாட்டுக் கொள்கையை கடைப்பிடித்து வருகிறார். இதற்கு மதிப்பளிக்கும் வகையிலேயே மீனவர் விடுதலை அமைநதது.

இந்திய அரசாங்கத்தின் கருத்துப்படி தமிழக மீனவர்கள் அப்பாவிகள் என்ற அடிப்படையிலேயே அவர்களை இந்திய சிறைக்கு மாற்றும் வகையிலான கைதி பரிமாற்றததை மேற்கொள்ளாமல் அவர்களை விடுவித்துள்ளோம்

இலங்கையின் நீதித்துறையின் தீர்ப்புக்கு இணங்க குறித்த ஐந்து பேரும் குற்றவாளிகள். எனினும் இதனை விட இந்தியாவுடனான உறவு பெரியது என்பதற்காகவே மீனவர்கள் வடுவிக்கப்பட்டுள்ளனர் என மகிந்த குறிப்பிட்டார்.

மகிந்த ராஜபக்ஷ, இந்திய பிரதமர் மோடியை காத்மண்டுவில் உள்ள சோலாட்டி ஹோட்டலில் சந்தித்து பேசினார். நேற்று மாலை இடம்பெற்ற இந்த சந்திப்பு சுமார் அரை மணித்தியாலங்களாக தொடர்ந்தது.

இதன் போது கடல் எல்லை பாதுகாப்பு, சீன நீர்மூழ்கிக் கப்பலின் கொழும்பு வருகை போன்ற விடயங்களை மகிந்தவின் கவனத்துக்கு கொண்டு வந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை வை.கோபாலசாமி விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்தநாளை கொண்டாடியமை குறித்து த ஹிந்து, மகிந்த ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்பிய போது அவர் ஒரு இந்திய தலைவர் என்று சொல்லும் போது நான் எதனை சொல்வது? என்று மகிந்த திருப்பிக் கேட்டுள்ளார்.

இதற்கிடையில் மோடியும், மகிந்தவும் நேற்றுக் காலை சார்க் ஆரம்ப வைபவ உரையின் போது தமக்கிடையிலான கருத்துக்களை வெளியிட்டனர்.

இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் ஒன்றுக்குச் செல்கிறார். அவருக்கு வாழ்த்துக்கூறுவதாக மோடி குறிப்பிட்டார்.

தாம் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவானால் மோடியை இலங்கைக்கு அழைக்கப் போவதாக மகிந்த த ஹிந்துவிடம் தெரிவித்துள்ளார். (செ-11)

## பாருக் எம்.பி...

அமைச்சர் றிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்பாளராக இருந்த இவர், எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

இவருக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் பதவி வழங்கப் 23ஆம் பக்கம் பார்க்க....

## பிரபாகரனை...

ஏனைய சில நாடு களும் போரை முடிவுக்கு கொண்டுவர முயற்சித்த போதும் அது பயன்தரவில்லை என்று குறிப்பிட்டார். கொழும்பில் செய்தியாளர்கள் மத்தியில் அவர் இந்தக்கருத்தை வெளியிட்டார்.

போரை நிறுத்துமாறு ஐக்கிய நாடுகள், நோர்வே மற்றும் பிரித்தானிய அரசாங்கங்களின் ஊடாகவும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். எனினும் அதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இடம் தரவில்லை.

இதனையடுத்தே அமெரிக்கா ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக் குழுவை பயன்படுத்தி இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணையை முன்னெடுத்துள்ளது என்று அமைச்சர் குறிப்பிட்டார். இதன் கீழேயே இன்று ஐரோப்பிய நாடுகளில் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு கிழக்கு அமைதியாக இருக்கும் போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாட்டை பிரிக்க முயற்சிக்கிறது என்றும் அமைச்சர் குற்றம் சுமத்தினார்.

அமைச்சர்கள் தொடர்பில் கோவைகளை கொண்டிருப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளமை தொடர்பில் கருத்துரைத்த அவர், அமைச்சர்களின் கோவைகளை ஜனாதிபதி தம்வசம் வைத்திருப்பது வழமைக்கு மாறானது அல்ல என்று குறிப்பிட்டார். (செ-11)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



கலாபூசணம்
மாரிமுத்து சீவரட்ணம்
(முதலமைச்சர் விருது 2014)

கோண்டாவில் வாகீஸ்வரியைச் சேர்ந்த அமரர்கள் சின்னப்பு மாரிமுத்து, இலட்சுமி தம்பதியினரின் மூத்த மகனாகப் பிறந்த இவர் வாகீஸ்வரி நாடக மன்றம் மூலமாக நாடக உலகில் கால்பதித்தார். 1968 ஆம் ஆண்டு கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயணா சனசமூகநிலையத்தால் கலையரசன் எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்,

2001 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாணசபையால் கலைஞான கேசரி எனும் பட்டமும் 2004 ஆம் ஆண்டு யாழ் மாவட்ட பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தினால் பூதத்தம்பி இசை நாடகத்திற்காக சிறந்த நடிகனாக தெரிவுசெய்யப்பட்டு மரபு கலைச்சுடர் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 2007 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தினால் கலாபூசணம் விருது வழங்கப்பட்டது.



2014 ஆம் ஆண்டு வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு இளைஞர் விவகார அமைச்சினால் முதலமைச்சர் விருது வழங்கப்பட்டமையினைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்:
கோண்டாவில் வடக்கு நண்பர்கள்.
(8445)



வேலைவாய்ப்பு
மலேசிய நாட்டுக்கான
உடனடியான வேலைவாய்ப்பு
பணிப் பெண்கள்
தொடர்பு 0777265241
(8440)



வாசல் திறக்கிறது கனடா!
2015இல் 3 இலட்சம் பேருக்கு குடியுரிமை
Express Entry Visa மூலம் 6 மாதத்தில் பயணம்
கனேடிய குடிவரவுத் திணைக்களத்தின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் மூலம் நேரடி உத்தரவாதமான சேவை
பட்டத்துடன் 2 வருட தொழில் அனுபவம்
க.பொ.த.(உ/த)வில் 3 பாட சித்தி
உள்ளவர்கள் தொழிலுடன் குடியுரிமை பெறலாம்
மேலதிக விபரங்களுக்கு பாருங்கள்
www.sikaram.lk
rush@sikaram.lk என்ற மின்னஞ்சலுக்கு சுயவிபரக்கோவையை அனுப்பி உங்கள் தகைமையை அறிந்துகொள்ளுங்கள்
உங்கள் நம்பிக்கையின் சிகரம் (C-9188)
SIKARAM
Education Abroad & Visa Solutions
Sikaram (Pvt) Ltd.,
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி,
யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0773616798 / 021 222 00 11



புதிய கட்டடத் திறப்பு விழா
வாழ்த்துக்கள்
மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

புதிய கட்டடத்தில் 27.11.2014 இன்று காலை 9.27 மணியளவில் கால்பதிக்கும் யாழ். மோட்டார் திணைக்களம் தனது மக்கள் சேவையினை வினைத்திறனுடன் சிறப்பாகச் செய்ய எமது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்



விழா சிறப்புற
வாழ்த்துவோர்:
கிருபா லேணர்ஸ்
(அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதி பயிற்சிப் பாடசாலை)
கிருபா லேணர்ஸ் உரிமையாளர்களும் மற்றும் ஊழியர்களும்
பிரதான கிளை:
இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 4353, 021 492 3200, 0777225292

ஏனைய கிளைகள்: சுன்னாகம் - 021 224 2022, 071 454 6956
பருத்தித்துறை - 021 492 3201, 071 454 6958
நெல்லியடி - 021 300 6550, 071 454 6957
சாவகச்சேரி - 021 492 3202, 021 227 0700
கிளிநொச்சி - 021 228 5505, 071 454 6955
வவுனியா - 024 222 7777, 0777 100 444
விசுவமடு - 021 320 1515, 071 454 6955
மன்னார் - 071 988 7699, 077 847 2732
(C-9188)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org